அதிகாரம் 10

# கிறிஸ்துவின் விசேஷித்த பலியும் தேவனிடம் சேருவதும்

## கிறிஸ்துவுடைய பலியின் விசேஷித்த தன்மை (10:1-18)

அதிகாரம் 10:1-18 ஆகிய இந்த வசனங்கள், "கிறிஸ்துவுடைய பிரதான ஆசாரியத்துவத்தின் (4:14-10:18)" முக்கியப் பகுதியை நிறைவு செய்கிறது. பிரதான ஆசாரியத்துவத்திற்கான ஒவ்வொரு தகுதியையும் நமது இரட்சகர் கொண்டிருந்தார் அவர் ஆரோனுக்கும் பழைய உடன்படிக்கையின் கீழிருந்த எந்த ஆசாரியனுக்கும் மேலானவராக இருந்தார்.

### பலிகளின் நிலை (10:1-10)

பழைய உடன்படிக்கையின் கீழ் மிருக பலிகளின் தகுதியின்மை 10:1-10-ல் வலியுறுத்தப்படுகிறது. 1 முதல் 4 வரையான வசனங்களில் மீண்டும் இடம் பெறுவதன் மூலமும், வசனங்கள் 5-ல் இருந்து 9முதல் பகுதி வரையில் நேரடி வேதவசன அறிக்கையின் மூலமும், வசனங்கள் 9 பின் பகுதி மற்றும் 10-ல் முந்தைய ஒழுங்குமுறையை மாற்றுவதற்கான விளக்கத்தின் மூலமும் இந்தக் கருத்துத் தெளிவுபடுத்தப்படுகிறது. பழைய நிழலை விடுத்து உண்மையானவைகளுடன் வழிபட வேண்டும் என்பது இந்த அதிகாரத்தின் அறிவுரையாக இருக்கிறது. அப்படியென்றால், பழைய உடன்படிக்கை பலிகளை நாம் கருத்தில் கொள்ள வேண்டுமா?

அவைகள் நிழலாய் இருந்தன (10:1, 2)

**1இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய்மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல்**

**செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது. [2]பூரணப்படுத்துமானால், ஆராதனை செய்கிறவர்கள் ஒருதரம் சுத்தமாக்கப்பட்டபின்பு, இன்னும் பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர்களுக்கு இல்லாதிருப்பதினால், அந்தப்பலிகளைச் செலுத்துகிறது நிறுத்தப்படுமல்லவா?**

**வசனம் 1.** ஆசிரியர் **நியாயப்பிரமாணம் வரப்போகிற நன்மைகளின் நிழலாய்** (σκιά, *ஸ்கியா*) இருக்கிறதாகக் குறிப்பிடுகிறார். "மிருக பலிகளைப் பற்றிய கடைசி வார்த்தையாக"[1] இந்த வசனங்கள் இருக்கின்றன. **இப்படியிருக்க** என்ற வார்த்தை, 8:1-ல் தொடங்கியதிலிருந்து ஒரு புரிதலை அறிவுறுத்துகிறது.[2] இப்போது ஒரு சிறந்த உடன்படிக்கையையும், ஒரு சிறந்த பலியையும், சிறந்த பரிசுத்த ஸ்தலத்தையும் நாம் கொண்டிருக்கிறோம். இங்கு தொடங்கி, அந்தக் கருத்தாக்கங்கள், என்ன பொருள் கொள்கிறது என்னும் விரிவாக்கத்தை மேலும் நாம் கொண்டிருக்கிறோம்.

பழைய உடன்படிக்கையானது கிறிஸ்துவின் இராஜியத்தில் புதிய உடன்படிக்கையின் மேன்மையை விளக்கும் மாதிரியாக இருக்கிறது என்பதே நிழல் என்பதன் அர்த்தம் ஆகும். இந்த வார்த்தை "நிழல்" என்றும் "முன் நிழல்" என்றும் பயன்படுத்தப்பட்டுள்ளது.[3] பழைய **பலிகள்** ஒரு முன் நிழலாகச் செயல்பட்டு, கிறிஸ்துவில் வரும் குறிப்பிட்ட (அடையாள) காரியங்களைக் குறித்தது. (இந்தக் காரியங்கள் *இப்பொழுது பரிசுத்தவான்களிடம் வந்துள்ளன*, 9:11-ல் விவாதத்தைக் காண்க.) "ஒரு நிழல் … உறுதியான உண்மையைத் தவிர்த்து ஏற்படுவது அல்ல."[4] ஒருவர் மரத்தின் நிழலில் இருந்து ஆப்பிளை பறிப்பதில்லை, ஆனால் உண்மையான ஆப்பிள் மரத்திலிருந்து மட்டும் தான் பறிக்கிறார். நியாயப்பிரமாணத்திற்குத் திரும்புவது "ஒருவர் ஒரு நீரோடையை ஒரு பாலத்தின் நிழலின் மேல் கடக்க … முயற்சிப்பதுடன் ஒப்பிடத்தக்கது."[5] "நிழல்" நமக்குத் தேவையான மற்றும் அதிகம் விருப்பமான விஷயங்களாகிய இரட்சிப்பையும் அதற்கான உறுதியையும் உருவாக்க முடியாது.

அடுத்ததாக, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் **பொருளாயிராமல்** என்று எழுத்தாளன் கூறினான். "பொருள் (வடிவம்)" (εἰκών, *எய்கோன்*), "தற்சுரூபம்" என்ற பொருளுடன் இந்த வசனத்தில், "நிழல்" என்ற வார்த்தை கூறுவதைவிட அதிகமாக, முற்றிலும் வேறுபட்ட ஏதோ ஒன்றைக் கூறுகிறது. ஒரு "வடிவம்" என்பது உண்மைக்குச் சமமான ஒரு ஒத்த பிரதி. கொலோசெயர் 1:15-ல் பவுல் பொருத்தமான விதமாகக் கிறிஸ்துவை தேவனுடைய "தற்சுரூபம்" (*எய்கோன்*) என அழைக்கிறான். "இப்போது கிறிஸ்து அதரிசனமான தேவனுடைய காணப்படுகிற தற்சுரூபமாவார்." (*எய்கோன்*) என்ற வார்த்தை எபிரெயரில் மட்டும் காணப்படுகிறது. நியாயப்பிரமாணம்

ஒரு "நிழல்" மட்டுமே என்பதால் அந்தத் தனித்திறனைக் கொண்டிருக்கவில்லை. நிழல் மீண்டும் மீண்டும் தோன்றலாம், ஆனால் அது ஒரு பொருளாக இருக்க முடியாது. இந்தக் கருத்து ஒரு உருவப்படத்தைத் தொடங்குவதற்கு முன்னதாக ஓவியனால் உருவாக்கப்படும் வெளிக்கோடு அல்லது ஆரம்ப மாதிரிப் படத்திற்கு இணையானதாக உள்ளது.

"நிழல்களாகிய" லேவிய சடங்குகள், கிறிஸ்துவின் முற்றுப் பெற்ற தலைசிறந்த பிரதான ஆசாரிய ஊழியத்தின் ஆரம்ப மாதிரிப் படமாகச் செயல்படுகின்றன. கொலோசெயர் 2:17-ல் நியாயப்பிரமாணத்தைக் குறிக்க "வருங்காரியங்களுக்கு **நிழலாய்** இருக்கிறது" என்று பவுல் நியாயப்பிரமாணத்தை இதே வார்த்தையால் கூறிப்பிடுகிறார் (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது).

2 கொரிந்தியர் 4:4-ல் இருந்து, கிறிஸ்து தேவனின் *எய்கோன்* அல்லது "தற்சுரூபம்" என்பது தெளிவாகிறது. அவர் நாம் காணக்கூடாத பிதாவின் பூரணச் சாயலாக இருக்கிறார். பழைய உடன்படிக்கைக்கு மாறாக நமக்குப் பூரண ஒழுங்கை வழங்குகிற கிறிஸ்துவே பரிபூரணமானவர் என்று இந்தப் பகுதிகள் நமக்குக் காட்டுகின்றன. தேவனின் "பரிபூரணமெல்லாம்" சரீரப்பிரகாரமாக, இயேசுவுக்குள் வாசம் செய்கிறது என்று பவுல் கூறினான் (கொலோ. 1:19; 2:9). நிச்சயமாக இந்த விஷயத்தில் பவுலைப் போலவே எபிரெயரின் எண்ணங்கள் இருக்கின்றன. எபிரெய நிருபம் மற்றும் பவுலின் எழுத்துக்கள் ஆகிய இவை இரண்டும் நம்மை "தற்சுரூபத்தை" உறுதிப்படுமாறு கேட்டுக்கொள்கின்றன (ரோமர் 8:29). கிறிஸ்துவின் அதே "சாயலாக" (*எய்கோன்*) மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம் என்று 2 கொரிந்தியர் 3:18 கூறுகிறது. "மண்ணானவனுடைய *சாயலை* [*எய்கோன்*] நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய *சாயலையும்* அணிந்துகொள்வோம்" என்று நாம் 1 கொரிந்தியர் 15:49-ல் வாசிக்கிறோம் (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது).

நாம் **பூரணராக** (τελειόω, *டெலியோ*) முடியும்; நாம் முதிர்ச்சி அடைய முடியும், அல்லது "முழுமையான நிலைக்கு" கொண்டுவரப்பட வேண்டும்.[6] காணிக்கைகளும் பலிகளும், ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக்கூடாதவைகள் என்று எபிரெயர் 9:9 நமக்குக் கூறுகிறது. பலிகள் "மனச்சாட்சியைத் தெளிவாக்க முடியவில்லை" என்று NIV கூறுகிறது. வழிபாடு செய்ய நெருங்கி வருபவரின் **மனச்சாட்சியில்** பாவத்தின் குற்றவுணர்வு இன்னும் நீக்கப்படாததினால் இஸ்ரவேலருக்கு பலிகள் அவசியப்பட்டது.[7] **வழிபட வருகிறவர்கள்** அல்லது "அணுகுகிறவர்கள்" மட்டுமே பாவ நிவாரணம் பெற்றிருப்பவர்கள். பழைய உடன்படிக்கை மூலம் நீதியைத் தேடி அதை அடைய முடிந்தவர்கள் ஒருவரும்

இல்லை. எனவே, உண்மையில் நியாயப்பிரமாணத்தின் கீழ் யாரும் வழிபாட்டில் தேவனிடம் நெருங்கி வர இயலாது. உண்மையிலேயே மோசேயின் நியாயப்பிரமாணம் ஒருவனைத் தேவனிடம் நெருங்கி வரச்செய்வதில்லை (நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை என்பதால்) என்று எபிரெயர் 7:19 தெளிவாகக் கூறுகிறது. கிறிஸ்துவில் புதிய உடன்படிக்கையின் கீழ் விசுவாசியின் "பரிபூரணம்" மட்டும் தேவனிடத்தில் வருவது அவர்களுக்குச் சாத்தியமாகிறது. இந்த முதிர்ச்சி, இயேசுவைப் போலவே ஒரு தொடர்ச்சியான வளர்ச்சியையும், பரிசுத்தத்தின் "பூரணப்படுத்தலையும்" உள்ளடக்குகிறது (2 கொரி. 6:17-7:1).

வசனம் 1 ல் குறிப்பிடப்பட்டுள்ள "நற்செயல்கள்" எவை? சிறந்த நம்பிக்கை, சிறந்த பலி, மேலும் புதியதும் சிறந்ததுமான உடன்படிக்கை மூலம் நமது சிறந்த பிரதான ஆசாரியரால் வழங்கப்பட்ட நித்திய மீட்பு மற்றும் இரட்சிப்பு ஆகிய இவைகள் அனைத்தும் உள்ளடங்கும். பாவத்தின் உண்மை மற்றும் குற்றத்திலிருந்து உண்மையான மனச்சுத்திகரிப்பு, நித்திய தேவனிடம் கிட்டிச் சேர்தல், மற்றும் இறுதியாகப் பரலோகத்தை உடைமையாக்கும் (அல்லது வாழும்) உரிமை ஆகியவையும் இதில் அடங்கும். "*வர இருக்கும் நல்ல விஷயங்கள்* என்பது ஆவிக்குரிய உயர்ந்த ஆசாரியத்துவத்துடன் வெளிப்படும் சுவிசேஷமாக இருக்கிறது."[8]

**வசனம் 2. பாவங்களுண்டென்று** உணர்த்தும் **மனச்சாட்சி** (அநேகமாக யூத கிறிஸ்தவர்களிலும் கூட) அந்தப் பலிகளைச் செலுத்துவதற்குத் தூண்டுதலாக இருந்தது. ஆலயம் இன்னும் இருந்து கொண்டும், பலிகள் இன்னும் செலுத்தப்பட்டுக் கொண்டும் இருந்தன என்பது இந்த வசனத்தில் உள்ள இயல்பான முடிவாக இருக்கிறது. மக்கள் தற்காலிகமாக மன்னிக்கப்படலாம் என்பதற்காகப் பழைய உடன்படிக்கையின் கீழ் வழக்கமான பலிகள் தேவனுக்குத் தேவைப்பட்டன. இருதயத்தில் தங்கி இருக்கிற பாவம் தேவனுடனான உண்மையான தொடர்பைத் தடுக்கிறது. புதிய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சுத்திகரிப்பு முறை ஒருவனுடைய எல்லாக் கடந்த காலப் பாவங்களிலிருந்தும் அவனைத் தூய்மையாக்குவதாகும். உண்மையான மன்னிப்பிற்குக் கிறிஸ்துவின் மரணத்தின் மூலம், ஆரம்பகாலத்தில் கொடுக்கப்பட்ட சுத்திகரிப்பு நடைமுறை மீண்டும் தேவை இல்லை. பழைய உடன்படிக்கையின் கீழ், எவ்வகைப் பலியினாலும் நிழலை நிஜமாக மாற்ற முடியாது. தூய்மைப்படுத்தும் இந்த உயர்ந்த பார்வை லேவிய பிரமாணத்தில் அறியப்படவில்லை.

**சுத்தப்படுத்தியது** (καθαρίζω, *காத்தரிட்சோ*) என்ற வார்த்தை, நிறைவுற்றதை குறிப்பதாக இருந்து, தற்போது தொடர் விளைவுகளைக் கொண்ட கடந்த காலத்தில் முடிக்கப்பட்ட ஒரு செயலைக் குறிக்கிறது. கடந்த காலப் பாவங்களைப் பற்றிய விழிப்புணர்வு அல்லது உணர்வு

நமக்குத் தேவையில்லை. ஏனென்றால் அது நம் வாழ்வில் இனி காணப்படுவது இல்லை! ஒரு நோயாளிக்கு மேலும் மேலும் மருந்து கொடுக்கப்பட வேண்டும் என்றால், அந்த மருந்து அவனைக் குணப்படுத்தவில்லை என்பது தெளிவாகிறது. அந்த நோய் நோயாளியை மேலும் பாதிக்காமல் தடுக்கலாம், ஆனால் இது ஒரு முழுமையான குணமடைதல் அல்ல. ஒருமுறை மன்னித்து விட்டால், பவுல் செய்தது போல், ஒருவன் அவனது பாவங்களின் தீவிரத்தை அடையாளம் காணலாம், அவன் கிறிஸ்துவின் மூலம் முழுமையான மன்னிப்பைக் கொண்டிருக்கிறதை அறிந்திருப்பது, மேலும் தண்டனையின் பயத்தை அதிகப்படுத்துவதில்லை. அதற்கு மாறாக, **ஆராதனை செய்கிறவன்** அவனது பாவம் பற்றித் தொடர்ந்து அமைதியற்று இருக்கும்படியாக நியாயப்பிரமாணம் இருக்கிறது. "வழிபடுபவர்கள்" என்ற வார்த்தை λατρεύω (*லாட்ரியோ*) என்பதிலிருந்து வந்தது, "திவ்விய வழிபாடு" என்பதற்கு 9:6 ல் பயன்படுத்தப்பட்ட வார்த்தையின் ஒரு வடிவம் (λατρείας, *லாட்ரியாஸ்*, "ஆசாரிய ஊழியம்") என்பதாகும். இப்போது ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு ஆசாரியன் (1 பேதுரு 2:5, 9).

அவைகள் ஒரு நினைவுகூருதல் (10:3, 4)

**3அப்படி நிறுத்தப்படாதபடியால், பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் நினைவுகூருதல் உண்டாயிருக்கிறது. 4அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே.**

**வசனம் 3.** மேலும், **அந்தப் பலிகளில் பாவத்தின் நினைவுகூருதல்** உண்டாயிருக்கிறது என்று ஆசிரியர் கூறுகிறார். யூத கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டு பலி செலுத்தும் முறையின் பயனின்மையைக் கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது.

வருஷந்தோறும் பாவ நிவாரண நாளிலே பாவங்களை நினைவுகூர்தல் (யோம் கிப்பூர்) அதற்கான பலிகளுடன் நடைபெறும். அந்த நாளின் ஒவ்வொரு பலியும் இஸ்ரவேலுடைய நித்திய பாவ குற்றப்பழியின் ஒப்புதலாகும். பாவ நிவாரண நாள் "மனித ஆவிக்கு ஒரு பாவத்தின் கருப்பொருளின் மீது வருடம் கழித்து வருடம் நிலையாக மீண்டும் மீண்டும் பளுவான பெரிய சம்மட்டியைப் போல அடிக்கும்."[10] இந்த நாளின் பலிகள் பொதுவான பாவத்திற்காக மட்டும் அல்ல, ஆனால் ஒரு வருடத்திற்கு முன்பு பலி செலுத்தப்பட்ட எல்லாப் பாவங்களுக்குமானதாகும். மற்ற பாவ நிவாரணப் பலிகள் - அறியாமையில் செய்த பாவங்கள் போன்றவை (எண். 15:27, 28) - தினந்தோறும், வாரந்தோறும் மற்றும் மாதந்தோறும் செலுத்தப்படுகின்றன. உண்மையில், பாவ நிவாரண நாளின் பலிகள்

மற்ற எல்லாவற்றையும் உள்ளடக்கி, பழைய ஏற்பாட்டு அனைத்து பலிகளின் போதாமையைக் காட்டியது. "மீண்டும் மீண்டும் எந்த அளவிற்குச் செய்தாலும் நிழலை நிஜமாக மாற்ற முடியாது."[11] மீண்டும் மீண்டும் செய்தல் யூதர்களுக்கு அவர்களது குறைபாடுகளையும், பழைய உடன்படிக்கையின் வலுவற்ற தன்மையையும் நினைவுபடுத்த உதவியது. யோம் கிப்பூரின் கருத்துப்படி இது "நீக்குதல் நாள்" ஆகும், ஆனால் பாவங்களை "நினைவுகூரும்" நாள் அல்ல. அவர்கள் மத்தியில் உள்ள ஆழமான சிந்தனையாளர்கள் நிச்சயமாக அதன் நோக்கத்தைக் காண வந்தார்கள்: "பாவத்தின் தீவிரத்தை, தேவநீதியின் உண்மையை, மற்றும் பாவநிவாரணத்தின் தேவையைக் காட்டுவதற்கு," எனினும், ஒரு புதிய உடன்படிக்கையால் மட்டுமே (எரே. 31:31-34 இல் அளித்த வாக்குப்படி) தேவன் இனி பாவங்களை நினையாமல் இருக்கச் செய்ய முடியும்.[12] கிறிஸ்துவில் நாம் இன்னும் பாவங்களை நினைவுகூர வேண்டும்; ஆனால் கர்த்தருடைய இராப் போஜனத்தின் சந்தோஷமான அனுசரிப்புக்குள், கர்த்தருடைய மரணத்தின் மூலம் பெற்ற நம் மன்னிப்பை நாம் நினைவுகூரலாம் (1 கொரி. 11:24-26). அந்த நினைவுகூருதல் இல்லாமல் நமது விசுவாசம் வலிமை வாய்ந்ததாக இருக்க முடியாது.

நியாயப்பிரமாணத்திற்கு உண்மையுள்ளவனாக இருக்க முயற்சிக்கிற யூதனை இன்னும் வாதிக்கிற உணர்ச்சி மிகுந்த பாவத்தில் குடிகொள்வதைவிடத் தேவனிடம் நம் பாவங்களை ஒப்புக்கொள்வது வேறு விஷயம். புதிய உடன்படிக்கை கொடுப்பது என்னவென்றால், தாவீது ஜெபிக்கும்போது அவன் விரும்பிய, "தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்" என்பதாகும். பலி செலுத்துவதன் மூலம் அதை அடைய முடியாது என்று அவன் உணர்ந்து, அவன் மேலும், "பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்; தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல" (சங். 51:10, 16) என்று கூறினான். ஒரு சுத்தமான இருதயம் இல்லாமல் அவனுடைய பலிகள் பயனற்றது என்பதை அவன் அறிந்திருந்தான். தற்காலிகமான மிருகங்களின் பலியால் தேவன் திருப்தி அடைவது இல்லை. ஆரம்பத்தில் இருந்தே ஒரு நல்ல பலி அவசியம் என்பதை அவர் அறிந்திருந்தார் (1 பேதுரு 1:18, 19). விரைவான ஏற்றுக்கொள்ளல் மற்றும் "கி.பி. 70-ல் தேவாலயம் அழிக்கப்பட்ட பிறகான புதிய நிலைமைகளுக்குப் பாலஸ்தீனிய யூத வழிபாட்டுக் கூட்டத்தின் எளிதான தழுவல்" ஆகியவற்றில் இருந்து யூதத் தலைவர்களுக்கும் கூட ஒரு மாற்றம் வேண்டும் என்பது தெளிவாகி இருக்க வேண்டும்.[13] மிருகங்களின் பலி பாவங்களை நிவிர்த்திச் செய்ய மாட்டாது (வசனம் 4). அவைகள் கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டும் முன் நிழலாய் மட்டுமே இருந்தன. ஆரம்பகால எபிரெயர் வாசகர்கள் மேசியாவுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கும்படியாக அந்த மாற்றத்தை

ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

**வசனம் 4.** கிறிஸ்துவை நிராகரித்து, வேதாகமத்தின் அடிப்படையில் இன்று பாவம் எவ்வாறு தீர்க்க முடியும் என்று தீர்மானிக்க முயற்சிப்பதில் யூதர்கள் தங்களுக்குத் தாங்களை ஒரு பிரச்சனையை உருவாக்குகிறார்கள். நிச்சயமாக, காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய **இரத்தம் பாவங்களை நிவிர்த்தி** (ἀφαιρέω, *அஃபெய்ரியோ*) செய்யமாட்டாது என்று பலர் புரிந்துகொண்டுள்ளனர். எபிரெயர் எழுதப்பட்ட அந்த நேரத்தில், அநேகமாக இந்த உண்மை ஒரு நன்கு அறியப்பட்ட கூற்றாக இருந்தது[14] இது தாவீதின் பிரகடனத்தை அல்லது மற்ற தீர்க்கதரிசிகளின் கூற்றுகளை அடிப்படையாகக் கொண்டிருந்ததாக இருந்திருக்கக்கூடும். மீகா 6:7 இல், உதாரணமாக, ஒருவன் அதிகப்படியான தன் குழந்தையை பலியாகச் செய்திருந்தாலும் கூட ஒரு காணிக்கையினால் தேவன் திருப்தி அடைந்து விடமாட்டார் என்று தீர்க்கதரிசி ஒப்புக்கொண்டார்! நிச்சயமாக, புறமதத்தவர்களும் நரபலிகளைக் கொடுக்கிறார்கள். ஈசாக்குடனான ஆபிரகாமின் சோதனை விதிவிலக்கான நிகழ்வாக இருந்தபோதிலும், அத்தகைய நடவடிக்கை தேவனுக்கு எந்த நேரத்திலும் தேவையில்லை (ஆதி. 22:1-14). ஒருவேளை பாவத்தைப் பற்றிய சில புரிதலைக் கொண்டிருந்த புறமத உலகத்திற்கு, மன்னிப்பு அடைய முடிவதற்குத் தேவனின் நீதி மற்றும் இரக்க மனப்பான்மையைத் தவிர வேறு எதுவும் இல்லை. எனினும், பழங்காலப் புராணங்களின் பெரும்பாலான அன்னிய தெய்வங்கள் ஒன்றையும் கொண்டிருக்கவில்லை. “தேவன் இரக்கமுள்ளவர், நமது பாவங்களை மன்னிக்கிறார்” என்று இன்று சிலர் இதை உணருகிற எந்த புறமதத்தவனுக்கு, மன்னிப்பு வரக்கூடும். அத்தகைய ஒரு வழிமுறை மூலம் மன்னிப்பு உண்மையானது என்று பாவிகள் அறிந்துகொள்ள வழி இல்லை. இஸ்ரவேலர்களுக்கு அந்த விளைவிற்கான வெளிப்பாடு இல்லை; எனினும், மன்னிப்பிற்கான முன் கணிப்பைக் கொண்டிருந்தனர் (லேவி. 4:20, 26, 31, 35). எதிர்கால உணர்வில், அவர்கள் கிறிஸ்துவின் பலியை எதிர்பார்க்க முடிந்தது, இதன் மூலம் விசுவாசிகள் மன்னிக்கப்பட்டிருக்கக் கூடும். இது எபிரெயர் 9:13-15 மற்றும் ரோமர் 3:25 ஆகியவற்றில் உள்ள சிந்தனையின் ஒரு பகுதியாகும்.

பாவ குற்றத்திற்காக நியாயமான பிரதிபலனுக்கான தேவைக்காகத் தேவனுக்கான ஒரே வழி இரக்கத்தோடும் அதே சமயத்தில் நேர்மையோடும் இருப்பதாகும் - மேலும் ரோமர் 3:23-26-ல் பவுலின் புரிதலும் அத்தகையதாக இருக்கிறது. எல்லா விலங்குகளும் கர்த்தருக்கு உரியவை என்பதால் எந்த மிருக பலியும் உண்மையில் பாவியால் தேவனுக்குக் “கொடுக்கப்பட” முடிவதில்லை என்று நாம் கவனிக்க வேண்டும் (சங். 50:10).

உண்மையான பலியை அவர்கள் முன்குறித்தார்கள் (10:5-7)

**[5]ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது: பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்; [6]சர்வாங்க தகனபலிகளும், பாவநிவாரண பலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர். [7]அப்பொழுது நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்.**

பழைய ஏற்பாட்டுப் பலிகள் கிறிஸ்துவின் மிகப் பெரிய பலியை முன்குறித்தன என்று ஆசிரியர் கூறினார். ஏற்கெனவே பல்வேறு சங்கீதங்களை குறிப்பிட்டு இருந்தாலும் (2; 45; 95; 110), ஆசிரியர் தனது வாசகர்களின் கவனத்தைச் சங்கீதம் 40:6-8 ற்கு கொண்டுவந்தார் (செப்துவஜிந்த்-ல் இருந்து).[15] இந்தச் சங்கீதம் நித்திய குமாரனுக்கும் பிதாவுக்கும் இடையே குமாரன் பேசுவதான, ஒரு வகையான உரையாடல்.[16] "மற்ற மேசியானிய சங்கீதங்கள் போலவே, தாவீதின் வார்த்தைகள் மேசியாவைப் முன்குறிக்கின்றன."[17] "அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது" என்ற கருத்து கிறிஸ்து ஆதியிலே இருந்தார் என்பதைக் குறிக்கிறது.

**வசனங்கள் 5-7.** அப்படியே எடுத்துக்கொண்டால், ஒரு **சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்** (வசனம் 5) என்பதற்கான எபிரெய வாக்கியத்தின் பொருள் "காதுகளை எனக்காக நீர் வெட்டி இருக்கிறீர்" (அல்லது "காதுகளை எனக்காக நீர் திறந்து இருக்கிறீர்") என்பதாகும்; ஆனால் இங்கே செப்துவஜிந்த் லிருந்து பொழிப்புரையாக ஆக்கப்பட்டுள்ளது. அசல் கூற்று ஒரு பேச்சு வழக்காக ஒரு சரீரத்தை உண்டாக்குவதைப் பரிந்துரைத்து, இந்தச் சொற்றொடர் "ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்" என்பதாகச் சரியான மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. "காதுகளை எனக்காக நீர் வெட்டி இருக்கிறீர்" என்ற சொற்றொடர், ஊழியக்காரன் அவனது காதுகள் துளையிடப்படுவதற்குக் கீழ்ப்படிந்து ஒரு நிரந்தரமான ஊழியனாக, அந்த நேரத்தில் இருந்து பின்பு வரை அவனுடைய எஜமானருக்குக் கீழ்ப்படிந்து பணிவுடன் இருக்க வேண்டும் என்று குறிப்பாக இருக்கிறது (யாத். 21:6-ஐ பார்க்க). தேவன் காதுகளை ஆயத்தப்படுத்தியது போல், அவர் முழுச் சரீரத்தையும் தயார் செய்தார் என்று செப்துவஜிந்த் சொற்றொடர் ஆக்கம் கருதுகிறது. "பேசுபவருக்குத் தேவனால் 'தயாரிக்கப்பட்ட' சரீரம் ஒரு 'வாழும் பலியாக', தேவனுக்குக் கீழ்ப்படிதலுள்ள சேவையில் பணியில் அமர்த்தப்பட அவருக்குத் திரும்பக் கொடுக்கப்பட்டது."[18]

ஆசிரியர் செப்துவஜிந்த்தில் இருந்து அந்தப் பெயரைக் குறிப்பிடாமல் மேற்கோள் காட்டினார். ஆசிரியர் செப்துவஜிந்த்

மொழிபெயர்ப்பை எவ்வாறு கையாண்டார் என்பதற்கான ஒரு சாத்தியமான விளக்கம் இங்கே உள்ளது: எபிரெய "வேதாகமத்தின் கிரேக்க மொழிபெயர்ப்பு [செப்துவஜிந்த்] அசலின் பொருளைச் சரியாக வெளிப்படுத்தும் போது, அவர் பின்னர் பொதுவாக மேற்கோள் காட்டுகிறான்; இல்லையெனில், அவர் மொழிபெயர்ப்பை சரி செய்வதற்காக அவ்வாறு மாற்றியமைக்கிறார் அல்லது அவர் ஒரு புதிய எபிரெய மொழிபெயர்ப்பை நமக்குத் தருகிறான்."[19] தேவன் செப்துவஜிந்த்-ஐ ஆசீர்வதித்தார் என்பதால் பொழிப்புரை செய்யப்பட்டிருந்தாலும் கூட அது உரையின் உண்மையான பொருளைத் தருகிறது என்று கருதுவதற்கு நாம் அதுவரை செல்ல வேண்டுமா? அது அவ்விதமாக இருக்கலாம், ஆனால் ஏவப்பட்ட ஆசிரியர் தேவைப்படும்போது வசனம் 5 ல் உள்ளது போல் சிறிது அதைத் திருத்திக் கொண்டார்.[20] சில நேரங்களில் செப்துவஜிந்த் புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருகிறதாகத் தோன்றுகிறது, குறிப்பாக எபிரெயரில். மொழிபெயர்ப்பாளர்கள் ஒரு நேரடி மொழிபெயர்ப்பைக் கொடுக்காமல் பொருளை வெளிப்படுத்தினர். இவ்வகைப் பொழிப்புரை அவசியம், ஏனெனில் இலக்கியரீதியாக வேறு மொழியில் மொழிபெயர்க்கப்படும் போது பல அசல் சொற்றொடர்கள் எந்தப் பொருளையும் கொடுப்பதில்லை. தேவன் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு சரீரம் கொடுத்திருக்கிறார் என்பதால், "வாழும் பலியாக" அவர் அதைத் திரும்பப் பெற விரும்புகிறார். எனினும், பிரசங்கிகள் அடிக்கடி ஒரு உரையை விவரிக்கும் போது செய்கிறது போல் ஆசிரியர் தனது சொந்த அசல் பொழிப்புரையை கொடுத்திருந்திருக்கலாம்.

பழைய ஏற்பாட்டில், **சர்வாங்க தகனபலிகளும், பாவநிவாரணப் பலிகளும்** தேவனுக்குப் **பிரியமானதல்ல** என்று 6-ம் வசனம் சுட்டிக் காட்டுகிறது, ஏனென்றால் அவைகள் பாவத்திலிருந்து இரட்சிப்பைப் பெறச் செய்வதில்லை. **நீர் விரும்பவில்லை** (வசனம் 5) என்ற சொற்றொடருக்குத் தேவன் சித்தம் கொண்டிருக்கவில்லை அல்லது அத்தகைய பலிகளை நிர்ணயித்திருக்கவில்லை என்று பொருள்.[21] மாறாக, அதை நிறைவேற்றுவதற்காக, இயேசுவின் மரணத்தில் அவர் மகிழ்ச்சி கொண்டிருந்தார். இயேசுவுடைய பலியின் காரணமாக, வீழ்ச்சிக்கு முன்னர் ஏதேன் தோட்டத்தில் பார்த்ததுபோல், மீட்கப்பட்ட மனிதனை தேவன் "மீண்டும் மகிழ்ச்சியுடன் பார்க்க முடியும்."[22]

**புஸ்தகச்சுருளில்** (வசனம் 7) என்ற சொற்றொடர் சங்கீதம் 40:7-ன் அசல் எபிரெய வாக்கியத்தில் "எல்லாவற்றின் உச்சநிலையைக் குறிக்கிறது." இது தலை அல்லது ஒரு கையெழுத்துப் பிரதி சுருட்டப்பட்ட குச்சியின் குமிழையும் குறிக்கிறது. இங்கே, அத்தகைய சுருளுக்கு ஒரு குமிழ் உள்ளது, மேலும் இந்த வசனம் அவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[23] எபிரெயர் எழுதிய காலத்தில் மிகப்

பழமையான புத்தகங்கள் சுருளில் ஆக்கப்பட்டன என்பதால், இதன் இலக்கியக் கருத்து, “புஸ்தகச்சுருள்” என்பதாகும், இச்சந்தர்ப்பத்தில், “புத்தகம்” என்பது தேவனுடைய நியாயப்பிரமாணம். இயேசு செய்த அனைத்தும் நியாயப்பிரமாண “புஸ்தகச்சுருளில்” எழுதப்பட்டதை நிறைவேற்றுவதற்காக இருந்தது. குறிப்பாக அவைகள் அவர் மரிக்கச் சென்றபோது நிறைவேற்றப்பட்டன (மாற்கு 14:49). வசனம் 8-ல் உள்ள “நியாயப்பிரமாணம்” பற்றிய குறிப்பு வசனம் 7-ல் உள்ள “சுருள்” என்பதன் பொருளைத் தெளிவுபடுத்துகிறது. “புத்தகச் சுருளில் அது எழுதப்பட்டுள்ளது” என்பது “‘அது எழுதப்பட்டிருக்கிறது’ என்பதாக [என்று கருத மார்ட்டின் லூதரால்] நன்கு கொண்டு வரப்பட்டது. எழுதப்பட்டிருக்கிறது என்பது ஒரு மீறமுடியாத தன்மையைக் கொண்டுள்ளது.”[24]

யோவான் 10:34-ல் சங்கீதம் 82:6-ஐ மேற்கோள் காட்டும் பொழுது, “நியாயப்பிரமாணத்தின்” பாகமாக இயேசு சங்கீதங்களைக் குறிப்பிட்டார். பழைய ஏற்பாடு சில நேரங்களில் “நியாயப்பிரமாணம்” என அழைக்கப்படுகிறது என்பதை இது அறிவுறுத்துகிறது. எபிரெயர் 10:7-ல் குறிப்பிட்டுள்ள “சுருள்” மோசேயின் ஐந்து நூல்கள் மட்டுமேயானால், அந்த ஐந்து மடங்கு தொகுதி கிறிஸ்துவிற்கான குறிப்புகளையும் கொண்டிருக்க வேண்டும் (ஆதி. 3:15; 49:10; உபா. 18:15-18 பார்க்க). அவரது குமாரன் ஒரு பலியாக இருக்க வேண்டும் என்பது பிதாவின் சித்தமாக இருந்தபோதிலும், இது குமாரனின் மனமார்ந்த விருப்பமும் ஆகும்.

**தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன்** என்று தாவீது எழுதினான், ஆனால் உண்மையில் இந்த அறிக்கையைக் கூறிக்கொண்டு ஆவியில் அது கிறிஸ்துவாக இருந்தார், உலகத்தில் அவருடைய வருகையின் மூலம் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியது, மேலும் அவர் தேவனுடைய சித்தத்தைப் பூரணமாக நிறைவு செய்தார். தாவீது தேவனுடைய சித்தத்தின்படி செய்தான் என்று ஓரளவு மட்டுமே நாம் சொல்ல முடியும்; ஆனால் இயேசுவைக் குறித்து, அது உண்மையாகவும் முழுமையாகவும் கூற முடிந்தது (யோவான் 6:38; 17:4 பார்க்க). “கிறிஸ்துவின் ஆவி” பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகளில் இருந்தது; அவர்கள் கூறியதை அல்லது எழுதியதை அவர்கள் பெரும்பாலும் முழுமையாக புரிந்துக்கொள்ளவில்லை என்று நினைவில் கொள்ள வேண்டும் (1 பேதுரு 1:10, 11 பார்க்க). ஒரு தேர்வுசெய்யும் அதிகாரம் கொண்டவர், தனக்குத்தானே தேர்வு செய்யத் திறன் உள்ளவர் மட்டுமே தகுந்த பலியைச் செய்ய முடியும். சித்தத்தை அல்லது தேர்வைக் கொண்டு, இறுதியாகத் தேவநீதியின் தேவையை ஒரு விலங்கு பூர்த்தி செய்ய முடியாது. இயேசு “அவரது உயிரை மீண்டும் எடுத்துக்கொள்ளலாம்” என்பதால் அதை அவர் கொடுத்தார் (யோவான் 10:11, 15, 17, 18 பார்க்க).

அவை முதலாவது உடன்படிக்கை (10:8-10)

**[8]நியாயப்பிரமாணத்தின்படி செலுத்தப்பட்டுவருகிற பலிகளைக்குறித்து மேற்சொல்லியபடி: பலியையும், காணிக்கையையும், சர்வாங்க தகனபலிகளையும், பாவநிவாரணபலிகளையும் நீர் விரும்பவில்லை, அவைகள் உமக்குப் பிரியமானதல்ல என்று சொன்னபின்பு: [9]தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன் என்று சொன்னார் இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப்போடுகிறார்.**
**[10]இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்.**

**வசனங்கள் 8-10.** இந்தப் பலிகள் பழைய (முதல்) உடன்படிக்கையின் பாகமாக இருந்ததாக ஆசிரியர் கூறினார். சங்கீதம் 40:6-8-ன் மேற்கோளை விளக்குவதற்கு, அதை வலியுறுத்த மீண்டும் அதன் ஒரு பகுதியை மேற்கோளிட்டார். 13:22 போல் மீண்டும் ஒருமுறை, ஒரு பிரசங்கத்தின் தன்மையை அது கொண்டுள்ளது. இந்த மேற்கோளில் கிறிஸ்து பேசுகிறார். அவர் புதிய உடன்படிக்கையைக் கொண்டு வருவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே பலியிடும் பழைய முறைமை பலனற்றது என்பதை அறிந்திருந்தார். தேவனுடைய சித்தத்திற்கு அவர் முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டும் என்று பூலோகத்திற்கு வந்தார். இந்தத் தீர்க்கதரிசனம் தாவீதின் மூலமாக வந்தது, ஆனால் அவர் மூலவர் அல்ல. தேவனுடைய சித்தத்தின்படி செய்யக் கிறிஸ்துவே ஒருவராக இருந்து **முதலாவது உயில் அல்லது முறைமையை நீக்கிப்போடுகிறார்** (வசனம் 9). ἀναιρέω (*அனாய்ரியோ*, “நீக்கிப் போடுதல்”) என்னும் வார்த்தை “ஒழித்தல்” என மொழிபெயர்க்கப்பட்டு (NRSV), பொதுவாக “கொல்லு” என்ற அர்த்தம் கொண்டுள்ளது.[25] “பழையது ‘நீக்கப்பட்டது’ என்பது முழுமையான ஒழித்தலைக் குறிக்கும் ஒரு வலிமை வாய்ந்த வார்த்தை.”[26]

புதிய உடன்படிக்கைக்கு இடம் உண்டாகும்படி பழைய உடன்படிக்கை நீக்கப்பட வேண்டும். உண்மையில், “சங்கீதம் 40:6-8-ல், மேற்கோளிட்டுள்ளது போல, இயேசு வந்தபோது அவருடைய பிதாவின் சித்தத்தைச் செய்து கொண்டிருந்தார். நியாயப்பிரமாணத்தால் தண்டிக்கப்பட்ட அடிமைத்தனத்தின் நுகத்தில் இருந்து நம்மை விடுவிக்கவும், இரண்டாவது உயில் அல்லது உடன்படிக்கையைக் கொடுக்கவும் தனது சொந்த சரீரத்தையே பலியாகச் செலுத்தினார்,” என்று கூறி ஆசிரியர் இக் கருத்தை வலியுறுத்தினார். **இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு** (வசனம் 9), “முதலாவதை” எடுத்துப்போடும் பொழுது, கிறிஸ்து பழைய உடன்படிக்கையை நீக்கிப்போட்டார். (ரோமர் 7:1-7 பார்க்க.)

**நியாயப்பிரமாணம் பலிகளை** அங்கீகரித்தது என்று எபிரெய

நிருபத்தின் ஆசிரியர் அறிந்திருந்தார் (வசனம் 8; பார்க்க லேவி. 1-7), ஆனால், பலி செலுத்தும் நேரத்தில் வழிபடுகிறவர்களின் இதயம் பாவத்திற்காக உண்மையில் வருந்துவதாக இருக்காத போது தீர்க்கதரிசிகள் தங்களைப் பயனற்றவர்களாகக் கருதி இருந்தார்கள் என்று அவரும் அறிந்திருந்தார். (உதாரணமாக, ஓசியா 6:6; ஏசாயா 1:11-14; மீகா 6:6-8 பார்க்க) எனவே, **நீர் விரும்பவில்லை, அவைகள் உமக்குப் பிரியமானதல்ல** என்று நாம் வாசிக்கிறோம் (வசனம் 8). இது உண்மையானதாக இருந்ததால், ஒரு சிறந்த பலியை வழங்குவதற்காக நித்தியத்திலிருந்து தேவன் திட்டமிட்டிருந்தார் (வசனங்கள் 9, 10). **கிறிஸ்துவின் பலி** ஒரே தரம் (ἐφάπαξ *எஃப்பாக்ஸ்*) பிரச்சனைக்கு ***நிரந்தர தீர்வை*** ஏற்படுத்தியது.[27]

கிறிஸ்துவின் பலி வழியாக நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம், அல்லது **"பரிசுத்தம்** செய்யப்படுகிறோம்." ஒரு குறிப்பிட்ட நேரத்தில் (முடிவைக் குறிப்பிடாத இறந்த காலம் பயன்படுத்தப்படுகிறது).[28] இந்த அளவு "இரட்சிக்கப்பட்டு" இருப்பதற்குச் சமமாகும். புதிய சித்தத்தை அல்லது மனிதனுடன் தேவனின் உடன்படிக்கையை நிறைவேற்ற கிறிஸ்துவின் சாதனையும் காரணமாகிறது. கிறிஸ்து பிதாவின் சித்தத்தைச் செய்திராவிட்டால், இரட்சிப்பின் நம்பிக்கை நமக்கு இருந்திருக்காது. தேவனை வழிபாட்டில் அணுகுவதற்கு ஒருவர் சுத்தப்படுத்தப்பட வேண்டும் என்பது யூத மனதிற்கு, "பரிசுத்தமாக்கப்படுதல்" என்று பொருள் இருந்தது. அதுவும் நமக்கு இன்னும் அதிகமாக இருக்கிறது.

"பரிசுத்தப்படுத்துதல்" என்பது, நம் கிறிஸ்துவிற்குள்ளான மாற்றத்தின் ஆரம்பகாலத்தின் போது மற்றும் கிறிஸ்தவப் பண்பில் வளர்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிற போது ஆகிய இரண்டும் ஒரே காலத்தில் நிகழும் நிகழ்வு ஆகும். "மாம்சம் மற்றும் ஆவியின் அனைத்து களங்கங்களிலிருந்தும் நம்மை நாமே சுத்தப்படுத்தித் தேவபயத்தில் பரிசுத்தமாவதற்கு" நம்மை அறிவுறுத்துகிற இந்தக் கருத்தை 2 கொரிந்தியர் 7:1 ல் நாம் பார்க்கிறோம்.[29]

பிதாவின் சித்தத்தை இயேசு நடப்பிக்க இரண்டு விஷயங்கள் தேவைப்பட்டன. முதலாவதாக, ஒரு சரீரம் அவருக்கு ஆயத்தப்படுத்தபட வேண்டியதாய் இருந்தது (வசனம் 5), இது அவரது பிறப்பில் உண்டானது. இரண்டாவதாக, அவர் பழைய முறைமைகளை அகற்ற வேண்டியிருந்தது (வசனம் 9). நம்முடைய ஆண்டவர் பூமிக்கு வருவதற்கு வெகு காலத்திற்கு முன்பே. தம்முடைய வருகையின் நோக்கத்தை அவர் அறிந்திருந்தார். அவரது பலி எப்பொழும் மறுபடியும் தேவைப்படாத அளவு மிகவும் பரிபூரணமாக இருந்தது![30] கீழ்ப்படிதலும் சுய அர்ப்பணிப்புமான இந்த ஒரே பலியில் தேவன் பிரியமாய் இருந்து, அதன் மூலம் அவர் பாவங்களை மன்னிக்கிறார். பரலோகத்தில் இயேசு மனிதனை இரட்சிக்கத் தேவையாய் இருந்த

எல்லாவற்றையும் அறிந்திருந்தார். மனிதர்களின் இரட்சிப்புக்காக அவர் தானாகவே மனமுவந்து தனது உயிர் இரத்தத்தை வழங்கினார் (யோவான் 3:16).

### கிறிஸ்துவால் பரிசுத்தமாக்கப்பட்டோம் (10:11-18)

மிருக பலிகளின் போதாமையை வலியுறுத்திள்ள நிலையில், அதன் பிறகு ஆசிரியர் கிறிஸ்துவுடைய பலியின் செயல்திறனை காண்பித்தார். அவருடைய பலியின் முடிவிலும் (வசனங்கள் 11-14), பரிசுத்த ஆவியானவரின் சாட்சியிலும் (வசனங்கள் 15-18) கிறிஸ்துவில் நிறைந்திருந்த மகிமையை அவர் நிரூபித்தார்.[31]

கிறிஸ்து உண்மையில் நமக்கு என்ன செய்தார்? அவரது மரணம் நீதியின் தேவைகளை எவ்வாறு பூர்த்திச் செய்து நமக்குப் பரிசுத்தத்தைக் கொண்டு வந்தது? எபிரெயர் 10:11-18 இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்கிறது.

கிறிஸ்து, நமது வீற்றிருக்கும் கர்த்தர் (10:11, 12)

**11அன்றியும், எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும், பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்தி செய்யக்கூடாத ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்திவருகிறவனாயும் நிற்பான்.**
**12இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து.**

**வசனங்கள் 11, 12.** நாம் இயேசுவை, முதலாவதாக, நமது உட்கார்ந்திருக்கும் இரட்சகராகக் காண்கிறோம். **எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாய்** இருக்கிறான் என்று வசனம் 11 கூறுகிறது. ஆசாரியர்கள் ஆசரிப்புக் கூடாரத்தில் அல்லது தேவாலயத்தில் ஒருபோதும் வீட்டு உணர்வைப் பெற முடியாது; அவர்கள் எப்போதும் நின்று கொண்டிருக்க வேண்டும். பழைய முறைமையின் கீழ், பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கான வேலை ஒருபோதும் நிறைவு செய்யப்படவில்லை என்பதை நின்று கொண்டிருத்தல் காட்டுகிறது. மாறாக, இயேசு அவருடைய பலி செலுத்தும் வேலையை நிறைவேற்றியவராக மகிமையில் உட்கார்ந்திருந்தார். "உட்கார்ந்திருக்கும் ஒரு ஆசாரியர் முடிக்கப்பட்ட வேலை மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பலியின் உத்தரவாதமாக இருக்கிறார்."[32] கிறிஸ்து **தேவனுடைய வலதுபாரிசத்தில்** உட்கார்ந்திருக்கிறார் என்னும் கருத்து, ஒரு முக்கியமான புதிய ஏற்பாட்டுச் சிந்தனையாக மாற்றம் அடைந்த யூதர்களுக்கு உதவியாக இருந்தது. வழக்கமாக இது "கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி" (அப். 2:34-36; பார்க்க சங். 110:1) என்னும் சொற்றொடருடன் சேர்த்து

வழங்கப்படுகிறது.

பழைய ஆசாரியத்துவத்தினால் தொடர்ச்சியாகச் செலுத்தப்படும் **அதே பலிகள்** “பூஜ்ஜியங்களின் ஒரு சரம்” தான்.[33] அதே பலிகள் என்பதன் அழுத்தம் ஒவ்வொரு நாளும் பலி செலுத்துவதற்கான சடங்குகள் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது. நியாயப்பிரமாணத்தின் கீழ் ஆசாரிய வேலை தொடர்ச்சியானதாக, பல ஆசாரியர்கள் சுழற்சி முறையில் வேலையில் இருக்கவும் வெளியே செல்வதுமாக இருக்க வேண்டியிருந்தது. முதல் நூற்றாண்டு புறசமய சார்புடையவர்கள் தங்கள் தெய்வங்களுக்கான தொடர்ச்சியான “பலிகளை” செலுத்தினார்கள், ஆனால் கிறித்துவம் மட்டும் ஒரே தரமாக, **எல்லா நேரத்திலும்** பாவத்திலிருந்து நம்மை விடுவிக்கிற நமது தேவனின் முழுமையான நடவடிக்கையைக் கொண்டுள்ளது. வரலாற்றில் வேறு எந்த மதமும், முழு உலக இரட்சிப்பின் விருப்பங்களை நிறைவேற்றுக் கூடிய அத்தகைய ஒரே நேர நிகழ்வைக் கொண்டிருக்கவில்லை. கிறிஸ்துவைத் தவிர வேறு எந்த ஆசாரியனும் தன்னுடைய வேலையை முடித்துக்கொண்டவராக உட்கார முடியவில்லை (வசனம் 12). நம்முடைய மீட்பைப் பெறுவதற்கான இயேசுவின் வேலை முடிவடைந்தது.

கிறிஸ்து, நமது காத்திருக்கும் கர்த்தர் (10:13, 14)

**13இனித் தம்முடைய சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப்போடும் வரைக்கும் காத்துக்கொண்டிருக்கிறார். 14ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்.**

**வசனம் 13.** இரண்டாவதாக, நாம் இயேசுவை நமது காத்திருக்கும் கர்த்தராகக் காண்கிறோம். அவர் **தம்முடைய சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் காத்துக்கொண்டிருக்கிறார்**. இங்கே சங்கீதம் 110 (வசனம் 1-ல்) இருந்து மற்றொரு மேற்கோளைக் கொண்டுள்ளோம். 5 மற்றும் 7 அதிகாரங்களில் இந்தச் சங்கீதம் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டது. 1 கொரிந்தியர் 15-ல் இந்தப் பகுதியைப் பற்றிய கூடுதல் குறிப்புகள் பவுலால் வழங்கப்பட்டுள்ளது. கிறிஸ்து, அவரது ஒரே சிறந்த பலியைச் செலுத்திய நிலையில், அவர் ராஜ்யத்தைப் பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுக்க, இப்போது காலம் நிறைவேறும் வரை காத்துக் கொண்டிருக்கிறார். கடைசிச் சத்துரு - மரணம் - உயிர்த்தெழுதலில் பரிகரிக்கப்படும் போது இது நடக்கும். இயேசு திரும்பி வருகிற சமயத்தில், உயிர்த்தெழுதல் நடக்கும் பொழுது, தமது ஆளுகையைப் பிதாவினிடத்தில் ஒப்புக் கொடுப்பார் (1 கொரி. 15:23-28). இது அவரது வருகையின்போது அவருடைய ஆட்சி ஆரம்பமாகிறது என்ற கருத்திற்கு நேர் எதிரானதாக இருக்கிறது.

நாம் கொண்டிருக்கிற ஒவ்வொரு எதிரியின் மீதும் கிறிஸ்து வெற்றி சிறக்கும் ஒரு இறுதி நாளை நோக்கி பூமி நகர்ந்து கொண்டிருக்கிறது. பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம் (1 கொரி. 15:26). கிறிஸ்து வரும்போது, முடிவு வரும், ஏனெனில் அவருடைய வருகை "கடைசி நாளில்" இருக்கும் (யோவான் 6:39, 44). அந்த நாளில் மரித்துப்போன நன்மைசெய்தவர்களும் தீமை செய்தவர்களும் எழுப்பப்படுவார்கள் (யோவான் 5:28, 29). மரித்தோரின் உயிர்த்தெழுதலுக்குப் பின் இந்தக் கடைசி நியாயத் தீர்ப்பு நேரம் இருக்கும் என்பதைக் குறிக்கிறது.

**வசனம் 14. ஒரே பலி** போதுமானது என்ற சிந்தனை மீண்டும் கூறப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் நடவடிக்கை மூலம், விசுவாசிகள் **பரிசுத்தம்** செய்யப்படுகிறார்கள். ἁγιάζω (*ஹாகியசோ*) என்பதில் இருந்து மொழிபெயர்க்கப்பட்ட "பரிசுத்தம் செய்தல்" என்ற வார்த்தை "பரிசுத்தமாக்குதல்" அல்லது "பரிசுத்த நோக்கத்திற்காகப் பரிசுத்தப்படுத்துதல்" என்று பொருள் தருகிறது.[34] கிறிஸ்துவைத் தரித்துக் கொண்ட அனைவருக்கும் இந்தச் செயல்முறை பொருந்துகின்றது (கலா. 3:26, 27). ஒரு புதிய வாழ்க்கை, ஒரு பரிசுத்த வாழ்க்கை (1 தெச. 4:1-8) வாழ்வதற்கு அவர்கள் உயிரோடு எழுந்திருக்கிறார்கள் (கொலோ. 2:12; 3:1). இந்த வழியில் வாழ நாம் கடமைப்பட்டுள்ளோம் ஏனென்றால் நாம் கிறிஸ்துவால் பரிசுத்தம் செய்யப்பட்டுள்ளோம். இயேசு தம் அப்போஸ்தலர்களை ஊழியம் செய்வதற்கு அனுப்பிய பின்பு நீண்ட காலம் கழித்து, அவர்கள் தொடர்ந்து பரிசுத்தமாக்கப்படுவதற்காக ஜெபம் செய்தார் (யோவான் 17:17). "நியாயப்பிரமாணம் ஒருபோதும் கொடுக்க முடியாத மனச்சாட்சியின் சமாதானத்தை" உருவாக்க உதவுகிற இந்தப் பரிசுத்தத்தை நாம் அவரில் நிறைவேற்றுகிறோம்.[35] ஒரு நாளில் மீட்கப்பட்ட மில்லியன் கணக்கான மக்களில் நாம் சேருவோம்.

பரிசுத்தம் செய்யப்பட்டிருக்கிறோம் என்பது நாம் **பூரணம்** அடைந்திருக்கிறோம் என்று அர்த்தமாகும் (τελειόω, *டெலியியோ*; பார்க்க 2:10; 7:11, 19, 28; 10:1). கர்த்தருடைய சபை அங்கத்தினர்களுக்குப் பரிசுத்தம் செய்யப்படுதல் அருளப்பட்டு வார்த்தையின் மூலம் நிறைவேற்றப்படுகிறது (யோவான் 17:17). இது ஞானஸ்நானத்திற்குத் தெளிவான குறிப்பாக "தண்ணீரால் கழுவுதலினால்," வருகிறது (எபே. 5:25, 26; பார்க்க எபி. 10:22). இந்த இரண்டு கூறுகளும் நாம் பரிசுத்தம் அடைவதற்கு அத்தியாவசியமானவை.

கிறிஸ்து, நமது முழுமையான பரிகாரி (10:15-18)

**15இதைக்குறித்துப் பரிசுத்த ஆவியானவரும் நமக்குச் சாட்சிசொல்லுகிறார்; எப்படியெனில்: 16அந்த நாட்களுக்குப்பின்பு நான்**

**அவர்களோடே பண்ணும் உடன்படிக்கையாவது: நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறாரென்பதை உரைத்தபின்பு,**
**17அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார்.**
**18இவைகள் மன்னிக்கப்பட்டதுண்டானால், இனி பாவத்தினிமித்தம் பலி செலுத்தப்படுவதில்லையே.**

மூன்றாவதாக, நம்முடைய முழுமையான பரிகாரியாகக் கிறிஸ்துவை நாம் காண்கிறோம் என்பது எல்லாவறிலும் மிகப்பெரிய செய்தி (வசனங்கள் 15-18). ஒரு போதகர் செய்யக்கூடியது போல், அவனது வாசகர்களுக்கு அதைப் பற்றி ஞாபகப்படுத்தவும் அவனது முதன்மைச் செய்தியை வலியுறுத்தவும் போதுமான மேற்கோள்ளிட்டு, ஆசிரியர் ஒரு முக்கிய உரைக்குத் திரும்பினார், மேற்கோள் காட்டப்பட்ட பகுதி எரேமியா 31:31-34 இருந்தும் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிக் கூறியதாகவும் இருக்கிறது. இது குறிப்பாக "புதிய உடன்படிக்கையை" பழைய ஏற்பாட்டில் சுட்டிக்காட்டிய ஒரே பகுதி ஆகும். இது குறிப்பாக 1 கொரிந்தியர் 10:6 ல் பவுல் குறிப்பிட்ட அதே சிந்தனையை வலியுறுத்தி, கிறிஸ்தவச் சகாப்தத்திற்காக எழுதப்பட்டது என்று ஆசிரியரும் பரிந்துரைக்கிறார். பழைய ஏற்பாட்டின் பிரமாணங்கள் நம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கவில்லை என்றாலும், பழைய குறிப்பாக அது நமக்காக எழுதப்பட்டது போல் பழைய ஏற்பாட்டை நாம் படிக்க வேண்டும். தேவனுடைய அடிப்படைக் கோட்பாடுகள், கீழ்ப்படிதல் தேவைப்படுகிறது என்பது மாறாதது. நியாயப்பிரமாணம் புறஜாதியாரைக் கூடக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்தது என்று நினைவில் வையுங்கள். (கலா. 3:24-ஐ காண்க; பெரும்பாலான கலாத்தியர்கள் புறஜாதியார்கள் என்று நாம் கருதலாம்.)

**வசனங்கள் 15, 16. பரிசுத்த ஆவியானவரும்** நமக்குச் **சாட்சிசொல்லுகிறார்** (μαρτυρέω, *மார்டுரியியோ*) அல்லது "சாட்சிகள்." 8:8-ல், தேவன் பேசுபவராக ஆசிரியர் சுட்டிக்காட்டினார், ஆனால் பொருளில் உண்மையான வித்தியாசம் இல்லை. வேதவாக்கியங்கள் எல்லாவற்றையும் "தேவன்-ஊதினார்," பரிசுத்த ஆவியினால் "அருளப்பட்டது" (2 தீமோ. 3:16, 17).

இங்கே மேற்கோள், சரியாக 8:8-12-ல் உள்ளது போல் இல்லை, ஆனால் அது அதே சத்தியத்தைக் கொண்டிருக்கிறது. ஆசிரியர் ஒரு மனோவியல் அணுகுமுறையைப் பயன்படுத்தி, போதனைகளைத் தெளிவாக்குவதற்கும் இன்னும் உறுதியாக்குவதற்கும் பழைய ஏற்பாட்டு உரையின் சொற்றொடரை மாற்றியமைத்து அதை விரிவு படுத்தினர் ஆசிரியர். ஹியூஸ் எழுதினார்,

> இந்த மேற்கோள் எரேமியா 31:33 முதல் பகுதியுடன் வார்த்தைக்கு வார்த்தை ஒத்திருக்கவில்லை என்ற உண்மை … ஒவ்வொரு தனி வார்த்தையையும் ஒரு அடிமைத்தனமாகப் பின்பற்றுவதில்லை என்றும் வார்த்தைகளின் உணர்வு முதன்மை முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் மீண்டும் ஒரு முறை நிரூபிக்கிறது (உண்மையில் நடைமுறையில் உள்ள ஒரு வேதாகம இலக்கியம் சட்டபூர்வமான தன்மையையும், மொழிபெயர்ப்பு மற்றும் வேதாகம ஏட்டு விளக்க உரைகளின் சாத்தியத்தையும் தவிர்க்கிறது) … அவர் ஆதாரமாக உள்ள உண்மையின் புரிந்துகொள்ளலையும் பயன்பாட்டையும் விடப் பரிசுத்த ஆவியானவரையே பற்றியது … எனத் தொடர்கிறது.[36]

சொற்றொடர் மாற்றமும் விளக்கமும் எபிரெயரில் பெரும்பாலும் இடம் பெறுகிறது. இந்த மேற்கோளில் உள்ள சிறிய முரண்பாடு ஆவியானவரால் இந்தப் பகுதி அல்லது வேதாகமத்தில் வேறெந்தப் பகுதிக்கான முழு அகத்தூண்டுதலை எந்த வழியிலும் மறுக்கவில்லை.

பரிசுத்த ஆவியானவரால் சாட்சியிடுதல் தேவனுடைய வார்த்தையிலும் அதன் மூலமாகவும் நடத்தப்பட்டது. அது தீர்க்கதரிசிகளாலும் பிற ஏவப்பட்டவர்களாலும் எழுதப்பட்டவைகள் இப்பொழுது வேதங்களில் காணப்படுகிறது. எனவே, ஒரு ஏவப்பட்டவர் பழைய ஏற்பாட்டை வாசித்து அதற்குப் பொருள் விளக்கம் அளிக்கும் பொழுது, நமக்கு மூல உரைபோல் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டதாக மேற்கோள் காட்டப்பட்ட ஒரு விளக்கம் உள்ளது என்று நாம் கூறலாம். (1) தீர்க்கதரிசிகள் தேவனிடமிருந்து பெற்ற தூண்டுதல் மற்றும் அதிகாரம் மூலம் எழுதினார்கள் மேலும் (2) அவருடைய வார்த்தையை ஒரு தற்கால மொழிபெயர்ப்பில் நாம் வாசிக்கலாம் என்பது ஒரு உறுதியான அறிக்கை (2 பேதுரு 1:20, 21).

வரவிருக்கும் ஒரு “புதிய உடன்படிக்கை” பற்றி எரேமியா எழுதினார் (எரே. 31:31-34), ஆனால் அவர் பரிசுத்த ஆவியானவர் மூலம் ஈர்க்கப்பட்டிருந்ததால் அவரது சொந்த வார்த்தையை விட அதிக அதிகாரத்தை அவர் கொண்டிருந்தார். இயேசு கொடுத்த இந்தப் புதிய உடன்படிக்கையைவிட வேறு எந்த உடன்படிக்கை இருக்க முடியும்?

**வசனம் 17.** பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகளுக்கு இடையிலான முக்கியமான முரண்பாடு பலி செய்ய எந்தத் தேவையும் இன்றிப் புதியதின் கீழ் முழு மற்றும் மொத்த பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. அக்கிரமங்களை … **இனி நினைப்பதில்லை** என்பதற்குத் தேவன் திறன் கொண்டிருக்கிறார். இயேசுவின் மரணத்தின் காரணமாக, நம்மை மன்னிப்பதில் தேவன் முழுமையாக நியாயப்படுத்தப்படுகிறார் என்பதால், வேதாகமத்தில் எந்தவிதமான தொடர் பலிக்கும் அடிப்படை இல்லை. ஒரு திருப்பலி ஆராதனையில் அல்லது வேறு எவ்வித ஆராதனையிலும் கிறிஸ்துவின் சரீரத்தை வழங்க முடியாது ஏனென்றால் அது “எல்லாக் காலத்திற்கும்” ஒரே பலியாக செலுத்தப்பட்டு (வசனம் 12) முழுமையான இரட்சிப்பை

அளிக்கிறது (9:26-28; 10:14).

**வசனம் 18. இவைகள் மன்னிக்கப்பட்டது** அல்லது "பாவமன்னிப்பு" போன்ற அதே கருத்து தேவனின் பாவ நினைவு "இனி இல்லை" என்பதாகிறது (அப். 2:38). இது இப்போது கிறிஸ்துவில் நிறைவேற்றப்படுகிறது. இறுதி நியாயத்தீர்ப்பிற்கு நாம் காத்திருக்க வேண்டியதில்லை; சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதில் நாம் பாவங்களுக்கான நிவாரணத்தைக் கொண்டிருக்கிறோம். ஒருமுறை அது நிறைவேற்றப்பட்டிருக்கிறது, **பாவத்தினிமித்தம் இன்னும் ஒரு பலி** தேவையற்றது.

இந்தப் பகுதியுடன், நிருபத்தின் உபதேச பாகம் முடிவடைகிறது. புத்தகத்தின் எஞ்சியவை விசுவாசத்தின் எடுத்துக்காட்டுகள் மீதும் நமது விசுவாசத்தின் பரிபூரணரான கிறிஸ்துவைப் பின் தொடர்கிறதிலும் கவனம் செலுத்துகிறது.

## தேவனிடம் சேரும் உயர்ந்த சிலாக்கியம் (10:19-39)

இந்தப் பகுதியுடன், "தொழுதுகொள்ளத் தயாராக இருப்போமாக" என்று அழைக்கப்படக்கூடிய ஒரு பிரிவை நாம் தொடங்குகிறோம்.[37] "தொழுது கொள்ளுதல், விசுவாசம் மற்றும் மனஉறுதி ஆகியவற்றிற்கு அழைப்பு"[38] என்று ஒரு வர்ணனையாளர் 10:19-12:29-ன் அவரது விவாதத்தில் தலைப்பிட்டார். இப்போது எபிரெயரின் கோட்பாட்டு அறிவுறுத்தல் பெரும்பாலும் முடிவுற்று, விசுவாச நடைக்கு நடைமுறை ஆலோசனை பின்பற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. எப்போதும் புதிய ஏற்பாடு செயல்பாடுகளை உபசேதங்களுடன் இணைக்கிறது. உபசேதம் தனித்து நிற்க முடியாது; நமது சொந்த வாழ்க்கைக்காகக் கிறிஸ்துவின் போதனையின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள விருப்பம் இருக்க வேண்டும். இந்த அறிவுறுத்துகிற (புத்திமதி) பிரிவு கிறிஸ்துவின் இரத்தத்தின் செயல்திறனையும் (9:11-28) அவருடைய பலியின் நிரந்தர வல்லமையையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது (10:1-18).[39]

கிரேக்க உரை ஒரு நீண்ட, தொடர்ச்சியான வாக்கியமாக, வசனம் 19-ல் தொடங்கி வசனம் 25 வரை தொடர்கிறது. வசனம் 19 பொதுவாக ஒரு புதிய பகுதியை குறிக்கும் ஒரு வலுவான வார்த்தையான "ஆகையால்" என்ற வார்த்தையுடன் 4:14, 9:1, 23-ல் உள்ளது போல ஆரம்பமாகிறது. இது "ஒரு அறிக்கையில் இருந்து ஒரு வேண்டுகோளாக மாறுகிறது."[40] 19 முதல் 21 வரை மூன்று முறை, வசனங்கள் "ஆனபடியினால்" என்ற கருத்தைக் கொண்டுள்ளன. இது 20-ம் வசனத்தில் உட்கிடையாக இருக்கும்போது, 19 மற்றும் 21 வசனங்களில் குறிப்பாக இருக்கிறது. "ஒரு புதியதும் ஜீவனுமான மார்க்கம்" நமக்கு வந்திருக்கிறது என்பது கருத்து - இது உண்மை "ஆனபடியினால்" நாம் அதைப் பற்றி ஏதாவது செய்ய வேண்டும்.

**தைரியத்திற்கான காரணம் (10:19-25)**

**[19]ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில்
பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின்
வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு
உண்டுபண்ணினபடியால், [20]அந்த மார்க்கத்தின்வழியாய்ப்
பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத்
தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், [21]தேவனுடைய
வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர்
இருக்கிறபடியினாலும், [22]துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட
இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட
சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதய தோடும் விசுவாசத்தின்
பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். [23]அல்லாமலும், நம்முடைய
நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல்
உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம்பண்ணினவர்
உண்மையுள்ளவராயிருக்கிறாரே. [24]மேலும், அன்புக்கும்
நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து;
[25]சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும்
விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்;
நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ
அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்.**

**வசனம் 19. நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்**, என்பது முதலாவது "ஆனபடியினால்" ஆகும். இது மன நிறைவினால் வந்த தைரியம் ஆகும். நமக்கு அந்த மார்க்கம் உறுதிப்படுத்தப்பட்டு இருக்கிறபடியால், நாம் அதில் பிரவேசித்து அதனுள் வாசம் செய்ய வேண்டும்.

கிறிஸ்து தம்மைப் பின்பற்றுவோருக்காக அளித்த ஏராளமான நலன்களில் அவர்கள் இணைந்து பங்கேற்றல் அல்லது ஐக்கியத்தைக் குறிக்கிற இந்த நிருபத்தைப் பெற்றவர்கள் **சகோதரர்கள்** ஆவர். சகோதரர்களாக, அவர்கள் தேவனுடன் "சக வேலையாட்கள்" அல்லது "உடன் வேலையாட்கள்" (1 கொரி. 3:9; பார்க்க KJV). எபிரெயரில் வலியுறுத்தப்பட்ட ஆராதிப்பதற்கான புதிய மார்க்கம் "சகோதரர்களுக்கு," "பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களுக்கு" மட்டுமே திறந்திருக்கிறது (3:1).[41] இது ஆசிரியர் தனது வாசகர்களுடன் தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட உயர்ந்த சொல்லாகும்.

4:16 ல் கூறப்பட்டுள்ளபடி, "தைரியத்துடன்" இப்போது தேவனிடத்தில் சேரலாம். கிறிஸ்துவில் "நன்மையான நம்பிக்கை" இருப்பதால் அத்தகைய நம்பிக்கை சாத்தியமாகும் (7:19). எபிரெயர் ஆய்வு மூலம் நாம் கற்றுக் கொண்ட அத்தகைய அறிவினால் நம்பிக்கையும் தைரியமும் முழுமையாக அருளப்பட்டிருக்கிறது.

மன்னிக்கப்பட்ட ஜனங்கள் தேவனை ஆராதிக்க வரும்போது, அவர்கள் அவரிடம் சேர பயப்பட வேண்டிய அவசியம் இல்லை.

நமது நம்பிக்கை இந்த உண்மைகளை உள்ளடக்கியிருக்கிறது:

- பரிசுத்த ஸ்தலத்திற்குச் செல்லும் மார்க்கம் கிறிஸ்து வழியாகக் கிடைக்கிறது.
- கிறிஸ்து தமது சொந்த இரத்தத்தினாலேயே பிரவேசித்திருந்தார்.
- நமக்காக வேண்டுதல் செய்ய அவர் என்றென்றும் ஆசாரியராக வாழ்கிறார் (7:25).
- அவருடைய பாவநிவாரண இரத்தத்தின் தகுதியினால், நாம் அவரைப் பின்பற்ற அனுமதிக்கப்படுகிறோம். "தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு" நமக்காகக் காத்திருப்பதாக உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது (2 கொரி. 5:1).

இந்த உத்தரவாதங்களில் உள்ள நமது விசுவாசத்தின் விளைவாக, நாம் ஏற்கனவே தேவனோடு வாசம்பண்ணுவதாக இருப்பதாக உணர வேண்டும்.[42]

எபிரெயரில் ஏற்கனவே கற்பித்த சில கருத்துகளின் சுருக்கமாக 19 முதல் 21 வசனங்களில் காணப்படுகிறது. ஒரு விவாதத்தைப் பற்றிய ஒன்றிற்கும் மேற்பட்ட சுருக்கம் கேட்கிற ஒருவனுக்குக் கருத்துகளை நினைவில் வைத்துக் கொள்ள உதவும். இந்த வசனங்கள் தைரியம், புதிய மார்க்கம் மற்றும் நமது புதிய பிரதான ஆசாரியன் உதவி ஆகியவற்றை வலியுறுத்துகிறது.

தேவனை ஆராதிக்கும்போது, முன்னனாள் பிரதான ஆசாரியனைத் தவிர எல்லாருக்கும் தடை விதிக்கப்பட்டிருந்த **பரிசுத்த ஸ்தலத்தில் நாம் இப்போது பிரவேசிக்க** முடியும். எபிரெயர் 9:3 இந்த இடத்தை மகா பரிசுத்த ஸ்தலம் என்று குறிப்பிடுகிறது. இப்போது நாம் ஆவிக்குரிய ஆராதனையில் தேவனை அணுகி, விசுவாசம் மற்றும் ஜெபத்தினால் ஆவிக்குரிய ரீதியில் பரலோகத்திற்குச் செல்ல முடியும். **இயேசுவின் இரத்தத்தால்** நாம் இதைச் செய்ய முடிகிறது.

**வசனம் 20.** இங்கு நாம் ஒரு மார்க்கத்திற்கு நம்பிக்கையை அளிக்கிற "ஆனபடியினால்," என்ற பதம் மறைமுகமாக குறிப்பிடப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இயேசு நமக்கு ஒரு **புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை** அளித்திருக்கிறார். அவரே "வழி" (யோவான் 14:6). "புதியது" (πρόσφατος, *ப்ராஸ்ஃபடோஸ்*) என்பது புதிய திராட்சை, புதிய ஆலிவ், புதிய மீன், புதிய நீர், அல்லது சமீபத்தில் நடந்த ஏதாவது ஒன்றைக் குறிக்கும் சொல்லாகும்.[43] அந்த மார்க்கம் "புதியது" ஏனென்றால் கிறிஸ்து வந்து, பிதாவிடம் செல்லும் "வழியை," வாசலைத் திறக்கும் வரையில் அது அறியப்படவில்லை. அவருடைய மரணத்தின் மூலம் அவர் நமக்குப் பரலோகத்தைத் திறந்தார். **அவருடைய மாம்சம்** சிலுவையில் கிழிக்கப்பட்டது; அவர் மரிக்கும்

போது **திரைச்சீலை** கிழிந்தது (மத். 27:51 பார்க்க). இந்தப் புதிய வழி பழைய வழிக்கு முரண்பாடானதாக உள்ளது, இப்போது நிறைவேற்றப்பட்டு மாற்றப்பட்டுள்ளது. இயேசுவினால் அது எப்போதும் புதிய "ஜீவ வழி" ஆக உள்ளது; எந்த மரணப் பலியும் அதைத் திறக்க முடியாது. நமது சொந்த தகுதி அல்லாமல், இயேசுவின் தகுதியே நமக்கு இந்த வாசலை அளித்தது (வசனம் 19). நமது கர்த்தராகிய கிறிஸ்து தொடர்ந்து நமது தேவைகளைப் பூர்த்திச் செய்கிறார் என்பதால் அது "புதியது" மற்றும் "ஜீவனுள்ளது" (பார்க்க 7:25).

பரிசுத்த ஸ்தலத்தில் "திரை" வழியாக மட்டுமே பிரவேசிக்க முடியும் என்பது போல் கிறிஸ்துவின் சரீரமாகிய ஆவிக்குரிய "திரை" **மூலம்** நமக்குப் பிரவேசம் அளிக்கப்பட்டிருக்கிறது. அவருடைய மரணம் இந்த பகுதியில் மீண்டும் சித்தரிக்கப்பட்டுள்ளது, மேலும் ஆசிரியர் அதன் அவசியத்தைக் காண்பிக்கிறார். கூடாரத்தில் உள்ள திரை தேவனிடம் இருந்து மனிதர்களைப் பிரித்தது, ஆனால் இப்பொழுது இயேசுவின் சரீரம் கிழிந்து, பிதாவினிடத்திற்கு வழியைத் திறந்தது. ஹியூக்ஸ் கூறினார்,

> சிலுவையில் அவரது மரணத்தின் தருணம், நமது பாவநிவாரணத்தின் தருணமாகும், தேவன் கிரியை செய்திருந்தார் என்பதையும் கடைசியாக அவரது பரிசுத்த பிரசன்னத்திற்கான வழி திறக்கப்பட்டது என்பதையும் குறிக்கும்படியாக, அச்சுறுத்தி தடையாக இருந்த திரை மேலிருந்து கீழ் கிழிந்தது [மாற்கு 15:38].[44]

**வசனம் 21.** அடுத்துள்ள "ஆனபடியால்" என்பது **மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும்**, என்பதாகும். இது ஒரு வழங்குனரின் நம்பிக்கையாகும். புதிய உடன்படிக்கைக்குரிய வழிபாட்டுப் பாக்கியங்களைப் பார்த்தோம்; அடுத்து, நமது மகா ஆசாரியர் நம்மை எவ்வாறு ஆசீர்வதித்தார் என்பதை ஆசிரியர் விவரிக்கிறார்.

நமது புதிய "மகா ஆசாரியர்" **தேவனுடைய வீட்டின்மேல்** அதிகாரியான கிறிஸ்து, அவருடைய சபையின் தலைவர் ஆவார் (வசனம் 1; எபே. 1:22, 23; 1 தீமோ. 3:15; பார்க்க எபி. 3:6; 8:1). "தேவனுடைய வீடு" என்பது கிறிஸ்தவ யுகத்தில் தேவனுடைய மக்களைக் குறிக்கிறது (பார்க்க 3:6). "மகா" என்பது ஆரோனிய ஆசாரியத்துவத்தின் முழுமையுடனும் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தலாம், ஆனால் அது நிச்சயமாக கி.பி. 70-ல் எருசலேமின் வீழ்ச்சிக்கு முன்னர், சில பிரதான ஆசாரியர்கள் மத்தியில் இருந்த சிறப்பின் குறைபாட்டை வலியுறுத்துகிறது.

**வசனம் 22.** நாம் **சேரக்கடவோம்** என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறோம். திரை என்னும் தடை நீக்கப்பட்டு, நாம் நமது ஜெபங்களுக்குப் பதில் கிடைக்கும் என்று தெரிந்து கொண்டு,

**விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடு** “சேரக்கூடிய” ஆற்றலைக் கொண்டுள்ளோம். இது “தொடர்ந்து நெருங்கி சேரக்கடவோம்” என்று முறையாக வழங்க முடியும்.[45] வேறு விதமாகக் கூறினால் மனந்திரும்புதலின் வாழ்க்கை நமக்கு இயல்பானதாக இருக்க வேண்டும். உண்மையில் வார்த்தைகள் நம்மை “சேரக்கடவோம்” என்று கட்டளையிடுகின்றன.[46] இஸ்ரவேலர்கள் சீனாய் மலையில் தேவனை அணுகுவதற்கு முன்பு தங்களைச் சுத்திகரிக்க வேண்டியிருந்தது (யாத். 19:10), ஆகையால் நாமும் அவரை அணுகுவதற்கு இருதயத்தில் சுத்திகரிக்கப்பட்டிருக்க வேண்டும் (1 பேதுரு 1:22, 23).

நாம் ஒரு இரக்கமுள்ள, தாழ்ந்தோரிடத்தில் கருணை காட்டுகிற ஆவியை, ஒருவேளை மனத்தாழ்மையை, எழுத்தாளனால் **நாம்** என்று சொல்லப்படுகிறபோது பார்க்கிறோம். அவன் அறைகூவல் விடுத்தபோது தன்னுடைய வாசகர்களுடன் தன்னை அடையாளப்படுத்தி, “நாம் ஒன்றாகச் சேர்ந்து முன்னேறுவோம்” என்று கூறினான்.[47] வசனங்கள் 22 முதல் 24 வரை மூன்று முறை காணப்படுகிற நிகழ்கால வினைகளில் இது முதலாவதாக இருந்து, தொடர்ச்சியான செயலை அல்லது ஊக்கத்தைக் குறிக்கிறது.

பழைய ஏற்பாட்டு ஆசாரியன் கூடாரத்தையும் அதின் மகா பரிசுத்த ஸ்தலத்தையும் அணுகியது போல, ஆனால் ஒரு முழுமையான மற்றும் உண்மையான வழியில் நாம் தேவனிடத்திலும் “கிருபாசனத்தண்டையிலும்” “சேரக்கடவோம்” (4:16). ஆராதித்தலுடன் தேவனை அணுகும்போது, உண்மையில் நாம் செயல்படும் ஆசாரியர்களாக இருக்கிறோம்.

முன்னோக்கிச் செல்லும் பொருட்டு ஆசிரியர் நமக்குத் தேவையானவற்றை வழங்கினார்: “விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடு” **உண்மையுள்ள இருதயம்**. இது இல்லாமல், நாம் ஆவிக்குரிய ஈடுபாட்டுடன் தேவனை அணுகத் தொடங்க முடியாது. இந்தச் சொற்றொடர் பரிபூரண நேர்மையுடன், கபடம் இல்லாத இதயம் கொண்ட ஒருவனை விவரிக்கிறது (பார்க்க யோவான் 4:24). நாம் பாவத்தின் எல்லா அசுத்தங்களும் நீங்கும்படியாக, இயேசுவின் இரத்தத்தால் **தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாக** வர வேண்டும். நம் இருதயம் நம்மைக் கண்டனம் செய்தால், நமக்கும் தேவனுக்கும் இடையில் ஒரு தடையை நாம் கொண்டுள்ளோம். எனினும், குற்ற உணர்வின் தடையைத் தேவனுடைய இரக்கத்தினால் இயேசு மூலம் மேற்கொள்ள முடியும், ஏனென்றால், “தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார்” (1 யோவான் 3:20). பாவத்திற்கான எல்லாத் தூண்டுதல்களையும், நம் பலவீனத்திற்கான காரணங்கள் அனைத்தையும் அவர் அறிந்திருக்கிறார். அவருடைய குமாரனின் தொடர்ச்சியான வேண்டுதலோடு, அவருடைய மகத்தான மற்றும் அருமையான

பலியாக அவருடைய குமாரனைத் தந்தருளியதால், நிரூபிக்கப்பட்ட அவருடைய கிருபையின் அடிப்படையில் இந்த முழுமையான அறிவுடன் அவர் மன்னிக்க முடியும் (7:25).

தேவனை அணுகுவதற்கு "உண்மையுள்ள இருதயத்தோடு" மேலும் **நமது சரீரம் சுத்த ஜலத்தால் கழுவப்பட்டிருக்க வேண்டும்**. விசுவாசமின்றி நாம் தேவனை அணுக முடியாது. நமது விசுவாசம் "பூரண நிச்சயத்தோடு," "கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் மற்றும் பழைய உடன்படிக்கையில் இருந்து புதிய உடன்படிக்கையின் மேன்மை பற்றிய ஒரு உறுதியான மற்றும் அசையாத நம்பிக்கையைக்" கொண்டிருக்க வேண்டும்.[48] எபிரெய கிறிஸ்தவர்களைப் போலவே, தேவனை அணுகுவதற்காக ஞானஸ்நானத்தின் மூலம் அவருடைய இரத்தத்தால் "கழுவப்பட்டிருக்கிறோம்" (பார்க்க வெளி. 1:5, 6; அப். 22:16).

வசனம் 22-ல் "ஜலம்" பற்றிய இந்தக் குறிப்பு ஞானஸ்நானத்திற்கான ஒரு குறிப்புரையாக இருக்க வேண்டும்.[49] ஞானஸ்நானம், அல்லது முழுகுதல், பாவங்களை நிவிர்த்திச் செய்வதற்காகச் செய்யப்படுகிறது என்பது மிகவும் தெளிவாக உள்ளது (அப். 2:38; 22:16). ஒரு வர்ணனையாளர் குறிப்பிட்டார், "ஒருவன் நெருங்கிச் சேரும் முன்பு, பொதுத் தன்மை உள்ள சில துவக்க முறைமைகள் தேவைப்படுகிறது."[50] இரத்தம் மற்றும் ஜலம் ஆகியவற்றின் முக்கியத்துவம் மிகைப்படுத்தப்பட முடியாது. மேலும் யோவான் ஜலத்திற்கும் இரத்தத்திற்கும் அதிகக் கவனம் செலுத்தினான் (1 யோவான் 5:7, 8).

பாவநிவிர்த்தி நாளில் நியமிக்கப்பட்ட ஆசாரியன் "ஜலத்தில் ஸ்நானம் பண்ண வேண்டும்" (லேவி. 16:4). ஜலத்தினால் செய்யப்பட்ட புதிய சுத்திகரிப்பு என்பது சரீரத்தின் அழுக்குகளை வெறுமனே கழுவுதல் அல்ல; மாறாக, நமது மனச்சாட்சியைச் சுத்திகரிக்கும் இரட்சிப்போடு இணைக்கப்பட்டுள்ளது (1 பேதுரு 3:21). ஞானஸ்நானம் என்பது பொதுவாகக் கழுவுதல் என்ற சொல்லுடன் குறிப்பிடப்படுகிறது (அப். 22:16, எபே. 5:26, தீத்து 3:5).[51] "தெளி[த்தல்]" ஞானஸ்நானத்துடன் நேரடியான தொடர்பு கொண்டதில்லை, ஆனால் அது "மனந்திரும்புதலுக்கும் ஞானஸ்நானத்திற்குமான குறிப்புகளைக் கொண்ட மாற்றத்திற்கான செயல்பாட்டினை" குறிப்பதாக இருக்கிறது.[52] இந்தப் பகுதி, "கிறிஸ்துவின் பாவ நிவாரண வேலையில் உள்ள விசுவாசத்தின் மூலம் தன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்ற உணர்வைப் பெற்ற பிறகு, [கிறிஸ்தவன்] ஆராதிப்பதற்காக ஒன்றுகூட வேண்டும். அதன் பிறகே அவன் கிறிஸ்தவ ஞானஸ்நானத்தில் பங்கு பெறுகிறான்."[53] என்று நமக்குக் கூறுகிறது. "தூய ஜலம்" என்பது நிச்சயமாக ஞானஸ்நானத்தின்போது ஒருவனுடைய பாவம் அகற்றப்படுவதைக் குறிக்கிறது. ஒரு யூத

முறைமையின் நிலைப்பாட்டிலிருந்து கூட, ஞானஸ்நானம் பெற்றவன் தூய்மையானவன். எனினும், ஒரு யூத கழுவுதலுக்குப் பின்னர் ஜலம் தூய்மையற்றதாகக் கருதப்பட்டது போல, அவனுடைய முழுகுதலுக்குப் பின்னரும் ஜலம் தூய்மையற்றதாக இருப்பதில்லை. மேலும், லேவி கோத்திர முறைமையின் கீழ் போலக் கிறிஸ்தவனின் தூய்மை தற்காலிகமானதல்ல, கிறிஸ்துவில் உள்ள ஒருவன் தொடர்ந்து அவருடைய இரத்தத்தால் சுத்திகரிக்கப்படுகிறான் (1 யோவான் 1:7).[54]

பழைய ஏற்பாட்டில் இரத்தம் தெளித்தல் பெரும்பாலும் சுத்திகரிப்புடன் தொடர்பு படுத்தப்பட்டிருந்தது, ஆகவே புதிய ஏற்பாட்டில் இயேசுவின் இரத்தம் ஒரு அடையாள அர்த்தமாகப் பயன்படுத்தப்படுகிறது (எபி. 9:13, 14; 11:28). முழு மனிதனும் பரிசுத்தமாக்கப்பட வேண்டும்; எனவே, மனச்சாட்சி (ஆவி) மற்றும் உடல் சம்பந்தப்பட்டிருந்தது (3:5). ஒரே வசனத்தில் இயேசுவினுடைய "தெளிக்கப்பட்ட" இரத்தம், கீழ்ப்படிதல் மற்றும் ஆவியானவரின் பரிசுத்தமாக்குதல் ஆகியவற்றை 1 பேதுரு 1:2 இணைக்கிறது. இது இரட்சிப்பு எவ்வாறு பெறப்படுகிறது என்பதற்கான தெளிவாக விளக்கமாகும்.

கிறிஸ்துவின் உடன்படிக்கை நாம் பரலோகத்தில் பிரவேசிக்கக் கூடிய "புதிதும் ஜீவனுமான மார்க்கம்" ஆகும். அவருடைய மரணம் மற்றும் மத்தியஸ்தம் மூலம், அவர் முன்பாகச் சுத்த மனச்சாட்சியுடனும் பரிசுத்த இருதயத்துடனும் நாம் தேவனுடைய பிரசன்னத்திற்குள் பிரவேசிக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். இந்தப் பெரிய வரம் நம்முடைய விசுவாசம் மற்றும் தேவனுக்கு ஊழியம் செய்வதற்கான வாஞ்சை இவற்றின் அடிப்படையாகும்.

**வசனம் 23.** கோட்பாடு விஷயங்களைப் பற்றிய அவனது விவாதம் முடிவடைந்து, எழுத்தாளன் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தைச் சார்ந்திருப்பதன் மூலம் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவர்களாய் இருப்பதற்கான அடிப்படைகளுக்குத் திரும்பினான். எபிரெயர் 10:23-25, முதலாவது வசனம் 22-ல் கொடுக்கப்பட்டுள்ள "இருக்கக்கடவோம்" என்பதுடன் இன்னும் இரண்டு தலையீடுகளைச் சுற்றிச் சுழல்கிறது. வசனம் 25 நான்காவது "இருக்கக்கடவோம்" பகுதி என்று அழைக்கப்பட முடியும்.

இந்தப் பிரிவில் 23-ம் வசனம் இரண்டாவது **இருக்கக்கடவோம்** என்பதுடன் தொடங்குகிறது. "இப்போது நமது சரீரங்கள் சுத்த ஜலத்தால் கழுவப்பட்டு இருக்கின்றன, விசுவாசத்தில் உறுதியாயிருக்கக்கடவோம்" என்பது கருத்து.

ஆசிரியர் கிறிஸ்தவர்களை **உறுதியாயிருக்க** ஊக்கப்படுத்தினார். இது எபிரெயரின் முக்கியக் கருத்து. 3:6-ன்படி, நம்பிக்கையுடன் பற்றிக்கொண்டிருப்பது ஒருவனுக்குச் சபையின் அல்லது தேவனுடைய வீட்டின் .ஒரு அங்கமாக இருக்க உதவுகிறது. முடிவுபரியந்தம்

உறுதியாய்ப்பற்றிக் கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம் என்று நாம் 3:14-ல் வாசிக்கிறோம். ஞானஸ்நானம் பெறப்பட்டிருகிற பரிசுத்தவான்கள் பாவத்தில் தொடராதபடி எச்சரிக்கப்படுகிறார்கள் என்பது இங்கே ரோமர் 6:1-5 இல் உள்ள பகுத்தறிதலுக்கு ஒத்திருக்கிறது. தேவனது வாக்குறுதிகளைக் காப்பதில் அவரது உண்மைத்தன்மை அனைத்தையும் பயனுள்ளதாகச் செய்கிற நித்திய ஜீவனுக்கான ஆசீர்வாதம் நமக்கு ஒரு ஊக்கமாக இருக்கிறது.

கிறிஸ்தவ வாழ்க்கையில் "உறுதியாய்ப் பற்றிக்கொள்வது" என்பதற்கான வலியுறுத்தல் அவசியம். கல்வனித்துவப் போதனைகளின்படி, உண்மையில் மனமாற்றம் அடைந்த ஒருவர் வேறுவிதமாகச் செய்ய முடியாது. நிச்சயமாக, ஒருவன் தேவனின் கிருபையிலிருந்து விலக முடியாது என்றால், விசுவாசத்தைப் பற்றிக் கொள்வது பற்றிக் கவலைப்படச் சரியான காரணம் இருக்காது.

**அறிக்கையிடுதல்** என்பது கிரேக்கத்தில் உண்மையாக இருக்க ஏற்றுக்கொண்ட, ஒப்புக்கொண்ட, அல்லது வெளிப்படுத்திய என்ற பொருளுள்ள ὁμολογία (*ஹாமோலோகியா*) ஆகும். கிறிஸ்துவில் நம்முடைய விசுவாசத்தை ஒருமுறை ஒப்புக்கொள்வது என்பது தீமோத்தேயு கர்த்தருடன் நடக்க ஆரம்பித்தபோது அவன் செய்த "நல்ல அறிக்கை" என்பதைப் போலவே இருக்கலாம். பவுல் பொந்திய பிலாத்துவுக்கு முன்பாக இயேசு அனுமதிக்கப்பட்டதுடன் ஒப்பிட்டான் (1 தீமோ. 6:12, 13). தேவ குமாரனாக ஒருவன் தனது விசுவாசத்தையும் நம்பிக்கையையும் கர்த்தருக்குள் வெளிப்படையாக அறிவித்திருந்தால், அவன் தனது விசுவாசத்தில் வாழ்வதன் மூலம் திறந்த ஒப்புதலைத் தொடரக் கடமைப்பட்டுள்ளான். அவனைப் போன்று, வலுவாக இருக்க ஊக்கம் தேவைப்படுகிற மற்றவர்களிடம் விசுவாசத்தை வெளிப்படுத்துவதன் மூலம் அவன் இதன் ஒரு பகுதியைச் செய்கிறான் (பார்க்க 3:12, 13). நம் ஆண்டவர் நமக்கு உண்மையுள்ளவராக இருக்கிறார், மேலும் நாமும் அவரிடம் அவ்வாறே இருக்க வேண்டும்.

**நம்முடைய நம்பிக்கையை** "அறிக்கையிடுதல்" என்பது எபிரெயரின் மற்றொரு அடிப்படைக் கருத்து. "நம்பிக்கை" என்பது நடக்க இருக்கிற முழுக் கிறிஸ்தவ மதத்தை உள்ளடக்கியது; தேவனைப் பற்றிய நமது அறிவு நம்பிக்கையூட்டுகிறது. தேவன் அவருடைய வாக்குறுதிகளுக்கு உண்மையுள்ளவர் என்பதால், நம் வாழ்வில் தடைகள் இருந்தபோதிலும் இந்த நம்பிக்கையைப் பராமரிக்க முடியும்.

நம்பிக்கை என்பது விசுவாசத்தின் அடிப்படை அம்சமாகும் (11:1). அவர் "தம்மைத்தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவர்" என்று நம்பாமல் ஒருவனுக்கு உண்மையான விசுவாசம் இருக்க முடியாது (11:6). நம்முடைய நம்பிக்கையின் மையம் கிறிஸ்துவே (6:19, 20). அவருக்குள் நாம் மகிழ்ச்சி அடையக்கூடிய உண்மையான

நம்பிக்கையைக் கொண்டிருக்கிறோம் (3:6; NJKV). நம்பிக்கை என்பது நமது ஆத்துமாவிற்கு ஒரு "நங்கூரம்" ஆகும் (6:11, 12, 18-20).

**வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்** என்று நாம் அறிந்திருப்பதால், நாம் "உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்க" முடியும். அது பரலோகத்தில் ஓய்வு, மன்னிப்பு, அல்லது நம்முடைய வேண்டுதல்களுடன் இரக்கத்தின் சிங்காசனத்தை அணுகும் உரிமை பற்றியதாக இருந்தாலும், தேவன் அவரது வார்த்தையைக் காக்கிறார். தேவன் நம்மோடு இருக்கிறது போல் நாம் தடுமாற்றம் இல்லாமல் விசுவாசமாக இருக்க வேண்டும். அவருடைய உறுதியான விசுவாசம் நமக்கு நம்பிக்கை அளிக்கிறது.

**வசனம் 24.** இந்த வசனத்தில் மற்றொரு "இருக்கக்கடவோம்" காணப்படுகிறது: **மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து.** "நாம் ஒவ்வொருவரும் எவ்வாறு மற்றவர்களை அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் தூண்டலாம் என்பதை நாம் பார்க்க வேண்டும்" என்று NEB கூறுகிறது.

"தூண்டுதல்" என்பது பறிமுதல் செய்தல் அல்லது "பொருத்தம்" என்பதற்குப் பயன்படும் ஒரு வலிமையான வார்த்தையாகும். "ஏவப்படும்படி" (KJV)என்ற வார்த்தை இன்று ஒரு எதிர்மறை கருத்தைக் கொண்டிருக்கவில்லை என்றால், அது பயன்படுத்த சிறந்த வார்த்தையாக இருக்கலாம்.[55] இந்தச் சூழலில் παροξυσμός (*பாரோக்ஸஸ்மாஸ்*) என்ற வார்த்தை ஒருவருக்கொருவர் அதிக அன்பைத் தோற்றுவித்து, ஊழியத்தின் நற்கிரியைகளுக்கு மற்றவர்களை வலுவாக வலியுறுத்தல் என்பதைக் குறிக்கிறது. எபிரெயரில் இந்த வெளிப்பாட்டின் அர்த்தம் "எரிச்சலூட்டும் சாதகமற்ற உணர்விற்கு" மாறாக ஒரு நல்ல முடிவுக்கு ஏவப்படுதலாகும்.[56]

கிறிஸ்தவ அன்புக்கு நடைமுறை விளைவு இருக்க வேண்டும். அப்போஸ்தலர் 15:39 இல் *paroxusmos, பாரோக்ஸஸ்மாஸ்* என்பது "அவர்களுக்குள்ளே கடுங்கோபம்" என்று வழங்கப்பட்டுள்ளது. நாம் ஒருவரையொருவர் "கோபம் கொள்ளும்" (KJV) கட்டம் வரை ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்துவது என்பது இதன் பொருள் ஆகுமா? கடிந்து கொண்ட ஒருவன் நற்கிரியைகளைச் செய்யவில்லை என்றால், நமது வலியுறுத்தல் சண்டைக்கு வழிவகுக்கும். 1 கொரிந்தியர் 13:5 கிறிஸ்தவ அன்பு "சினம் அடையாது" என்று கூறுகையில் அதே வார்த்தையை உபயோகிக்கிறது. நாம் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்த தூண்டும் பொழுது, வேதத்தோடு சேர்ந்து, ஒவ்வொரு வலுவான மற்றும் சரியான உணர்ச்சியைப் பயன்படுத்த வேண்டும்.

வசனம் 24 இல் உள்ள "அன்பு" "கிறிஸ்துவின் அன்பு" என்றால், பின்பு வசனம் 25 இது ஊக்குவிக்கப்பட்டு, கிறிஸ்துவின் வழிபாடு நடைபெறுகிற வழிபாட்டு ஆராதனைகளில் நாம் தொடர்ந்து பங்கு பெற வேண்டும் என்று கூறுகிறது. அது ஒருவருக்கொருவர் அன்பாக

இருந்தால், பின்னர் அதே நடவடிக்கை கோரப்படுகிறது: சகோதரர்களிடம் அன்பில் வளர நாம் தொடர்ந்து பரிசுத்தவான்களோடு ஆராதிக்க வேண்டும்.

**வசனம் 25.** அடுத்து வருகிற இருக்கக்கடவோம் அடையாள அர்த்தமாக உள்ளது: **நாம் சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல்** இருக்கக்கடவோம் என்று குறிப்பிடுகிறது. இந்த வசனத்தில் உள்ள ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் அதாவது “சபை கூடிவருதல்” மற்றும் **ஒருவரை ஒருவர் ஊக்குவித்தல்** மூலம் உறுதிப்பாடு பெறப்படுகின்றது. “சபை கூடிவருதல்” என்பதற்கான ἐπισυναγωγή (*எபிசுனாகோகே*) என்ற வார்த்தை “ஒரு கூட்டத்திற்கு ஒன்றாக வருதல்” என்று பொருள் தருகிறது. யாக்கோபு 2:2 உடன் சேர்ந்து, முதல் நூற்றாண்டு சபையினருக்கு “ஜெப ஆலயங்கள்” (συναγωγή, *சுனாகோகே*) சந்திப்பு இடமாகப் பயன்படுத்தப்பட்டது என்று இந்தப் பத்தி குறிப்பிடலாம்.[57] முதலில் அந்தச் சொல் “கூட்டம்” என்று பொருள் தந்தது, ஆனால் அது “கூடி வருகிற இடம்” என்று அர்த்தம் கொள்வதாக வந்தது.[58] எனினும், எருசலேமின் ஜெப ஆலயங்களில் முழுக் குழுக்களின் கூட்டம் - அங்கு பல ஜெப ஆலயங்கள் இடம் பெற்றிருந்தன - மாற்றப்பட்டிருக்கலாம். அவர்கள் சந்திக்கும் வீடுகள் ஒருவேளை பின்னால் சபை கூடுதலுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இந்த வாய்ப்பின் அடிப்படையில், புதிய ஏற்பாட்டின் காலத்தில் அங்கு “சபைக் கட்டிடங்கள்” இருந்திருக்கவில்லை என்று கூறுவது முற்றிலும் உண்மையாக இல்லாமல் இருக்கலாம்.

ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தவும், புத்திசொல்வதற்கும் கிறிஸ்தவர்கள் ஒன்றாகச் சந்திக்க வேண்டியிருந்தது (வசனம் 24). இது நாடோறும் செய்யப்பட வேண்டும் என்று ஆசிரியர் வற்புறுத்தினார் (3:12, 13). வசனம் 25 “ஒன்று சேர்வதற்காக ஊக்குவிக்க வேண்டும்” என்று கூறாமல், “ஊக்குவிப்பதற்காக ஒன்றுசேர வேண்டும்” என்று கூறுகிறது. ஆரம்பக் காலக் கிறிஸ்தவர்கள் ஒன்று கூடாமல் எவ்வாறு ஒருவரையொருவர் ஊக்குவிக்கவும் பலப்படுத்தவும் முடியும்? உறுதியான விசுவாசத்திற்கு இந்தப் புத்திமதிகளை நிறைவேற்ற அவர்கள் சந்திக்க வேண்டியிருந்தது. ஆவிக்குரிய காரியங்களில் மேம்படச் செய்தல், புத்திமதி கூறுதல் மற்றும் ஊக்கப்படுத்துதல் ஆகியவை சபையின் அத்தியாவசிய நோக்கங்களாகும் (1 கொரி. 14:26-33). மற்ற விசுவாசிகளைத் தொடர்ந்து சந்திக்காதவன் கர்த்தருக்கு உண்மையுள்ளவனாய் இருக்கச் சாத்தியம் என்று ஆசிரியர் கருதவில்லை. “தனி மனிதன்” ஒரு விசுவாசியாக இருக்கலாம், ஆனால் அவன் பொதுவாக உறுதியுள்ள ஒருவனாக இருப்பதில்லை.

கர்த்தருடைய நாளின் வாராந்திர கூட்டத்தில் வெறுமனே வருகையை மட்டும் அதைப் போன்ற முக்கியமானதாக இந்த வசனம்

வலியுறுத்தவில்லை. மாறாக, சக கிறிஸ்தவர்களைப் பலப்படுத்த ஊக்கம் அளிக்க வேண்டும் என்று இந்தப் புத்திமதி கோருகிறது. எனவே, அவசர காலங்களில் சிறப்பு வழிபாட்டு ஆராதனைகள் பொருத்தமானதாக இருக்கும், ஏனென்றால், பரிசுத்தவான்கள் ஒன்று சேர்ந்து ஒரு பெரிய குழுவாகப் பரலோக பிதாவை அணுகுவதற்கு வரும்போது ஜெபத்தின் வல்லமையை யாரால் அளவிட முடியும்?

சபை கூடிவருதலை "விட்டுவிடுகிறது" (ἐγκαταλείπω, *எக்கட்டலிப்போ*) விசுவாச துரோகத்தின் ஒரு அடையாளம் - அல்லது விசுவாச துரோகம் சீக்கிரத்தில் நிகழும் என்பதற்கான அடையாளம். "விட்டுவிடுகிறது" என்ற வார்த்தையின் பொருள் "பின்னால் விட்டுவிடு" அல்லது "கைவிட" என்பதாகும். பரிசுத்தவான்களின் கூடுதலைப் புறக்கணிப்பது விசுவாசத்தை முற்றிலுமாக விட்டுவிடுதலுக்குக் கொண்டு செல்கிறது. இந்த நிருபத்தின் ஆரம்ப வாசகர்கள் பிரமாணத்தின்படி தேவாலய தொழுகைகளில் தொடர வலுவான யூத தாக்கங்கள் மூலம் அவர்களுக்குக் கொடுத்த அழுத்தங்களுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பது எழுத்தாளனின் அறிவுரையாக இருந்தது. அவர்கள் இன்னும் விட்டுவிடவில்லை, ஆனால் இதுபோன்ற சோதனைகளில் கடந்த காலத்தில் உண்மையுள்ளவர்களாய் இருந்தார்கள் (வசனங்கள் 32-36).

**நாளானது சமீபித்துவருகிறது** என்று இந்த வாசகர்கள் பார்த்தது போல் சகோதர ஊக்கப்படுத்துதல் அதிகமாகக்கூடத் தேவைப்படும். ஒருவன் தனது சொந்த மரணம் அல்லது கர்த்தருடைய இரண்டாம் வருகை குறித்து "நாளானது சமீபித்துவருகிறது" என்பதாகப் பார்க்க முடியாது. போதிய ஆரோக்கியத்தில் இல்லாத அல்லது முதுமையும் பலவீனமும் ஆகிக்கொண்டிருக்கும் ஒருவன் மரணம் நெருங்குகிறது என்று புரிந்து கொள்ளலாம். எனினும், இந்த நிகழ்வுகளில் ஏதாவது ஒன்றைப் பற்றிய காலப்பகுதி குறித்த தெளிவான அறிவைப் பெற தேவனிடமிருந்து ஒரு வெளிப்பாடு தேவைப்படும்.

ஒரு திவ்விய வெளிப்பாடு, எருசலேமுக்கு வருகிற வீழ்ச்சியைப் "பார்க்க" கிறிஸ்தவர்களுக்கு உதவுகிறது; மத்தேயு 24, மாற்கு 13, மற்றும் லூக்கா 21 ஆகியவற்றில் தீர்க்கதரிசனங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இயேசுவின் கூற்றுகள், குறிப்பாக, "நாள் நெருங்கி வருவதற்கான" நேரத்தை அறியும் ஒரு வழியை யூதேய யூதர்களுக்குக் கொடுத்தன. அந்த "நாள்" ஆயிரக்கணக்கான யூதர்களுக்கு எருசலேமின் முற்றுகையாலும் அதன் வீழ்ச்சியாலும் கி.பி. 70 இல் ஆலயத்தின் அழிவுடன் கொண்டுவரப்பட்ட துன்பத்தைத் தருவதற்கான ஒரு பகுதியாக இருந்திருக்க வேண்டும்,

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை நாம் முன்னறிவிக்க முடியாது ஏனென்றால் அந்த நேரத்தைச் சுட்டிக்காட்ட எந்த

அறிகுறிகளும் இல்லை. தீத்து மற்றும் அவனது ரோம இராணுவத்தின் கைகளில் எருசலேமின் வீழ்ச்சி தொடர்பான அறிகுறிகள் இயேசுவின் தீர்க்கதரிசனங்களில் அவரால் கொடுக்கப்பட்டது - ஒரு கடைசிக் காலத்திற்கு அல்ல. எருசலேமின் முடிவு பற்றிய தீர்க்கதரிசனங்களை இயேசு கொடுத்தபோது, முடிவு காலத்தை அல்லது அவரது இரண்டாவது வருகை பற்றி அவருக்குக்கூடத் தெரியாது என்று அவர் அறிவித்தார் (மத். 24:36). என்ன நடக்கும் என்று அவர் விவரமாக அறிந்திருந்தார் என்பதால், அந்த நகரத்திற்காக இயேசு அழுதார் என்பதில் ஆச்சரியமில்லை (லூக். 19:41, 42). (பார்க்கவும் “மேலும் ஆய்வுக்கு: ‘அடையாளமும்’ மற்றும் ‘சமீபமாக இருக்கும் அந்த நாள்’” பக்கங்கள் 237-39 இல்.)

மோசஸ் ஸ்டூவர்ட் வசனங்கள் 23 முதல் 25 வரை என்ன கூறுகின்றன என்பதற்கு “‘சகோதரர்களே, விசுவாசதுரோகத்திற்கு எதிராகப் பாதுகாக்க உங்கள் வல்லமையில் அனைத்தையும் செய்யுங்கள். மேலும் இது இன்னும் அதிகமாக, ஏனென்றால் யூத மதத்திற்குத் திரும்புவது இப்போது மிகத் தவறான நேரம்; காலம் சமீபமாய் இருக்கிறது, யூத கோவில் மற்றும் அரசு அழிக்கப்பட வேண்டும்.’”[59] என்ற ஒரு நல்ல சுருக்கத்தைக் கொடுத்தார்.

**எச்சரிக்கை: மரணத்திற்கு ஏதுவான பாவம் (10:26-31)**

**[26]சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல்,**
**[27]நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்.**
**[28]மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல்**
**இரண்டுமூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; [29]தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பானென்பதை யோசித்துப்பாருங்கள்.**
**[30]பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பாரென்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம்.**
**[31]ஜீவனுள்ள தேவனுடைய கைகளிலே விழுகிறது பயங்கரமாயிருக்குமே.**

ஒரு மொழிபெயர்ப்பாளரின் வேதவாக்கியங்களுக்கான இறையியல் கருத்துக்கள் 10:26-31 போன்ற ஒரு பகுதியின் அவரது புரிதலைப் பெரிதும் பாதிக்கும். இயற்கையாகவே, “ஒருமுறை

இரட்சிக்கப்பட்டவன், எப்போதும் இரட்சிக்கப்பட்டிருப்பான்" என்ற கோட்பாட்டை நம்புகிறவருக்கு இந்த உரையோடு ஒரு உண்மையான சிக்கல் இருக்கும். இது முதல் நூற்றாண்டில் மனம் மாறிய யூதர்களுக்கு மட்டுமே பொருந்தும்; யூதேயத்திற்குத் திரும்புகிறவர்கள் உண்மையில் ஒருபோதும் மாற்றப்படவில்லை என்று அவர்கள் நம்புகிறார்கள் என்று சிலர் கூறுவர். இந்தப் பகுதி இத்தகைய பொருளைக் கொண்டிருக்க முடியாது. நாம் கண்ட 6:4-6 இன் ஆய்வின்படி உண்மையாக மனம் மாறியவர்கள்கூட விழ முடியும்.

விசுவாச துரோகத்தின் கொடூரமான பாவத்தை மூன்று கருத்துக்களில் ஆசிரியர் விவரித்தான்.

**வசனம் 26.** இந்த வசனத்தில் பேசப்படும் பாவம் மனப்பூர்வமாகச் செய்யப்படும் பாவம். இது கலகம் பண்ணுவதில் தொடர்கிறது.

**ஆக** (γάρ, *ஹார்*) என்பது இந்த எண்ணத்தை முந்தைய பத்தியுடன் இணைக்கிறது. இந்த அச்சுறுத்தும் அறிக்கை, சபை கூடி வருதலை விட்டுவிடக் கூடாது என்ற அறிவுரைகளைப் பின்பற்றுகிறது. சபை கூடி வருதலை விட்டுவிடுவதால் கர்த்தரை விட்டு விலகும் ஆபத்தான விளைவுகளிலிருந்து வாசகர்களை ஈர்க்கும் பொருட்டு எச்சரிக்கை கொடுக்கப்பட்டது. இது ஒரு பலவீனமான கிறிஸ்தவனை மட்டும் குறிக்காது. இது வேண்டுமென்றே விசுவாசத்தை விட்டு விலகும் ஒருவருக்கும் பொருந்தும் (6:4-6 ல் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்றது).

சபை கூடுகைகளை அலட்சியம் செய்தல் சபை ஒழுங்கை புறக்கணிப்பது ஆகும், ஆகையால் தான் இதன் உச்சக்கட்ட ஆபத்து இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. "நம்முடைய சபை கூடிவருதலை விட்டுவிடுகிறது" என்று குறிப்பிடுவதன் மூலம் விருப்பப்பட்டு கிறிஸ்துவை புறக்கணித்தலின் ஆபத்தை இதன் ஆசிரியர் குறிப்பிடுகிறார். ஆனால் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதல்ல என்பதே இன்றைய பரவலான கருத்தாக இருக்கிறது. பலர் சபையை துறந்துவிடுகின்றனர் ஆனால் இன்னமும் தங்களை உண்மையான கிறிஸ்தவர்களாக கூறிக்கொள்கின்றனர். அது எப்படி சாத்தியமாகும். நாம் பயத்தினாலும் அல்லது கருத்து வேறுபாட்டினாலும் சபைக் கூடுகையை விருப்பப்பட்டு கைவிடுகையில் அது தேவனுடைய சட்டங்களை வெளிப்படையாகவே அலட்சியப்படுத்துவதாக உள்ளது. அக்காலத்தில் சாதாரணமாக இருந்த பயமானது சாத்தியப்படுமளவிற்கு கடுமையான மொழியில் கடிந்துக்கொள்ளப்பட்டது (வெளி. 21:8).

**நாம்** என்று கூறுகையில், இதன் ஆசிரியர் முற்றிலும் விசுவாசத் துரோகத்தின் நிலையிலிருந்த நபர்களோடு தன்னை பெருந்தன்மையோடு இணைத்துக் கொண்டார். இந்த இணைப்பானது அவருடைய பங்கிலிருந்த ஏற்றுக்கொள்ளும் தன்மையை குறிக்கிறது.

**மனப்பூர்வமாய்** அல்லது "வேண்டுமென்றே" என்ற வார்த்தையானது வலியுறுத்தம் செய்வதற்காக கிரேக்க எழுத்துக்களின் வாக்கியத்தில் முதலில் இடம் பெற செய்யப்பட்டிருக்கிறது. இந்த வசனம் வேண்டுமென்றே பாவத்தில் நிலைத்திருப்பதைப் பற்றி பேசுகிறது. "இந்த பகுதி முழுவதுமாகவே வெட்கக்கேடான முரட்டாட்டத்தையும், விசுவாச துரோகத்தையும் பற்றி தெளிவாக குறிப்பிடுகிறது."[60]

வசனம் 26-ல் கூறப்பட்டுள்ள "அறிவு" என்பது ஆரம்பக்கட்ட **அறிவிற்கு** முற்றிலும் வேறுப்பட்டு (ἐπίγνωσις, *எபிக்னோசிஸ்*) "முற்றிலும் அறிந்திருப்பது" என்று பொருள்படுகிறது. மனப்பூர்வமாய் இதை செய்கிற பாவி **சத்தியத்திற்கு** அவரை கொண்டு வந்த சாதாரண அறிவை விட அதிகமான அறிவை பெற்றிருந்தார்.[61] அவர் புதிதாக மனமாற்றமடைந்தவராக இருந்திருக்க முடியாது; இந்த பகுதியானது சத்தியத்தை குறித்து முழு விழிப்புணர்வு இல்லாதவர்களுக்கு பதிலாக வேண்டுமென்றே வழிமாறுகிற ஒருவருக்கு பொருந்துவதாக இருக்கிறது. ஒரு புத்திசாலித்தனமான புரிதல் ஏற்கனவே பெற்றிருக்கிறப்படியால், இந்த வசனமானது "வேண்டுமென்றே செய்த பாவத்தின் தன்மையை மேற்கோளிடுகிறது."[62]

பின்னர் இப்பகுதியானது ஒரு காலத்தில் உண்மையாக மனமாற்றமடைந்தவர்களை பற்றி குறிப்பிடுகிறது. சிலர் "எப்போதுமே கற்பவர்களாக இருந்து ஒருபோதும் சத்தியத்தின் உண்மையான அறிவை அடைய தகுதிப்பெறவில்லை," 2 தீமோத்தேயு 3:7 மற்றும். ரோமர் 10:2 ன் படி "தேவனுக்கு வைராக்கியமாக" இருந்து தற்போது இந்த "அறிவில்" குறைவுப்பட்டிருக்கிற யூதர்களைப் பற்றி பேசுகிறது. எபிரெயர் 10:26 "கிறிஸ்தவ விசுவாசத்திற்கு நிலையான அர்ப்பணிப்போடுள்ள" ஒருவருடைய அறிவைப் பற்றி பேசுகிறது.[63] ஒருவர் இந்த அளவு விசுவாசத்தைப்பெற்று தெளிவாக விழுந்துப் போனால், அவருடைய முடிவு நரகமாக இருக்கும். மனந்திரும்பி, இந்த அறிவை பெற்று, அதன் பின்னர் தொடர்ச்சியான முறையில் பாவத்தை வேண்டுமென்றே செய்வோருக்கு நம்பிக்கை ஏதும் இல்லை. அப்படிப்பட்ட மனிதன் தன்னுடைய மடமைத்தனத்திலிருந்து திரும்புதலை நன்றாகவே அறிந்திருக்கிறார்.

இந்த ஆசிரியரின் எச்சரிப்பானது கவனக்குறைவான அல்லது உள்நோக்கமில்லாத பாவத்தை சார்ந்திராமல் அடங்காத முரட்டாட்டம் அல்லது துணிகரமான பாவத்தை சார்ந்திருக்கிறது.[64] 1 யோவான் 2:19-ல் "அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்துபோனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை" என்று கூறப்பட்டுள்ளவர்களோடு இப்படிப்பட்ட பாவத்தை செய்கிறவர்களை சமன்படுத்திப் பார்க்க கூடாது. அவர்களில் அநேகர் மனந்திரும்பாதவர்களாக இருந்திருக்கக் கூடும். மற்றவர்கள் மனந்திரும்பியிருந்தாலும், மாய

வித்தைக்காரனாகிய சீமோனின் நிகழ்வில் காணப்படுவதுப் போன்று (அப். 8:13, 18-24) அவர்களை பாவத்தில் வழிநடத்துகிற சரியற்ற பண்பை பின்பற்றுகிறவர்களாக இருக்கிறார்கள். அவர் அந்த பாவத்திலிருந்து மட்டும் மனந்திரும்ப கூறப்பட்டிருக்கிறப்படியால், அந்த பாவத்தை செய்த பின்னரான நிலையை விளக்குகிற பதங்களை ஆராய்ந்துப் படிக்கவும். “உன் துர்க்குணத்தை” என்று அப்போஸ்தலர் 8:22-ல் இந்த பாவம் தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு மாறுபட்டு எபிரெயர் 10:26 தொடர்ச்சியான மற்றும் ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகுகிற பாவத்தை குறிப்பிடுகிறது (3:12). மற்ற மொழிபெயர்ப்புகள் இதை தெளிவுப்படுத்த உதவிச்செய்கிறது. TEV மொழிபெயர்ப்பு “நாம் வேண்டுமென்றே பாவம் செய்துக் கொண்டிருப்போமானால்” என்று கூறுகிறது, மேலும் NIV மொழிபெயர்ப்பில் “ஒருவேளை நாம் வேண்டுமென்றே பாவத்தை செய்துக் கொண்டிருப்போமென்றால்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[65]

இப்படிப்பட்ட செயலின் விளைவுகள் என்ன? **பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியில்லை.** ஒருவர் கிறிஸ்துவை விட்டு திரும்பிச் சென்றால் மன்னிப்பை பெறுவதற்கு வேறு வழிகளே இல்லை. கிறிஸ்து “ஒரே தரம்” மரித்திருப்பதால் அவர் தன்னை மீண்டும் பலியாக கொடுக்க முடியாது. இரட்சிப்பிற்கான மாற்று வழி ஏதும் கொடுக்கப்படவில்லை. இந்த வழி முற்றிலும் நிராகரிக்கப்படும்போது இரட்சிப்பானது தவறவிடப்படுகிறது. உபத்திரவத்தின் நடுவில் விசுவாசத்துரோக பாவமானது ஆதி சபைக்கு தொடர்ச்சியான பிரச்சனையாக இருந்தது.

பாவத்திலிருந்து “தப்பித்து” ஆனால் அவர்கள் விட்டு வந்த பாவத்திற்கு திரும்பி சென்றவர்களைப் பற்றி பேதுரு பேசினார். அவர் “அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும்” (2 பேதுரு 2:20-22) என்று அவர் கூறினார். கால்வினிஸ்டுகள் “முன்னிலைமையிலிருந்து” ஒருக்காலும் விலகாதவர்களை பற்றி பேதுரு பேசிக்கொண்டு இருக்கிறார் என்று கூறுகின்றனர். அப்படிப்பட்ட நபர் பாவத்திலிருந்து ஒருக்காலும் தப்பிக்கவே இல்லை. உண்மையாக மனமாற்றமடைந்தவர்கள் விசுவாசத்துரோகம் செய்வது சாத்தியமாகுமா? பவுல் அது சாத்தியமென கூறினார். ரோமர் 11:22 ஐ மற்றும் கலாத்தியர் 5:4 ஆகிய வசனங்களை வாசிக்கவும், இதுவே இந்த சங்கதி தொடர்பாக வெளிப்படையாக கூறும் புதிய ஏற்பாட்டு சொற்றொடராக இருக்கிறது.

உண்மையாக மனமாற்றமடைந்தவர்களில் விசுவாசத்துரோகமானது நிகழும்போது, அது மிகவும் தீவிரமானதாக இருந்து, ஒரு குற்றவாளி மனந்திரும்பி மன்னிப்பை பெற்றுக் கொள்ள கூடுமோ என்று பேதுருவும் வியப்புறுகிறார் (அப். 8:22). ஒருவர்

கிறிஸ்துவை ஒரு முறை அறிந்தப் பின்னர் அவரை விட்டு இவ்வளவு தூரம் இழுப்புண்டு போவதேன்? விசுவாசத்துரோகம் செய்பவர்கள் கிறிஸ்துவின் இயல்பை அல்லது அவருடைய வல்லமையை, தெய்வீகத்தை மற்றும் அவருடைய செயல்களை புரிந்துக் கொள்ளவில்லை என்பது வெளிப்படையாக இருக்கிறது. அப்படி இல்லாவிட்டால் அவர் கர்த்தரிடமிருந்து தனக்குள்ள தொடர்பை விட்டிருக்க முடியாது.

**வசனங்கள் 27, 28.** மனப்பூர்வமான பாவத்தை நியாயத்தீர்ப்பை தர கூடியதாக இதன் ஆசிரியர் கண்ணோக்கினார். விசுவாசத்துரோகமானது **பயங்கரமான எதிர்ப்பார்ப்பு நிறைந்த நியாயத்தீர்ப்பை** கொண்டு வருகிறது. "பயத்தோடு" (φοβερός, *ஃபொபர்வோஸ்*) என்ற வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் மும்முறை காணப்படுகிறது, இவைகள் அனைத்தும் இந்த நிருபத்திலேயே காணப்படுகிறது (வசனங்கள் 27, 31; 12:21). இந்த மூன்று பகுதிகளனைத்திலும், இது சந்திப்பது அல்லது தேவனிடம் கிட்டிச் சேருவதை குறிக்கிறது. KJV மொழிபெயர்ப்பானது நியாயத்தீர்ப்பை பயத்துடனான பார்வையுடனும் அக்கினிமயமான கோபத்துடனும் "பயங்கரமாக எதிர்நோக்குதல்" என்று கூறியிருக்கிறது. நியாயத்தீர்ப்பு உறுதியானது, மற்றும் வசனம் 26 ல் கூறப்பட்டிருப்பது போன்று நித்திய நரகமானது இப்படிப்பட்ட நபருக்கு தவிர்க்க இயலாததாக இருக்கிறது. பாவத்தில் மூழ்கியிருக்கும் தம்முடைய எதிரி ஒருவரை தண்டிப்பதில் தேவன் மென்மையாக இடைப்படுகிறார் என்று எவரும் கற்பனைச் செய்யக் கூடாது. குற்றவாளிகள் அனைவரும் நியாயத்தீர்ப்பில் அக்கினியோடு சந்திக்கப்படுவார்கள் (2 தெச. 1:8; மத். 25:30, 41). அநேகமாக இது கோராவின் முரட்டாட்டத்தையும் அவரையும் அவருடைய குடும்பத்தையும் அக்கினியில் அழித்துப்போட்டதை குறிப்பிடக்கூடும் (எண். 16:1-35). துன்மார்க்கர் மீதான தேவனுடைய நியாயத்தீர்ப்பானது அடிக்கடி அக்கினியில் வருவதாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது (எபி. 12:29).

வேண்டுமென்றே தீமைச் செய்வோருக்கு **மோசேயின் நியாயப்பிரமாணத்தின்** கீழ் மன்னிப்பு இருப்பதாக காணப்படவில்லை. மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் தண்டனையானது கடுமையானதாக இருக்கிறது (2:2 ன்), ஆனால் கிருபையென்னும் பெரும் விளக்கத்தில் புதிய யுகத்தின் கீழ் பாவம் தப்பித்துக் கொள்கிறது என்று நாம் கண்டிப்பாக நினைத்துவிடக் கூடாது. வசனம் 28 ஆனது அநேகமாக வேண்டுமென்றே செய்கிற பாவத்திற்கு மரணத்தண்டனை உறுதியாக்கப்பட்டிருக்கிற உபாகமம் 17:2-7 ன் குறிப்பாக இருக்க கூடும். எப்படியாயினும் இது **இரண்டு அல்லது மூன்று சாட்சிகளின்** படி இருக்க வேண்டும். ஒரு இஸ்ரவேலனை மரணத்தண்டனைக்குள்ளாக தீர்க்க ஒரே ஒரு சாட்சி மட்டும்

போதுமானதல்ல. இந்த கோட்பாட்டை தொடர்ந்து அங்கீகாரம் செய்து, ஒரு நபரால் மற்ற நபரின் பண்புகளின் பேரில் சொல்லப்படும் குற்றச்சாட்டுக்களை புறக்கணிக்கவும் செய்யலாம் (1 தீமோ. 5:19). குற்றஞ்சாட்டப்பட்டவன் உண்மையான குற்றவாளியாக காணப்படும்போது, பழைய உடன்படிக்கையின் கீழ் **இரக்கமில்லாமல் சாகிறான்** (வசனம் 28).

**வசனம் 29.** சிறிதானதிலிருந்து மேன்மையானதிற்கான மற்றுமொரு விவாதம் இங்கு அளிக்கப்படுகிறது. பழைய உடன்படிக்கையின் கீழ் ஒவ்வொரு மீறுதலுக்கும் அதற்குரிய நீதியான தண்டனை விரும்பத்தகாத அளவிற்கு போதுமானதாக இருந்தது (எபி. 2:2). உண்மையாகவே பழைய உடன்படிக்கையின் கீழான தண்டனையானது மிகவும் மோசமானதாக இருந்தது! பழைய ஏற்பாட்டில் மரணம் தண்டனையாக இருக்குமென்றால், கிறிஸ்துவை மறுப்பதிலிருக்கும் நம்முடைய தண்டனையானது மரணத்தை விட எப்படி குறைவாக இருக்கக் கூடும்? மக்கள் மேலான அறிவையும் நன்மைகளையும் பெற்றிருக்கையில் அவர்களுக்கு பெரிதான தண்டனை அவசியப்படுகிறது (லூக். 12:47, 48).

இந்த எச்சரிக்கையில் குறிப்பிட்டுள்ளப்படி தேவத்தூஷணக்காரன் அவனுடைய கைவிடப்பட்ட நிலையான "மிகவும் கடுமையான தண்டனைக்குள்ளாகிறான்." கடுமையான தண்டனைக்கான காரணங்கள் மூன்று விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது:

1. **தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான்** என்பதை யோசித்துப்பாருங்கள் என்று கூறப்பட்டிருக்கிறது (வசனம் 29). இது "தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துதல்" என்பதற்கு சமமாக இருக்கிறது (6:6). சிலர் தேவனுடைய குமாரனை "காலின் கீழ் மிதித்து" என்ற சிந்தனையானது மத்தேயு 7:6 ல் காணப்படுகிற பன்றிகள் விலையேறப்பெற்ற முத்துக்களை (சுவிசேஷத்திற்கு உருவகமான ஒரு குறிப்பு) காலின் கீழ் போட்டு மிதித்து பீறிப்போடுவதற்கு ஒப்பாக இருக்கிறது. தேவனுடைய குமாரனை காலின் கீழ் போட்டு மிதிப்பது தேவனுக்கும் அதைப்போன்றே செய்வதற்கு சமம் என்று எபிரேய நிருபம் கூறுகிறது.[66] இவ்வகையான பாவி "தேவனுடைய குமாரனை" அலட்சியப் போக்கோடு நடத்தினான்; ஆக இதை விட பெரிய பாவம் வேறு எதுவுமிருக்க முடியாது. அவன் கிறிஸ்துவின் பலியை புறக்கணித்தான். ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்வில் இதை விட வேறு கொடுமை எது இருக்கக்கூடும்?

அன்பு கூற வேண்டிய கிறிஸ்துவை பரிசுத்த குலைச்சலாக நடத்த

வேண்டாமென இதன் ஆசிரியர் விசுவாசிகளை வலியுறுத்துகிறார். அவர்களில் சில அறிமுகமானவர்கள் இவ்வகையான துக்ககரமான செயலை செய்திருந்தனர். இவ்வகையான விசுவாசத் துரோகத்தை கிறிஸ்துவின் எதிரிகளிடமிருந்து எதிர்ப்பார்க்க வேண்டுமேயொழிய அவருடைய இரத்தத்தினால் மீட்கப்பட்ட ஒருவரிடமிருந்து அல்ல. இப்படிப்பட்ட ஒருவர் சிலுவையிலறையப்பட்டப்போது பரிகாசித்தவர்களில் ஒருவராக இல்லாமலிருந்தால் அவர் குற்றவாளியாக இருந்திருக்க முடியாது. ஒரு கிறிஸ்தவன் தான் என்ன செய்கிறான் என்பதை அறிந்தும் தேவன் மூலம் கிறிஸ்துவினால் கொடுக்கப்பட்ட கிருபாபலியை இன்னமும் உதைத்து புறந்தள்ளினால் அவர் விசுவாசத் துரோக குற்றமுடையவராக இருக்கிறார். இந்த சொற்றொடரானது "இயேசு கிறிஸ்துவிற்கெதிரான வலுவான பகையை குறிக்கிறது."[67] அநேகமாக இந்தப் பகுதியானது ஒருவருடைய கிறிஸ்துவை தரித்துக் கொள்ளுதல் (கலா. 3:27), மற்றும் அவருடைய மரணம், அடக்கம், வெளிப்படையான உயிர்த்தெழுதல் ஆகியவற்றை அடையாளப்படுத்தும் "ஞானஸ்நானத்தைபுறக்கணிப்பதை குறிக்கிறது" (ரோமர் 6:3-5; கொலோ. 2:12).[68]

"ஒரு முறை இரட்சிக்கப்பட்டால் நித்தியமாக இரட்சிக்கப்படுதல்" என்ற உபதேசத்தை விசுவாசிப்பவர்கள் இந்த "கடுமையான தண்டனை" என்பதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இது விவரிப்பதற்கு மிகவும் கடினமான மீளா நரகத்தை விட சற்று குறைவாக பொருள்படுத்துகிறது என்று அவர்கள் கூற வேண்டும் அல்லது அவர்கள் தங்களை ஆறுதல்படுத்திக் கொள்கிற உபதேசத்தை கைவிட வேண்டும்.

2. விசுவாசத்துரோகிகள் **தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி** (வசனம் 29) என்று கூறப்பட்டிருக்கின்றனர். இது அவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தை "பரிசுத்தமற்றது," "சதாரணமானது," அல்லது "அசுத்தமானது" என்று கணக்கிட்டனர்.[69] புதிய உடன்படிக்கையை உறுதிப்படுத்திய மற்றும் குற்றவாளிகளின் பாவங்களை மன்னிப்பதற்கு கொடுக்கப்பட்ட இரத்தம் மிகவும் விலையேறப்பெற்றதாகும். இயேசுவின் இரத்தத்தை வெறுப்பது பழைய ஏற்பாட்டு பலிகளில் பயன்படுத்தப்பட்ட மிருகங்களின் இரத்தத்திற்கு இணைப்படுத்திப் பார்ப்பதை விட மோசமானதாகும். இங்கு விவரிக்கப்பட்டிருக்கிறவர்கள் முன்னர் ஒரு காலத்தில் "பரிசுத்தமாக்கப்பட்டு" இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டவர்களாக இருந்தனர்; ஆனால் தற்போது அவர்கள் கிறிஸ்தவர்களாக இல்லை.

பிலிப்பு எட்ஜ் கம்பி ஹக்ஸ் அவர்கள் வாராந்திர திருவிருந்து ஆசரிப்பை "இரத்த உடன்படிக்கையாக" பார்த்தார்:

நம்முடைய இரட்சகரை நினைவு கூர்ந்து நாம் பங்குபெறும்

திருவிருந்து பந்தியானது அவருடைய இரத்தத்தின் புதிய உடன்படிக்கையாக இருக்கிறது (1 கொரி. 11:25). ஒவ்வொரு வாரமும் விசுவாசத் துரோகியானவன் கிறிஸ்துவின் சரீரத்திலும் இரத்தத்திலும் பங்குக் கொண்டதின் மூலம் பாவத்தை கழுவுவதற்காக கிறிஸ்துவில் தன் விசுவாசத்தை உறுதிப்படுத்தினார்.[70]

அவருடைய முந்தைய நம்பிக்கைக்கு பல நினைவூட்டலுக்கு பின்னரும் கர்த்தருடைய சரீரத்தை கைவிடுதலானது அவருடைய இரத்தத்தை குறித்த தேவ நிந்தனை குற்றத்தை உடையவர்களாக இருப்பதாகும். கிறிஸ்துவின் பரிபூரணமான பலியை அவர் அசுத்தமாக எண்ணுகின்றனர்.

3. இந்த நபர் **கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன்** (ἐνυβρίζω, *இனுபிரிட்சோ*) (அல்லது ஆவியை "கோபப்படுத்துகிறவன்")[71] (வசனம் 29). இது ஆவியானவர் மூலமாக அவனுக்கு கிருபை அளிக்கப்பட்டதென்பதை குறிக்கிறது. அவர் கிருபையை வெளிப்படுத்துகிறப்படியால் "கிருபையின் ஆவியானவர்" என்று அழைக்கப்படுகிறார். அவர் கிருபையினால் நமது பெலவீனங்களில் உதவிச்செய்கிறார் (ரோமர் 8:26) மற்றும் நம்முடைய பாவங்களை உணர்த்துகிறார் (யோவான் 16:8). இந்த குற்றவுணர்வானது பேதுருவின் பிரசங்கத்தின் மூலம் பரிசுத்த ஆவியானவரால் உண்டாக்கப்பட்டது (எடுத்துக்காட்டு அப். 2:36-38). ஸ்தேவனின் போதனையை புறக்கணித்ததினால், சனகெரிப் சங்கத்தினர் அவருடைய செய்தியின் மூலமான ஆவியானவரின் கிரியைகளை தங்களுடைய இருதயத்தில் எதிர்த்தனர் (அப். 7:51).

ஒருவன் கிறிஸ்தவ விசுவாசத்தை விட்டு யூத மதத்திற்கு திரும்புகையில், அவர் குமாரன் மற்றும் ஆவியானவர் ஆகிய இருவருக்கும் எதிராக பாவம் செய்கிறார். "அவன் தேவனுடைய குமாரனை வெறுத்து புறந்தள்ளி … கிருபையின் ஆவியை நிந்திக்கிறான்" (ESV). இது தெய்வீக சட்டத்திற்கு எதிரான பாவமாகும்.[72] முன்பு சத்தியத்தை அறிந்து அதிலிருந்து முற்றிலும் விலகிச் சென்றுவிட்ட விசுவாசத்துரோகிகளைப் போல ஆவியானவரை அவமதிப்பது மிகவும் கடுமையான தண்டனையான நித்திய அழிவிற்குரியதாகும். தேவனுடைய வார்த்தையிலிருக்கிற சத்தியத்தின் சான்றுகளை புறக்கணிக்கிற அவனுடைய செயலானது பக்தியற்ற நிலையின் உச்சமாகும். அவன் நியாயத்தீர்ப்பை தவிர வேறு எதையும் எதிர்நோக்க முடியாது. "பட்சிக்கும் அக்கினி" அவனை பட்சித்துப்போடும் (10:27). இப்படிப்பட்ட குற்றமுள்ளவர்கள் "[பரிசுத்த] ஆவியானவருக்கெதிராக விசுவாசத்துரோகம் செய்தார்களென்பது" வெளிப்படையாக இருக்கிறது (மத். 12:31, 32; மாற்கு 3:28, 29; லூக். 12:10) பின்னும் அவன் இரட்சிப்பின் அனைத்து நம்பிக்கையையும் இழந்துப் போகிறான்.[73]

**வசனங்கள் 30, 31.** விசுவாசத்துரோகத்தின் பாவமானது அதனுடைய நடைமுறைகளினால் பயங்கரமானதாக இருக்கிறது. அதைப்பற்றி யோசிப்பதும் கூட நடுக்கம் நிறைந்ததாக இருக்கும்.

இதன் ஆசிரியர் இந்த 10-ம் அதிகாரத்தின் இறுதிப்பகுதியில் எச்சரிக்கையோடு, தனது வாசகரை அவர்கள் போகப்போகிற ஆவிக்குரிய மரணத்தின் விளிம்பிலிருந்து இழுக்க முயற்சிக்கிறார். தேவன் தம்முடைய வார்த்தையை காப்பாற்றி அவருடைய அச்சுறுத்தல்களை நிறைவேற்றுகிறார். நாம் அவரை அறிவோம் என்ற உறுதியான சொற்றொடரோடு இந்த 30-ம் வசனம் தொடங்குகிறது. தேவனுடைய வார்த்தை நிலையானது அவர் தம்முடைய அச்சுறுத்தல்களை செய்து முடிப்பார் என்பதே இந்த சொற்றொடரின் பொருள் என்று **நாம் அறிந்திருக்கிறோம்**. **பழிவாங்குதல் எனக்குரியது நானே பதில் செய்வேன்** என்ற ரோமர் 12:19 ல் பவுல் பயன்படுத்தின மேற்கோளானது அதே வார்த்தையின் துல்லியமான வடிவமாக இருக்கிறது.

வசனம் 30ல் கூறப்பட்டுள்ள இரண்டு மேற்கோள்கள் தற்போதைய எபிரேய பிரதிகளோடும் அல்லது LXX மொழிபெயர்ப்போடும் ஒத்துப்போகவில்லை என்றாலும் போதிக்கப்பட்டிருக்க சத்தியங்கள் நிச்சயமாகவே ஒன்றாகவே இருக்கின்றன. தற்காலத்தில் இல்லாத ஆவணத்திலிருந்து பவுல் மேற்கோள் காட்டுவதுப் போன்றே அநேகமாக இதன் ஆசிரியரும் பயன்படுத்தியிருக்க கூடும். அநேகமாக அவர் வழக்கத்திலிருந்து ஒரு வசனத்தை பயன்படுத்தியிருக்க கூடும் அல்லது அவர் ரோம நிருபத்திலிருந்து மேற்கோள் காட்டியிருக்க கூடும். ஒருவேளை அவர் தன்னுடைய சொந்த பொழிப்புரையை பயன்படுத்தியிருக்க வேண்டும்.[74] இது பவுலிடமிருந்தோ அல்லது அவருடைய நெருங்கிய கூட்டாளியிடமிருந்தோ வந்திருக்கக் கூடும் என்று கூறுவது மட்டுமே தற்போது எஞ்சியிருக்க சாத்தியக்கூராகும். முதல் மேற்கோளானது உபாகமம் 32:35-41ஐ அடிப்படையாக கொண்டிருக்கிறது, இதன் மொழியாக்கம் சங்கீதம் 135:14 ல் காணப்படுகிறது. இதன் ஆசிரியர் வசனங்களைத் தன்னுடைய சொந்த நடையில் விவரித்து அவ் வசனத்தின் பொருள் மாறாதபடி சரியான முறையில் கொடுத்திருக்கிறார்.

தேவனுடைய "பழிவாங்குதலானது" அவருடைய நீதியாக இருக்கிறதேயொழிய, அது பழிவாங்கும் தன்மையின் இயல்பல்ல. அவருடைய திரும்பச் செலுத்துதலானது குற்றத்திற்கு சமமாக இருக்கும். அது என்னவாக இருக்க வேண்டுமென்று நம்மால் தீர்மானிக்க முடியாது. ஆனால் அவரால் தீர்மானிக்க முடியும். ஒரு குற்றவாளி ஒரு நபரைக் கொன்ற குற்றத்தில் கண்டுப்பிடிக்கப்பட்டு, ஒரு நீதிபதியானவர் அவருடைய ஜீவனை எடுக்க வேண்டுமென்று தீர்ப்பளித்தாலும், இவருடைய ஜீவனை இவர் கொலைச் செய்த

நபருடைய ஜீவனோடு நாம் எப்படி ஒப்பிடக்கூடும்? எது நீதி என்பதை தேவனால் மட்டுமே விளக்கக் கூடும்; எனவே தான் அவர் நம்முடைய வாழ்விற்காக அமைத்துள்ள சட்டத்திட்டங்களின் மேல் மிகவும் சார்ந்திருக்க வேண்டியதாக இருக்கிறது.

"அவருடைய இரக்கங்கள் மகா பெரியது" (2 சாமு. 24:14) என்று தாவீது கூறினதுப்போல, நீதிமானுக்கு தேவனுடைய **கரத்தில் விழுவதே** நன்மையாக இருக்கும். ஒரு சத்துருவின் கைகளில் வீழ்தலென்பது முற்றிலும் அவர்களுடைய கட்டுப்பாட்டிற்குள் அவர்களுடைய தயவால் வாழ்வதாகும். விசுவாசத்துரோகம் செய்தவருக்கு இது நித்திய அழிவாக இருக்கும் (2 தெச. 1:9). அது ஒரு பயங்கரமான நிலைமையாக இருக்கும் (மத். 25:46; வெளி. 14:11; 20:10).

வசனம் 31ல் கூறப்பட்டுள்ள **பயங்கரமாக** இருக்குமே என்ற வார்த்தையின் அதே கிரேக்கப்பதமே வசனம் 27 லிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவனை ஒருவரும் முட்டாளாக்கமுடியாது. முன்பு கிறிஸ்துவிற்குள்ளிருந்து, அவருடைய ஐக்கியத்தை விட்டுப்போனவரே இந்த உலகத்தில் மிகவும் பரிதபிக்கக் கூடிய நபராக இருக்கிறார். உண்மையாகவே **ஜீவனுள்ள தேவனுடைய** கரத்தில் விழுவது பயங்கரமானதாக இருக்கும்![75] கிறிஸ்துவிற்கு உண்மையாக இருக்கிற ஒருவனுக்கு சர்வ வல்லவரின் கரமானது மென்மையாகவும் தயவாகவும் இருக்கும். அவருடைய பழிவாங்குதலின் பயங்கரத்திற்கு பின்னால் யாரெல்லாம் மனந்திரும்பி அவரண்டை திரும்புகிறார்களே அவர்களுக்கு இரக்கமும் கிடைக்கிறது.

வேண்டுமென்றே பாவம் செய்கிற நபர் தேவனுடைய கிருபையானது பயங்கரமான விளைவுகளை கொண்டு வரும் என்பதை அறிந்திருக்கிறார். விசுவாசத்துரோகம் செய்தவர் தன்னுடைய ஆத்துமாவிற்கு கிறிஸ்து அளித்த பெரும் விலைக்கிரயத்தை அறிந்திருக்கிறார், ஆனால் அவர் இன்னமும் இரட்சகரின் இரத்தத்தை அசட்டை செய்கிறார் ஆகவே, தேவக்கோபமும் பழிவாங்குதலும் அவருக்காக காத்திருக்கிறது.

**நினைவில் கொள்ள வேண்டிய புத்திமதிகள் (10:32-39)**

**32முந்தின நாட்களை நினைத்துக்கொள்ளுங்கள்; நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த அந்த நாட்களில் உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தீர்களே. 33நிந்தைகளாலும் உபத்திரவங்களாலும் நீங்கள் வேடிக்கையாக்கப்பட்டதுமல்லாமல், அப்படி நடத்தப்பட்டவர்களுக்குப் பங்காளிகளுமானீர்கள். 34நான் கட்டப்பட்டிருக்கையில் நீங்கள் என்னைக்குறித்துப் பரிதபித்ததுமன்றி, பரலோகத்தில் அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்தரம் உங்களுக்கு உண்டென்று அறிந்து, உங்கள் ஆஸ்திகளையும்**

**சந்தோஷமாய்க் கொள்ளையிடக் கொடுத்தீர்கள். [35]ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள். [36]நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படிசெய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது.**
**[37]வருகிறவர் இன்னுங்கொஞ்சக்காலத்தில் வருவார், தாமதம்பண்ணார்.**
**[38]விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார்.**
**[39]நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்.**

எபிரெய நிருபத்தின் ஆசிரியர் தன்னுடைய வாசகருக்கு புத்திமதி அவசியமென்று அறிந்திருந்தார். 6:7, 9 ல் கூறப்பட்டிருப்பது போன்று, அவர்களுக்கு அவர் 10:32-39 ல் சில நம்பிக்கையான வார்த்தைகளைக் கொடுத்தார். அவர்கள் சோர்ந்துப் போகிற அளவிற்குச் சகித்திருந்தப்படியால் அவர்கள் நினைவில் வைத்துக் கொள்ளும் பொருட்டு அவர்களுக்குப் புத்திமதியளித்தார்.

**வசனம் 32.** ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர், ஆரம்பத்தில் இந்த எபிரெயர்கள் கிறிஸ்தவர்களாக இருப்பதினால் பகைமையின் மத்தியில் தங்கள் விசுவாசத்தில் நிலைநின்றனர். ஒருவேளை இதன் வாசகர்களில் சிலர் மனமாற்றமடைந்திருந்த ஆசாரியர்களாக (அப். 6:7) இருக்கும்பட்சத்தில் ஸ்தேவானின் மரணத்திற்குப் பின் உடனடியாகத் தொடங்கின (அப். 7; 8) உபத்திரவத்தின் காலத்தில் அவர்கள் தங்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்திருக்கக் கூடும். உண்மையில், ஆசாரியர்கள் அவர்களுடைய விசுவாசத்தின் "குருமார்களாக" இருந்தப்படியால் அவர்களின் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுதலை பிறர் மதிப்பு குறைவாக எண்ணியிருப்பார்கள், மற்றும் இதைக் குறித்துக் கேள்விப்பட்ட விசுவாசியாத யூதர்களை இது அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும் - அதிலும் விசேஷ மாகத் தர்சு பட்டணத்தானாகிய சவுலுக்கு இது பெரும் அதிர்ச்சியானதாக இருந்திருக்கும். விசுவாசத்தில் இளையவர்களாக இருந்த இவர்களைப் பரிகாசம் செய்யும் செயலானது சிலரை மரணத்தைச் சந்திக்கும் அளவிற்கு மோசமான நிலைக்கு கொண்டுச் சென்றது.

**முந்தின நாட்களை … நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த** அந்த நாட்களில் என்று கூறப்பட்டிருப்பது "நீங்கள் ஒளியூட்டப்பட்டு" (NKJV), "நீங்கள் ஒளியைப் பெற்ற பின்னர்" (NIV) என்று பல வகையாக மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பிரகாசிக்கப்படுதலானது (6:4 ஐ காண்க) நிச்சயமாக "சுவிசேஷத்தின் ஒளியால்" அடையப் பெற்றதாக இருக்கிறது (2 கொரி. 4:4; எபே. 5:8, 11; கொலோ. 1:13). பின் தொடர்ந்து வந்த நூற்றாண்டுகளில், கிறிஸ்தவ எழுத்தாளர்கள் இந்த நிகழ்வை ஞானஸ்நானத்தின்போது பொதுவாக

நடைமுறைப்படுத்தினார்கள். எப்படியாயினும் அவர்கள் தங்கள் மனந்திரும்புதலின் போதோ அல்லது அதற்குச் சற்று முன்னரோ பிரகாசிப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். இது அவர்களை முன்பு காண இயலாததாக இருந்தவற்றைக் கிரகிக்க செய்த ஒரு விசேஷமான "உள்ளான பிரகாசிப்பை" குறிக்கவில்லை. பெந்தேகோஸ்தே நாளின்போது அங்கு இருந்தவர்களைப் போன்றே இவர்களும் பிரசங்கிக்கப்பட்ட சத்தியத்தைப் பின்தொடர்ந்தனர். நேர்மையான இருதயத்தோடு இருந்தவர்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை குறித்துக் கற்றறிந்தப் போது அதை விசுவாசித்துக் கீழ்ப்படிந்தனர் (அப். 2:32-41). கேட்டறிந்ததினால் நடந்த மனமாற்றத்தை அனுபவித்த அவர்கள், தற்போது கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு பிரகாசிப்பிக்கப்பட்டவர்களுள் ஒருவராக இருந்தனர். இவர்கள் அநேகமாக அப்போஸ்தலர் 2 ஆம் அதிகாரத்தில் பெந்தேகோஸ்தே நாளின்போது இரட்சிக்கப்பட்டவர்களுள் இருந்தவர்களாக இருக்க வேண்டும். இவர்கள் கிறிஸ்துவை மாம்சத்திலிருக்கும்போது பார்த்திருக்க மாட்டார்கள். எப்படியாயினும், அதற்குச் சற்று பின்னர் மற்றவர்களுடைய போதனைகளைக் கேட்டு விசுவாசத்திற்கு வந்திருக்க வேண்டும் (அப். 6:7).

இவர்களுடைய முந்தைய நாட்களில், **உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தை இவர்கள் சகித்திருந்தனர்**. அநேகமாக இது எருசலேம் சபைக்கு எதிரான உபத்திரவத்தைக் குறிப்பிடக் கூடும் (அப். 8:1; 12:1-3). அநேகமாக இந்தத் தொடக்கக்கால உபத்திரவங்கள் எபிரேய நிருபத்தை எழுதுவதற்கு முன்னர் இருந்த, இந்த நிருபத்தைப் பெற்ற, இரத்தச்சாட்சியாக மரிக்காத முதல் வாசகர்களாக இவர்கள் இருந்திருக்கக் கூடும். கிறிஸ்தவர்களின் உபத்திரவாமானது கி.பி. 62 ல் இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபை அநீதியாகக் கொன்றதின் பிறகு குறைந்திருக்கக் கூடும். இது பவுலின் மனமாற்றத்திற்குப் பின்னர் பல ஆண்டுகள் கழித்து நிகழ்ந்த (அப். 9) ஒரு தனித்துவிட்டப்பட்ட நிகழ்வாக இருக்க வேண்டும்.

**வசனம் 33.** எப்படியாயினும். இந்த வாசகர்கள் மற்றவர்களுடைய உபத்திரவத்தில் உண்மையாகவே ஐக்கியத்தை ("ஒரு பங்காளிகளாக இருத்தல்," *கொய்னோனோஸ்*, κοινωνός) பெற்றிருந்தனர். இவர்கள் **அப்படி நடத்தப்பட்டவர்களுக்குப் பங்காளிகளாக இருந்து**, உதவிச் செய்தபடியால் இப்படி ஐக்கியம் கொண்டிருந்தனர். நல்ல சமாரியன் சம்பவத்திற்குக் குறிப்பிடப்பட்ட ஆசாரியன் மற்றும் லேவியனுக்கு இது எவ்வளவு வேறுப்பட்டிருக்கிறது (லூக். 10:25-37)! சில யூத ஆசாரியர்கள் இயேசுவின் உவமையைக் கேட்டு மிகவும் பாதிக்கப்பட்டதினால் தங்கள் சொந்த பலவீனத்தை அங்கீகரித்து அதன் விளைவால் கிறிஸ்துவிடம் மனமாற்றம் கொண்டனரா (அப். 6:7)? இந்தச் செய்தியை ஆதி கிறிஸ்தவர்கள் இவர்களிடம் விட்டுச் சென்றிருக்க

வேண்டும்.

இந்த எபிரேய நிருபத்தின் வாசகர்கள் **வேடிக்கையாக்கப்பட்டிருந்தனர்**. வேடிக்கை என்பது *தியட்ரிட்சோ* (θεατρίζω) என்ற வினைச் சொல் வடிவமாக இருக்கிறது. இது "வெறித்தப்படி பார்த்தல்" என்ற பொருளைத் தருகிறது. மேலும் பெயர்ச்சொல்லாகிய "தியேட்ரோன்" என்ற வார்த்தையிலிருந்து "தியேட்டர்" என்ற வார்த்தை உருவானது. இந்த வார்த்தை சிறைக் கைதிகளின் கலகக் கூட்டத்தாரை உற்றுப்பார்க்கும் ரோம அரங்குகளைக் குறிக்கிறது. பவுல் இந்த வார்த்தையை அப்போஸ்தலர்களை விவரிக்கையில் பயன்படுத்தினார் (1 கொரி. 4:9-ல் குறிப்பிடப்பட்டுள்ளது). அவர்கள் அநேகமாகப் பெயர்ச் சொல்லி பழித்தல் உட்படப் பல **நிந்தையை** அடைந்திருந்தனர். **உபத்திரவங்கள்** என்பது பல்வகைப் பாடுகள் மற்றும் பேரிடர்களைக் குறிக்கிறது. இந்த நிருபத்தின் முதல் வாசகர்கள் தங்கள் சக யூதர்களால் பரிகாசிக்கப்பட்டார்களா? அவர்கள் ஏற்கனவே சமூகத்தால் விலக்கி வைக்கப்பட்டிருந்தனரா?

**வசனம் 34.** இவர்களுடைய ஐக்கியத்திற்கு அடையாளமாக இவர்களுடைய **பரிதாபம்** (συμπαθέω, *சும்பதியிடோ*) நினைவுக்கூரப்பட்டிருக்கிறது. KJV மற்றும் NKJV ஆகிய மொழிபெயர்ப்புகள் அலெக்ஸாண்டியா கிளமெண்ட் வார்த்தைகளுக்கு ஏற்றாற்போன்று "மனதுருக்கம்" என்று கூறுகிறது. கடுமையான மன அழுத்தத்தின் சமயங்களில் "பரிதாபத்தை" விவரிப்பது கடினமானதாக இருந்தாலும், இது உண்மையான கிறிஸ்தவ ஆவியை குறிக்கிறது.

அநேகமாக இரட்சிக்கப்பட்ட ஆசாரியர்கள் சிறையிலடைக்கப்படக்கூடிய மிகுந்த ஆபத்திலிருக்கவில்லை, ஆனால் மற்ற கிறிஸ்தவர்கள் இந்த ஆபத்திலிருந்தனர். அந்நாட்களில் **சிறைகைதிகளுக்கு** உணவு கொண்டு செல்வதும் கூடப் பெரும் ஆபத்தானதாக இருந்தது, ஆனால் இந்தக் கிறிஸ்தவர்கள் அதையும் செய்தனர். அநேகமாக இவ்வகையான ஐக்கியமானது அப்போஸ்தலர் 2:42, 44-46; 4:34, 35ல் தொடங்கினதாக இருக்கக்கூடும். எபிரேய நிருபத்தை எழுதும் சமயத்தில் உபத்திரவாமானது குறைந்திருந்தது, மேலும் கிறிஸ்தவர்கள் ஒரு குறுகியக் கால அமைதியை அனுபவித்தனர்.

ஒருவேளை கஷ்டங்கள் காணப்பட்டாலும், **இவர்கள்** (தங்களுடைய) **ஆஸ்திகளையும் சந்தோஷமாகக் கொள்ளையிடக் கொடுத்ததாக** இவர்களைப் பற்றி ஆசிரியர் நினைவுக்கூருகிறார். இதை நாம் அசாதாரணமான ஒரு எதிர்ச்செயலாக எண்ணலாம், ஆனால் விசுவாச மக்கள் பூமிக்குரிய இழப்புகளைச் சந்தோஷமாகச் சகிக்கிறார்கள். உபத்திரவச் சமயங்களில் வன்முறை கும்பல்கள் வந்து ஒடிப்போனவர்களின் சொத்துக்களைக் கொள்ளையடித்துச்

செல்லலாம், எனினும் ஒருவருடைய வாழ்வு அவர்களுடைய ஆஸ்தியில் இல்லை என்பதை இந்தச் சகோதரர்கள் கற்றறிந்தனர் (லூக். 12:15). இதைப்போன்ற இழப்புகளை மகிழ்ச்சியாகச் சகித்தவர்கள் தேவாலயத்தின் அழகு மற்றும் மகிமையைக் குறித்த உணர்வுகளையும் மேற்கொள்ளக்கூடும். இவர்களுடைய பிரச்சனைகளின் மத்தியில், **அதிக மேன்மையும் நிலையானதுமாகிய** சுதந்திரத்தை நோக்கி விசுவாசத்தில் முன்னேறி சென்றனர். இயேசு லூக்கா 6:23 ல் "அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் *களிகூருங்கள்*; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்." என்று கூறினதை இவர்கள் நடைமுறைப்படுத்தினார்கள் (வலியுறுத்தங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது).

தம்முடைய சீடர்கள் சிறையிலிருப்பவர்களைச் சந்திக்கும்படியாக இயேசு போதித்தார் (மத். 25:35, 36). யூதேயாவிலிருந்த பரிசுத்தவான்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் மீது பரிதாபம் காட்டினார்கள் (அப். 4:23), ஏனெனில் "ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும் …" என்பதை அவர்கள் கற்றறிருந்திருந்தனர் (1 கொரி. 12:26). ஒருவேளை திருடர்கள் இவர்களுடைய உடைமைகளைத் திருடிச் செல்லலாம், ஆனால் எந்த மனித கரமும் தங்களுடைய நித்திய மகிமையை எடுத்துக் கொள்ள முடியாது என்பதை இவர்கள் நன்கு அறிந்திருந்தனர். இவர்கள் தங்களுக்காக "பரலோகத்தில் பொக்கிஷத்தை" சேர்த்து வைத்திருந்தனர் (மத். 6:20) "ஒரு கிறிஸ்தவன் தனக்கு வெளியே இருப்பவைகளில் ஒரு புன்னகையோடு விட்டுச் செல்ல இயலாத எதையும் சொந்தமாக வைத்துக் கொள்ளக் கூடாது என்பதே கிறிஸ்துவ ஆவியின் அடையாளமாக இருக்க வேண்டும்."[76] ஆக இந்தச் சகோதரர்கள் சரீரத்தைக் கொல்லுகிறவர்களுக்குப் பயப்படாமலிருக்கக் கற்றுக் கொண்டிருந்தனர் (மத். 10:28).

**வசனங்கள் 35, 36.** எபிரேய நிருபத்தைப் பெறுநர்கள் தங்கள் சொத்துக்களைக் கள்ளர்களிடமோ அல்லது ஆட்சியாளர்களிடமோ இழந்திருக்க வேண்டும். எனவே இதன் ஆசிரியர் வரபோகிற வெகுமதிகளைக் கண்ணோக்குகையில் இந்தப் பூமிக்குரிய பொருட்கள் தகுதியற்றவை என்று அவர்களுக்குப் புத்திமதி கூறினார். இப்படிச் செய்கிற கிறிஸ்தவர் தங்கள் விசுவாசத்தை ஒருபோதும் தூக்கியெரியாமல், அதை ஒரு பெரும் மதிப்பு மிக்கச் சொத்தாகப் பிடித்துக் கொள்வார். "நம்முடைய பலன் பரலோகத்தில்; மிகுதியாக இருக்கும்" என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் (லூக். 6:23); ஆனால் **இங்கு மிகுந்த பலன்** (வசனம் 35) என்று நிகழ்காலத்தில் கூறப்பட்டிருக்கிறது.

தன்னுடைய வாசகர்கள் ஏற்கனவே செயல்பட்டதுப்போன்று கிறிஸ்துவை சேவிப்பதில் தைரியமாகச் செயல்பட ஆசிரியர் இங்கு

வலியுறுத்துகிறார். அவர் தற்போது தேவனுடைய சிங்காசனத்தை அணுகும் விதமாகிய **தைரியம்** (παρρησία, *பர்ரிசியா*) என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார் (4:16; 10:19). அநேகமாக இங்கு நாம் கோழைத்தனமான ஒரு போர்வீரன் ஓடும்போது தன்னுடைய வலிமைமிகு போராயுதங்களை வீசியெறிந்து ஒடுவதற்கான ஒப்பீட்டை காண முடிகிறது. இப்படிப்பட்ட செயல் குறிப்பாக அவமானகரமானதாக எண்ணப்படுகிறது. பவுல் இதே வகை உருவகமான போர் வீரரை பயன்படுத்தினார் (எபே. 6:12-17). பிரச்சனை நேரங்களில் தைரியமாக இருப்பது ஒரு அற்புதமான பண்பாகும், இது உண்மையான விசுவாசத்தின் பொருளின் அடிப்படையின் மீது இருக்கிறது (எபி. 11:1). இது தேவன் மீது கொள்ளும் மெய் நம்பிக்கையே அல்லாமல் சுய தைரியம் கிடையாது.

ஒருவர் தன்னுடைய விசுவாசத்தில் உறுதியாக இருக்க வேண்டும், அப்படியில்லாவிட்டால் அவர் தன்னுடைய பலனை பெற இயலாது. சகிப்பது (ὑπομονή, *ஹிப்போமோனே*) அல்லது பொறுமை (வசனம் 36; KJV) என்றால் உபத்திரவத்தின் மத்தியில் விடா முயற்சியாக இருப்பது என்பதாகும். அநேகமாக ஒருவர் உபத்திரவங்களிலும் … மேன்மைப்பாராட்டக் கூடும் (ரோமர் 5:3). இந்த உபத்திரவமானது ஒருவருடைய விசுவாசத்தைச் சோதித்துச் சகிப்புத்தன்மையை விளைவிக்கிறது (யாக். 1:2, 3). வரும் கால நித்திய பலனோடு ஒப்பிடுகையில் நம்முடைய உபத்திரவங்கள் மிகவும் எளிதானவைகளாக இருக்கிறது (2 கொரி. 4:17). **தேவனுடைய சித்தத்தைச்** செய்வதே நம்முடைய இலட்சியமாக இருக்கிறது, ஏனெனில் நம்முடைய விசுவாசத்தை மட்டுபடுத்தல், விட்டுவிடுதல், அல்லது துறத்தல் ஆகியவை தேவனால் **வாக்குப்பண்ணப்பட்டிருப்பதைப்** பெற முடியாததில் ஏற்பாடுவது ஆகும். இந்தக் கிறிஸ்தவர்கள் உபத்திரவப்படுவது தேவனுடைய சித்தத்தில் அவசியமானதாக இருக்கவில்லை, ஆனால் அவர் அவர்களுடைய சகிப்பின் நிமித்தம் பெரிய பலனை அளிக்கச் சித்தம் கொண்டார்.

**வசனங்கள் 37, 38.** இந்த வசனங்கள் வெளிப்படையாகவே கிறிஸ்துவைப் பற்றிப் பேசுகிறது ஆனால் பழைய ஏற்பாட்டு எழுத்துக்களில் இது வெளிப்படையாக இல்லை. அப்படியென்றால் இந்தப் பகுதி எப்படி அவரை குறிப்பிடுவதாக இருக்கக் கூடும்? மேலும், இங்கு **வருகிறவர்** என்று குறிப்பிடுவது என்ன? ஏசாயா 26:20 மற்றும் ஆபகூக் 2:3, 4-ல் குறிப்பிடப்பட்டவார்த்தைகளை வசனங்கள் 37, 38-ல் காணலாம். தீர்க்கத்தரிசியானவர் விடுதலைக்காகக் காத்திருப்பதாக வசனங்கள் காட்டுகிறது. எபிரெயரின் ஆசிரியர் LXX-ல் “வருகிறவர்” என்பதை வலியுறுத்த வார்த்தைகளை மறு அமைப்புச் செய்தார்.

பல ஆசிரியர்கள் இந்த “வருகிறவர்” என்பதைக் கிறிஸ்துவின்

இரண்டாம் வருகை என்று பார்க்கின்றனர். எப்படியாயினும், இக்கூற்றானது பழைய ஏற்பாட்டு தீர்க்கத்தரிசியின்படியோ அல்லது இங்கு எபிரேயரின்படியோ இரண்டாம் வருகையைக் குறிப்பிடுவதாக இருக்க முடியாது. இந்த அப்போஸ்தலர்கள் அவர்களுடைய நாட்களில் கிறிஸ்துவின் வருகை சமீபமாக இருக்கிறதென்று போதிக்கவில்லை. 2 தெசலோனிக்கேயர் 2:1-3ன் ஆய்வானது அவருடைய இரண்டாம் வருகையானது முதலாம் நூற்றாண்டில் உடனடியாக நிகழக்கூடியதாகக் காட்டப்படவில்லை. பவுலுக்கும் மற்ற புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களுக்கும் கர்த்தருடைய வருகையைக் குறித்து முரண்பாடுகள் உள்ளதாக ஒருவர் ஏன் யூகிக்க வேண்டும்? கர்த்தருடைய இரண்டாம் வருகை வெகு சீக்கிரத்தில் காணப்படாது என்பதில் அவர்கள் அனைவரும் முழு ஒப்புதலோடிருந்தனர்.

ஒரு சிலரை தண்டிப்பதற்கும் ஒரு சிலரை விடுவிப்பதற்கும் தேவன் வருவதாகத் தீர்க்கத்தரிசிகள் அடிக்கடி பேசியிருப்பதை நினைவில் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, ஆமோஸ் 4:12 ல் தேவன் இஸ்ரவேலரை தண்டிக்க வருகிறார். கல்தேயரிடமிருந்து விடுதலையானது வரப்போகிறது என்று தீர்க்கத்தரிசிக்கு அவர் வெளிப்படுத்தினார், மேலும் அது மக்களுக்கு வெகு தூரத்தில் காணப்பட்டாலும், தேவன் தாமதம் செய்யார். அப்போஸ்தலர் 7:30, 31ல் இயேசு வருவதற்கு ஒரு நாளை தேவன் ஏற்படுத்தியிருக்கிறார் என்று பவுல் பிரகடனப்படுத்தினார். அந்த நாளுக்காகக் காத்திருக்கும் சமயத்தில் **நீதிமான்கள்** நடப்பவைகளைப் பற்றி **விசுவாசமாக வாழ** வேண்டும். ரோமர் 1:17ல் பவுல் விசுவாசத்தின் மீதான ஆராய்ச்சிக் கட்டுரையில் இதே வசனத்தைப் பயன்படுத்தினார். எபிரேய நிருபமும் பவுலின் நிருபங்களும் தேவன் வாக்குப்பண்ணின "ஜீவனை" பெறுவதற்கு விசுவாசமாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்தம் செய்கிறது.

கூறப்பட்டுள்ள இயேசுவின் எல்லா "வருகையும்" இயேசுவின் இரண்டாம் வருகையல்லவென்று புதிய ஏற்பாடானது தெளிவுப்படக் கூறியிருக்கிறது. மத்தேயு 24:27ல் "மனுஷகுமாரனின் வருகையைப் பற்றிப் பேசுகிறது." ஆனால் இது இரண்டாம் வருகையைப் பற்றினதாக இருக்க முடியாது. மாறாக இந்தக் குறிப்பில், கிறிஸ்துவானவர் அவரை மறுதலித்த எருசலேம் மக்களின் விசுவாசமற்ற தன்மைக்காகத் தண்டிக்க வருவதைக் குறிக்கிறது. அடுத்த வசனத்தில் அவர் "எருசலேம் மக்களில் அவர் கண்ட செத்த விசுவாச - "பிணங்களை" பற்றிப் பேசினார். காலம் செல்லும்போது அவர்களுடைய சூழ்நிலையின் காட்சியானது இன்னும் துல்லியமானதாக இருந்தது. இந்த "பிணத்தை" சுற்றி தான் ரோம "கழுகுகள்" கொள்ளையடிக்கவும், அழிக்கவும் ஒன்று சேர காத்திருந்தது. பழைய ஏற்பாட்டில் தீர்க்கத்தரிசிகளின் மூலம் வாக்குப்பண்ணினதை

தேவன் பின்பற்றினது போன்றே அந்த நேரத்திலும் கர்த்தர் சடுதியில் வந்து தண்டிப்பார்.

இதனுடைய ஆசிரியர் இயேசுவைக் குறித்துக் கூறுகையில் **வருகிறவர் இன்னுங்கொஞ்சக்காலத்தில் வருவார், தாமதம்பண்ணார்** (வசனம் 37) என்று கூறுகிறார். சந்தேகத்திற்கு இடமில்லாமல் எருசலேமின் எதிர்வரும் அழிவைக் குறித்து அவர் பேசிக் கொண்டிருக்கிறார், அதில் மக்கள் இயேசுவை புறக்கணித்துச் சிலுவையில் அறைந்தபடியினால் அவர் ஜாதிகளை நியாயந்தீர்க்க "வருகிறார்" (வசனம் 39ன் விவாதத்தைக் காணவும்). எப்படியாயினும் அவர் அவருடைய நீதிமான்களாகிய பரிசுத்தவான்களை விடுவிப்பதாக வாக்குப்பண்ணினார். சனகெரிப் சங்கத்தினரும் ஸ்தேவானை குற்றஞ்சாட்டினவர்களும் இயேசு தேவாலயத்தை இடிப்பதாகக் கூறினார் என்று கூறினதில் ஒரு விதத்தில் தவறு இல்லை (அப். 6:13, 14). அவர்களுடைய தண்டனையும் அதனுடன் இணைந்த கிறிஸ்தவ விசுவாசிகளின் தப்பிதத்திலுமானது பழைய ஏற்பாட்டு உணர்வில் கிறிஸ்துவின் வருகையாக, சிலரை தண்டிக்கவும் மீந்திருப்பவர்களை விடுவிப்பதுமாக இருக்கிறது.

நாம் இந்த விடுதலையை வசனம் 37 டன் இணைத்திட்டோம்; மேலும் இது வசனம் 38 உடனும் இணைக்கப்பட வேண்டும். ஆபகூக் 2:4 லிருக்கிற தன் **விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்** என்ற மேற்கோளானது, அசலில் இது கல்தேய இராஜ்ஜியத்தை அகற்றுதலையும் அவர்களின் மூலம் யூதருக்கு நேர்ந்த உபத்திரவத்தின் முடிவையும் சுட்டுகிறது. எப்படியாயினும், அதே நடைமுறையில் எபிரேயரில் பயன்படுத்தவும் இது பொருத்தமானதாக இருந்தது.[77] தேவன் தாமே பழிவாங்க வந்து பெருமையுள்ளவர்களைத் தண்டிப்பாரென்று ஆபகூக் கூறிக் கொண்டிருக்கிறார். அதேப்போன்று எருசலேமின் வீழுச்சியின் போது நடந்ததுப்போலவே விசுவாசிகள் உபத்திரவத்திலிருந்து தப்புவிக்கப்படுவார்கள். ஆபகூக்கின் தீர்க்கத்தரிசனமானது எபிரேய ஆசிரியரின் நோக்கத்திற்குச் சரியாகப் பொருந்துகிறது. பழைய ஏற்பாட்டை அதன் அடிப்படை பொருளை அழிக்காமல் மறு அமைப்பு செய்கிற உரிமையானது தங்களைப் பரிசுத்த ஆவியானவரின் பேச்சாளர்கள் என்று அறிந்த புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களின் பண்பாக இருக்கிறது.[78]

அநேகமாக "நீதிமான்" அதாவது ஒரு கிறிஸ்தவன் **பின்வாங்கிப் போனால்** தேவன் அவருடைய ஆசீர்வாதங்களை அவருக்கு அளிக்கமாட்டார். அவர் அவிசுவாசிகளில் **மகிழ்ச்சியடைவதில்லை**. ஒன்று விசுவாசத்தில் வாழ வேண்டும் அல்லது யூத மதத்திற்குத் திரும்ப வேண்டும் என்பதே இந்த நிருபத்தைப் பெறுகிறவர்களுக்கு இருக்கின்ற வழியாக இருந்தது.

**வசனம் 39.** ஒருவேளை அவர்கள் யூதமதத்திற்குத் திரும்பினால்,

**அழிவே** அதன் முடிவாக இருக்கும். ஒருவர் தன் ஆத்துமாவை காத்துக் கொள்ளத் தன்னுடைய விசுவாசத்தைக் காத்துக் கொள்வது அவசியமாக இருக்கிறது. சிலர் பழைய உடன்படிக்கைக்குச் சென்று விட்டதாக அவர் கூறினார், ஆனால் அவர் தன்னுடைய நிருபத்தின் வாசகர்கள் விழுந்து விடக் கூடாதென நம்பிக்கைக் கொண்டிருந்தார். **பின்வாங்கிப் போகிறவர்கள்** தங்கள் **ஆத்துமாவை காக்கும் விசுவாசத்தை** வைத்திருக்க முடியாது. ஒருவேளை ஒருவர் விசுவாசத்தை இழப்பது அசாத்தியமாக இருக்குமெனில், இந்த எச்சரிக்கை ஏன் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்? இந்தச் சொற்றொடரானது இயேசு எருசலேமின் வீழ்ச்சியைக் குறித்து உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள் (லூக். 21:19) என்று கூறின வார்த்தைகளுக்கு ஒப்பாக இருக்கிறது. சகிக்கிறவர்களுக்கு விசுவாசம் அவசியமாகிறது. இந்தக் கிறிஸ்தவர்கள் விழ்ச்சியடைவதிலிருந்தும் இந்த எபிரேய கிறிஸ்தவர்கள் பின்வாங்குவதிலிருந்தும் தடுத்து நிறுத்த முடியவில்லை. பலர் யூத மதத்தை விட்டும் பரிசுத்த நகரத்தை விட்டும் பாதுகாப்பிற்கு நேராகக் கிறிஸ்துவை பின்பற்றினார்கள். ஆக இன்றைக்கு நமக்குச் சகிக்கும் விசுவாசம் அவசியமாக இருக்கிறது.

**நாம்** என்று சொல்லி இதன் ஆசிரியர் மேலும் ஒரு முறை தன்னை இதன் வாசகர்களோடு இடமமர்த்திக் கொண்டார். அவர் ஏற்கனவே 2:3 ல் கூறினதுப்போல அவர்களை விசுவாசத்தோடு வாழ உற்சாகப்படுத்தும் நோக்கத்தோடு இப்படிக் கூறினார். கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தின்படி வாழ வேண்டும், அதாவது அவர்கள் வாழ்நாள் வரை விசுவாசமாக வாழ வேண்டும். தன் விசுவாசத்தைக் காத்துக் கொள்கிற ஒவ்வொருவரும் “தன் ஆத்துமாவை காத்துக்கொள்கிறார்கள்” (ψυχή, *சூக்கே*). ஒருவேளை *சூக்கே* என்பது “ஜீவன்” என்று மொழியாக்கப்பட்டால், இந்தச் சொற்றொடர் இங்குக் கொடுக்கப்பட்டுள்ள வியாக்கியானத்திற்குப் பொருத்தமாக இருக்கிறது. எப்படியாயினும் இயேசுவின் போதனைக்குக் கீழ்ப்படிந்து இந்தப் பட்டணத்திலிருந்து தப்பித்த கிறிஸ்தவர்கள் தங்கள் ஆத்துமாவையும் தங்கள் ஜீவனையும் பாதுக்காக்க வேண்டியதாக இருந்தது.

அநேகமாக ஒரு யூத கிறிஸ்தவன் எருசலேமை விட்டுச் செல்லும் தன்னுடைய சக கிறிஸ்தவனைப் பார்த்தப்போது, அவன் அவர்களோடு சென்று பின்னர் “பின்வாங்கிப் போகக்கூடும்.” யூத தேவாலயத்திற்குள் மீண்டும் திரும்புதலானது மத்தேயு 24 -லுள்ள கிறிஸ்துவின் வார்த்தையைப் புறக்கணிப்பதாகும். மேலும் இயேசுவினால் அளிக்கப்பட்ட விசுவாச சோதனைக்குக் கீழ்ப்படியாத நபரில் தேவன் மகிழ்ச்சியாக இருக்க மாட்டார். மத்தேயு 24:13 “முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்” என்று கூறுகிறது. இந்தச்

சூழலில் இந்தச் சொற்றொடரானது ஒருவருடைய வாழ்வின் முடிவையோ அல்லது காலத்தின் முடிவையோ சுட்ட இயலாது. இது எருசலேமின் முடிவிற்கு மட்டுமே நடைமுறைப்படுத்த கூடும். ஆக வசனம் 39 மத்தேயு 24 ல் இயேசு கூறினதற்கு இணையாக இருக்கிறது. இந்தப் பட்டணத்தை விட்டு கிரேக்கப்பட்டணமாகிய பெல்லாவிற்குச் செல்லும் ஒரு விசுவாசி தன்னுடைய ஜீவனைப் பாதுகாத்து மற்றும் நித்திய வாழ்வை பின்பற்ற, விசுவாசத்தை இறுதி வரை செயல் விளக்கப்படுத்த கூடும். நீதிமானானவன் தன் ஜீவனையும் தன்னுடைய ஆத்துமாவையும் பாதுக்காக்க வேண்டுமெனில் தன்னுடைய விசுவாசத்தில் தொடர்ந்து வாழ வேண்டும். "அழிவென்பது" அநேகமாக ஜீவனை இழக்கும் சாத்தியக்கூறாக இருக்கக் கூடும், ஆனால் அது தன்னுடைய சுதந்திரத்தை இழப்பதை உறுதியாகப் பொருள்படுத்துகிறது. அவனுடைய வாழ்விற்கு இனிமையானவை அனைத்தும் எருசலேமில் அழிக்கப்படப் போகிறது. அப்படிப்பட்ட சூழலில் ஒரு கிறிஸ்தவன் அங்கு எதற்கு வாழ வேண்டும்?

இந்தப் பகுதியானது இரட்சிக்கும் விசுவாசத்திற்கான ஒரு அறிமுகமாக இருக்கக்கூடும், இந்த தலைப்பே நம்மை 11 ஆம் அதிகாரத்திற்கு வழிநடத்துகிறது. அங்கே நாம் விசுவாசத்தின் பெரும் முன்னுதாரணங்களையும், மீட்படையும் விசுவாசமனாது எங்ஙனம் கிரியை செய்கிறது என்பதை விளக்கமாகவும் காண முடியும்.

## மேலும் ஆய்வுக்கு:

## "அடையாளமும்" மற்றும் "சமீபமாக இருக்கும் அந்த நாள்"

மத்தேயு 24-ல் அப்போஸ்தலர்களுடனான இயேசுவின் உரையாடல்களில் நகரத்தின் வீழ்ச்சியின் நிகழ்வுகளை முன்னுரைத்து "அடையாளங்கள்" பல கொடுக்கப்பட்டுள்ளது. இவைகள் ஏவுதல் பெற்ற அப்போஸ்தலர்களால் கூடுதல் விளக்கங்களையும் பெற்ற விசுவாசிகளால் "காணக்கூடியவைகளாக" இருக்கக்கூடும். விசுவாசத்தின் மூலம் இயேசு முன்னுரைத்த அடையாளங்களின் நிறைவை அவர்கள் அங்கீகரித்தனர். இயேசுவால் விவரிக்கப்பட்ட நிகழ்வுகள் அநேகமாகக் கி.பி. 66 லிருந்து 70 வரையான ஆண்டுகளில் நடந்தது, பூமியதிர்ச்சிப்போன்ற அவற்றில் சில நிகழ்வுகள் கி.பி. 50-ல் நடந்தது (மத். 24:7). கொடுக்கப்பட்ட அடையாளங்கள் "அவைகள் ஏற்கனவே பகுத்தறிவுள்ள புருஷருக்கும், ஸ்திரீகளுக்கும் காணப்பட்டிருந்தது."[79] ஒருவர் இயல்பாகவே அவருடைய மரணம் சமீபிக்கையில் தன் சக கிறிஸ்தவர்களோடு கூடுகையில் ஐக்கியங்கொள்ள விரும்புவார்கள் (எபி. 10:25ஐ காணவும்), ஆனால் அது இந்தப் பகுதியின் குறிப்பல்ல.

ஒரு விசித்திரமான அடையாளம் மத்தேயு 24:15, 16 ல்

கூறப்பட்டுள்ளது: “மேலும், பாழாக்குகிற அருவருப்பைக்குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறதை வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன். நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது, யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்” இந்தப் பிரச்சனையானது மாற்கு 13:14ல் மறுபடியும் கூறப்பட்டுள்ளது. “அது நிற்கத்தகாத இடத்திலே நீங்கள் அதை நிற்க காணும்போது, யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்.”

“பாழாக்குகிற அழிவு” என்றால் என்ன? இதை லூக்கா சற்று அதிகமாக விவரித்தார்: “எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும்போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள். அப்பொழுது யூதேயாவிலிருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகவும், எருசலேமிலிருக்கிறவர்கள் வெளியே புறப்படவும், நாட்டுப்புறங்களிலிருக்கிறவர்கள் நகரத்தில் பிரவேசியாமலிருக்கவும்கடவர்கள்” (லூக். 21:20, 21). எருசலேமும் அதன் சேனைகளும் சூழப்பட்டிருக்கையில் நகரத்திலிருந்து ஒருவர் எப்படித் தப்பிக்கக் கூடும்? மற்றவர்கள் அதற்குள் எப்படிப் பிரவேசிக்கக் கூடும்? இயேசு மத்தேயு 24:22 ல் ஒரு துப்பு கொடுக்கிறார் “அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை; தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்.” இங்குத் தான் கண்கண்ட சாட்சியாகிய ஜொசிபஸ் அவர்கள் நமக்குப் பேருதவி ஒன்றை செய்திருக்கிறார். ரோம சேனைகள் எருசலேமின் கலகத்தை அடக்குகிற அதனுடைய முதல் துணிகரமான முயற்சியில், “இந்த உலகத்தில் எந்தக் காரணமும் இல்லாமல் அந்தப் பட்டணத்திலிருந்து அது ஓய்வு பெற்றதாக” அவர் கூறினார்.[80]

முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் எழுதினாலும், செஸ்டியஸ் ஏன் தன்னுடைய படை வீரரை திரும்பப் பெற்றார் என்பதற்கான காரணத்தை இந்த முன்னாள் பரிசேயர் இன்னமும் கற்றறிய இயலவில்லை, ஆனால் ஜொசிபஸ் அவர்கள் அறியாத ஒன்றை நாம் அறிந்திருக்கிறோம்: தேவன் தம்முடைய தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களுக்காகக் கரிசனைக் கொண்டு, நாட்களைக் குறுகச் செய்தார். இது கிறிஸ்தவர்களுக்குத் தப்பிக்க ஒரு வாய்ப்பைத் தந்தது. “சபை வரலாற்றின் தந்தையாகிய” யூசிபியஸ் அவர்கள் கிறிஸ்தவர்களின் “முழுச் சரீரமும்” அவர்களுக்கு அளிக்கப்பட்ட “தெய்வீக வெளிப்பாட்டின்படி” தப்பிக்க அனுமதிக்கப்பட்டனர் என்று அறிக்கைச் செய்தார்.[81]

எருசலேமின் வீழ்ச்சிக்கு இயேசு கூறின அடையாளங்களுக்கு மாறாக, அவருடைய இரண்டாம் வருகையைக் குறித்த கேள்விக்கு “அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர

மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்" (மத். 24:36) என்று அடுத்ததாக மறுமொழியளித்தார். இந்தச் சொற்றொடரானது எருசலேமின் வீழ்ச்சிக்கு நடைமுறைப்படுத்த முடியாது, அல்லது அவர் கொடுத்த அனைத்து அடையாளங்களும் பயனற்றதாக இருக்கும். "நாள் நெருங்கியிருக்கிறது" என்பது யூதேயா யூதர்களுக்கும் இந்த நிருபம் எழுதப்பட்ட பகுதியிலிருக்கும் மக்களுக்கும் விஷேசமான முக்கியத்துவம் வாய்ந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. "கண்காணிகள் மற்றும் மூப்பர்களுக்கு" என்று பிலிப்பியருக்கு முகவரியிட்டது போல (1:1) இந்த நிருபம் முகவரியிடப்படாமல் தங்களுடைய ஆத்துமாக்களையும் சரீரங்களையும் காப்பாற்றிக் கொள்வதற்காகக் கீழ்ப்படிய வேண்டியிருந்த சபைக்குள்ளான ஒரு மக்கள் குழுவினருக்கு முகவரியிடப்பட்டது (எபி. 13:17).

## பயன்பாடு

### ஒரு நிழல் அல்லது நிஜமான காரியம் (10:1)

ஒரு சமையல் புத்தகத்தை வாசிப்பதைக் காட்டிலும் ஒரு ஊட்டச் சத்துமிக்க உணவை உண்பது சிறந்ததாக இருக்கிறது. ஒருவர் வீட்டை விட்டுத் தொலைவிலிருக்கும்போது தன் மனைவி மற்றும் பிள்ளைகளின் படத்தைத் தன்னுடன் வைத்திருப்பது உகுந்ததாக இருக்கும், ஆனால் அவர் அவர்களோடு வீட்டிலிருக்கும்போது அப்படியிருக்க முடியாது. நாம் நம்முடைய அன்பிற்குரியவர்களை விட்டுத் தூரமிருக்கையில் நம்முடைய புன்னகையையும் கண்ணீரையும் அவர்கள் உண்மையாய் பகிர்ந்து கொள்ள முடியாது. நாம் "நிழலை" உண்மைப் போன்று அனுபவிக்க முடியாது. நியாயப்பிரமாணமும் ஆசாரிப்புக் கூடாரமும் உண்மையான உருப்படிகளுக்கு ஒருபோதும் சாதகமான ஒப்பாக இருக்க முடியாது. ஒவ்வொரு மிருகங்களின் பலியும் குற்ற உணர்வை பாவிகளுடைய இருதயத்தில் அழிக்க இயலாதப்படிக்கு மேலும் அழுத்தத்தைத் தந்தது; ஆனால் கிறிஸ்துவின் பூரணமான பலியானது குற்ற உணர்வை நம்முடைய ஆத்துமாக்களிலிருந்து நீக்குகிறது.

### தேவன் விரும்பினது சடங்காச்சாரமான பலியையல்ல (10:1)

உண்மையாகவே தேவன் மிருக பலியை விரும்பினது கிடையாது எபிரேய நிருபமும் இதை போதிக்கவில்லை. சாமுவேலுக்காகக் காத்திருப்பதில் சோர்ந்துப் போன சவுல் இராஜா, அங்கீகாரம் இல்லாமல் தன் பணிகளைச் செய்ய முற்பட்டு தன்னுடைய பலிகளைத் தேவனுக்குச் செலுத்தினார். அவருடைய செயல் அந்த மக்களைக்

கவர்ந்திருக்கலாம். பின்னர் சாமுவேல் அங்கு வந்த உடனே, "கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்" (1 சாமு. 15:22) என்ற இந்த வார்த்தைகளைக் கொண்டு இராஜாவை கடிந்துக்கொண்டார். சங்கீதம் 51:16, 17-ல் தாவீது இந்தச் சத்தியத்தை மீண்டும் அறிவுறுத்துகிறார்: "பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்; தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல. தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்."

தேவனுக்குப் பலியை காட்டிலும் நொறுங்குண்ட ஆவி விலையேறப் பெற்றதாக இருக்கிறது (ஓசியா 6:6; KJV). இந்தப் பழைய ஏற்பாட்டு போதனையானது இயேசுவால் இருமுறை மேற்கோளிடப்படுகிறது (மத். 9:13; 12:7). "இப்படித் தான் நான் உம்மைக் கனப்படுத்தி ஆராதிக்க விரும்புகிறேன்" என்று கூறி தேவன் மீதான ஒருவருடைய அன்பையே நியாயப்பிரமாணத்தின் பலிகளும் பொருள்படுத்துகிறது. அதே போன்று புதிய ஏற்பாட்டு ஆராதனைகளும் முறைமைகள் மற்றும் சடங்காச்சாரங்களை விட ஆவிகளின் உள்ளார்ந்த கீழ்ப்படிதலாக இருக்க வேண்டும். நம்முடைய ஆராதனையானது இருதயத்திலிருந்து வரவேண்டும் (மத். 15:8, 9; எபே. 5:19). ஒருவேளை நம்முடைய உபதேசம் தவறாக இருக்கும் பட்சத்தில், நம்முடைய ஆராதனையும் தவறு என்று இயேசு கூறுகிறார் (மத். 15:9). உண்மையான கோட்பாடுகளைக் கற்க மற்றும் போதிக்கத் தவறுவது ஒருவருடைய இருதயம் தவறாக இருக்கிறது என்று சுட்டுகிறது.

ஆனாலும், தேவன் பலிகளில் ஒரு நோக்கம் கொண்டிருந்தார். மக்கள் தங்கள் பாவங்களுக்கான பொறுப்பைக் கொஞ்சமாவது உணர வேண்டும் என்று தேவன் விரும்பினார். ஐசுவரியங்களிலிருந்து செலுத்துதல் (மந்தை மற்றும் விளைச்சலின் பலன்கள்) பாவத்திற்கு ஒரு விலை கொடுத்தாக வேண்டுமென்பதை காட்டினது. இப்படிப்பட்ட பலிகள் உண்மையாகவே பாவத்திற்கான பரிகாரமாக இராமல், அவைகள் தேவனுடைய மக்கள் பரிகாரம் செய்யப்படவேண்டிய அவசியத்தை உணர்வில் பதித்தது.

**பாவத்திலிருந்து தப்பிக்க முடியாது (10:1, 3)**

வருடாந்திர பலிகளால் பாவத்தை நீக்க இயலவில்லை, ஆக எவரும் "பூரணமாக்கப்படவில்லை" அதாவது "பாவத்திலிருந்து முற்றிலும் விடுதலையாக்கப்படவில்லை" என பொருள்படுத்துகிறது. யூதர்கள் "பாவ நிவாரண நாள்" (வசனம் 3) என்ற வருடாந்திர பாவ நினைவு கூறுதலை கொண்டிருந்தனர். "நினைவு கூறுதல்" என்று

மொழியாக்கம் செய்யப்பட்ட பெயர்ச் சொல், புதிய ஏற்பாட்டில் இந்த வசனத்திலும் கர்த்தருடைய இராப்போஜன தொகுப்பிலும் மட்டுமே காணப்படுகிறது (லூக். 22:19; 1 கொரி. 11:24, 25). கிறிஸ்தவர்கள் பாவத்தைப் போக்கும் அவருடைய இரத்தஞ்சிந்துதலைக் குறித்த வாராந்திர நினைவுக்கூறுதலை கொண்டிருக்க (மத். 26:28) யூதர்களின் வருடாந்திர நாளானது பாவத்தின் நினைவுக்கூறுதலாக இருந்தது. இயேசு மாத்திரமே பாவத்தை நேர்த்தியாக கையாண்டார்.[82]

## இளங்காளை மற்றும் வெள்ளாட்டு இரத்தத்தினால் இரட்சிக்க இயலாது (10:4)

இரட்சிக்கப்படுவதற்குக் கிறிஸ்துவின் இரத்தத்திற்கு மாற்றாக வேறு எதுவும் கிடையாது. நாம் வேறு எவைகளாலும் இரட்சிக்கப்பட்டதும் இல்லை, இரட்சிக்கப்படப்போவதும் இல்லை. அப்படி இருந்தால் கிறிஸ்தவமானது ஜீவனுள்ள மதமாக இருப்பதில் தோல்வியடைந்திருக்கும். நமக்கு அப்படி நடந்திருந்தால் அதுவே பரலோகத்திற்கான பிரத்தியேக வழியாக இருந்திருக்கும். கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினால், மற்ற மதங்கள் அனைத்தும் குறையுள்ளவைகளாக மாறிப்போனது. அந்த நிகழ்வானது நம்முடைய விசுவாசத்தின் அடிதளமாக இருக்கிறதேயொழிய வேறு எந்த முக்கியத்துவமும் கிடையாது. ரேமண்ட் ப்ரவுன் இதனை இவ்வாறு கூறுகிறார்:

> இளங்காளை மற்றும் வெள்ளாட்டுக்கடா ஆகியவற்றின் இரத்தம் பாவத்தைப் போக்க சாத்தியமில்லை என்று இந்த ஆசிரியரின் வார்த்தையைப் பயன்படுத்துவது எப்படி உண்மையோ அதே போல, ஒரு மனிதன் இஸ்லாமியத்தின் ஐந்து தூண்களாலும், இந்து மதத்தின் துறவர தீர்மானங்களாலும் அல்லது புத்த மத அறநெறிகளாலும், அல்லது சீக்கியத்தின் சுய இரட்சிப்பின் முறைமைகளாலும் தன்னுடைய இரட்சிப்பை பெற சாத்தியமில்லை என்பதும் உண்மையாகும்.[83]

கிறிஸ்துவின் பலியானது சிலரை மட்டுமே இரட்சிக்கும் மற்றவர்களை இரட்சிக்காது என்று யோசிப்பது முகாந்திரமற்றது. மனிதன் தன்னுடைய பாவத்தினால் தண்டிக்கப்பட்ட காரணத்தினால் இரட்சிப்பிற்கான அத்தியாவசியத்திலிருக்கிறான். இயேசு *என்ற* அவருடைய பெயருக்கினங்க அவர் "இரட்சகராக" இருக்கிறார். அவருக்காகக் காத்திருப்பவர்களுக்கு இறுதியான இரட்சிப்பை கொடுப்பதற்காக அவர் மீண்டும் வரப்போகிறார் (9:28).

## ஒரு தன்னார்வ சேனை (10:8-10)

மன்னர் ஜேம்ஸ் அவர்களுடைய காலத்தில் இராணுவத்தை

யுத்தத்திற்கு வழி நடத்துகிற பிரதம தலைவரை குறிப்பிட "தளபதி" (எபி. 2:10; KJV) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது. இயேசு நம்முடைய "தளபதியாக" (ἀρχηγός, *ஆர்கேகோஸ்*), "இரட்சிப்பின் அதிபதியாக" இருக்கிறார். அவர் தம்முடைய "சேனையை" தம்முடைய பணியைச் செய்ய வழிநடத்துவதில் எல்லா விதத்திலும் பூரணமான முன்னுதாரணத்தை அமைத்திருக்கிறார். அவர் தொண்டுள்ளத்தோடு இந்த முன்னுதாரணத்தை அமைத்திருக்கிறார். அவர் இந்த உலகம் ஒருபோதும் கண்டிராத பெரும் இலட்சியத்தை எடுத்துக் கொள்ளத் தம்முடைய மகிமை, கனம், சம்பத்து, மற்றும் பரலோக வல்லமை ஆகியவற்றை விருப்பத்துடன் தியாகம் செய்தார். "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள்நிமித்தம் தரித்திரரானாரே" என்று 2 கொரிந்தியர் 8:9 கூறுகிறது. அவர் செய்த தன்னார்வ பலியினால் கிடைத்த அவருடைய ஐசுவரியமானது, தற்போது நம்முடையதாக இருக்கிறதைப் போன்றே ஆவிக்குரியதாக இருக்கிறது.

கிறிஸ்தவர்கள் தன்னார்வமுடையவர்களாக இருக்க எதிர்ப்பார்க்கப்படுகின்றனர். ஒருவேளை நாம் தேவனுக்குக் கீழ்ப்படியாதப்போது அவர் இதை நமக்கு அசௌளகரியமானதாக மாற்றுகிறார், ஆனால் அவர் ஒருபோதும் எவரையும் வற்புறுத்துவது கிடையாது. எவர் வேண்டுமானாலும் வரலாம். "விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்." என்று வெளிப்படுத்தின விசேஷம் 22:17 கூறுகிறது. முன்பு எந்த ஒரு அப்போஸ்தலரும் செல்லாத மற்றும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படச் சிரமமாக இருந்த நாடுகளுக்கு, எந்தப் பண்பாட்டு முறை சார்ந்த சிந்தையில்லாமல் பவுல் பயணித்தார். அவர் சகோதரர்களால் ஆதரிக்கப்படாதப்போது, பிறரை சார்ந்திருக்காத படி தன்னுடைய தேவைக்கு அவர் வேலை செய்தார் (பிலி. 4:10, 11, 16-19). பெறுவதை விடக் கொடுப்பது சிறந்ததென்றும், அவசியப்படும்போது ஒருவர் தன் சொந்த கைகளால் வேலைச் செய்ய வேண்டுமென்றும் அவர் செயல்விளக்கப்படுத்தினார் (அப். 20:33-35). சில நேரங்களில் அவர் செல்ல வேண்டிய இடங்களுக்குக் கர்த்தரே வழிநடத்தினார், ஆனால் மற்ற சமயங்களில் அவர் தன் சொந்த முயற்சியில் சென்றார் (அப். 15:36; 16:6-10). எவ்விலைக் கொடுத்தாகிலும் இழந்துப் போனவர்களை ஆதாயம் செய்ய அவர் ஆர்வமாக இருந்தார். சுற்றி திரிந்து விருப்பத்தோடு ஊழியம் செய்யும் ஆவியையே இயேசு "இதோ, வருகிறேன் … உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்" (சங். 40:6-8) என்ற தாவீதின் ஏவப்பட்ட வார்த்தையின் மூலம் குறிப்பிடுகிறார்.

**பழைய உடன்படிக்கைக்கு இயேசு செய்ததென்ன (10:9)**

"நீக்கிப்போடும்" என்ற வரியானது கிரேக்கத்தில் "அழிப்பது" அல்லது "கொடூரமாகக் கொல்லுதல்" என்று பொருள்படும் ஒரே வார்த்தையாக (ἀναιρέω, *அநெய்ரியோ*) இருக்கிறது. இயேசுவை கொல்வதற்காக (லூக். 23:32; அப். 10:39) பெத்லேகேமில் குழந்தைகளைக் கொன்றதற்கு (மத். 2:16), மற்றும் "அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார்" (2 தெச. 2:8) என்பதற்கும் இதே வார்த்தையே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

இயேசு தன்னுடைய புதிய உடன்படிக்கையால் லேவிய முறையிலான ஆசாரியத்துவப் பலிமுறைகளை நிறைவேற்றி அதனை மாற்றிப்போட்டார் என்ற சத்தியத்தைத் தவிர வேறு எதுவும் தெளிவானதாக இருக்க முடியாது. தேவாலயத்தை மறுபடியும் கட்டினால் பழைய ஏற்பாட்டு பலிகளை மீண்டும் நிலைநிறுத்த வேண்டிய அவசியமிருக்கிறது. ஒரு விசுவாசியானவர் இந்த வசனத்தின் சூழலில் மட்டும் எருசலேமில் மற்றொரு தேவாலயத்தைக் கட்டியெழுப்ப விரும்புவதேன்?

**சுத்திகரிப்பு எதை அனுமதிக்கிறது (10:10)**

ஒரு நபர் சுத்திகரிப்பில்லாமல் கர்த்தரை தரிசிக்க முடியாது (எபி. 12:14), ஆனால் ஒருவர் சுத்திகரிப்பின் (அல்லது பரிசுத்தத்தின்) விருப்பத்தோடு தேவனுடைய சிங்காசனத்தையே அணுக முடியும். பழைய உடன்படிக்கையானது வெறும் சடங்காச்சாரச் சுத்திகரிப்பிற்கான அழைப்பை மட்டுமே விடுத்தது, ஆனால் புதிய உடன்பாட்டின் கீழ் தேவனுக்கு ஊழியம் செய்யும் புதிய அர்ப்பணிப்போடு, சுத்திகரிப்பை முழுமையாகவும் மொத்தமாகவும் பெற்றிருக்கிறோம். சுத்திகரிப்பை பெறுவதும் அதைப் பாதுகாப்பதுமே ஒவ்வொரு கிறிஸ்தவர்களின் நோக்கமாக இருக்க வேண்டும் (2 கொரி. 6:14-7:1).

**ஒரு பிரசங்கத்திற்குள் இன்னொரு பிரசங்கம் (10:1-18)**

எபிரேய நிருபத்தின் ஆசிரியர் 10:1-18 ல் கூறின முந்தைய சிந்தனைகளை மறுபடியும் இங்கு பயன்படுத்துகிறார், ஆனால் இது ஒரு சரியாக போதிக்கும் முறையா? ஏற்கனவே போதித்தவைகளின் சுருக்கம் அவைகள் பயன்படுத்தப்படுவதற்கு முன்னரும் கூட அடிக்கடி உதவிகரமாக இருக்கிறது. அதைத் தான் இதன் ஆசிரியர் இந்த வசனங்களில் செய்திருக்கிறார்.

இந்த நிருபத்தில் அவ்வப்போது எச்சரிக்கைகள் ஏற்கனவே காணப்பட்டாலும் (2:1-3; 3:12, 13; 5:11-14; 6:11, 12), 18ம் வசனத்திற்குப்

பிறகு எச்சரிக்கைகள் தொடங்குகிறது. விளக்கமுறை பகுதியிலுள்ள ஒரு பாடத்திலிருக்கும் எச்சரிக்கைகளையும் பயன்படுத்தி, இறுதியான, ஒரு நாடக வடிவிலான, மற்றும் உணர்ச்சிப்பூர்வமான வேண்டுகோளை ஆயத்தம் செய்வதற்கு உதவியாக இருக்கும். ஒரு பிரசங்கத்தின் முடிவு கண்டிப்பாக இப்படித்தான் இருக்க வேண்டும்! இதைத் தான் இதன் ஆசிரியர் துல்லியமாகச் செய்தார்.

**நிற்காமல் உட்காருதல் (10:11, 12)**

தெய்வீக அனுமதியில்லாமல் எவரும் தெய்வீக பிரசன்னத்தின் முன் அமர இயலாது. ஆசாரிப்புக் கூடாரத்தில் அல்லது தேவாலயத்தில் ஊழியம் செய்யும் ஆசாரியன் உட்கார இயலாது. அவன் நின்று கொண்டே அனைத்தையும் செய்ய வேண்டியதாக இருந்தது. எப்போதும் நிற்பதானது அவர்களுடைய வேலையானது நிறைவுப் பெறவில்லையென்றும், அவர்களுடைய முயற்சியால் பாவமன்னிப்பை பெற்றுத்தர முடியவில்லையென்றும் சுட்டுகிறது. இந்த ஆசாரியர்களைப் போன்றல்லாமல், கிறிஸ்துவானவர் பரலோகத்தில் தேவனுடைய வலதுப் பாரிசத்தில் உட்கார முடிந்தது (1:3; 8:1; 10:11, 12; 12:2). சுத்திகரிக்கப்பட்டவர்கள் அனைவரையும் அவர் முழுவதுமாகப் பூரணப்படுத்தியிருக்கிறார் (வசனம் 14), அது நிறைவேறிவிட்டப்படியால், நம்முடைய இரட்சிப்பிற்கு எந்நேரமும் கிரியை செய்ய வேண்டிய அவசியம் இனியுமில்லை.

**இப்போதோ நியாயத்தீர்ப்பா? (10:13)**

பாவத்தின் விளைவாக நம்முடைய வாழ்க்கை பாதிக்கப்படும்படிக்கு ஒருவேளை தேவன் தண்டனைகளை அனுமதிக்கக் கூடும். இது நம்முடைய இருதயங்களை மென்மையாக்கி, அவருடைய சித்தத்திற்கு மேலும் அதிகமாக நம்மைக் கீழ்ப்படிய பண்ணும் (12:4-11 காணவும்). நாம் தற்போதைய உபத்திரவங்களையோ அல்லது சில இறையியல்வாதிகளையோ நியாயத்தீர்ப்பின் நாளை மறக்க செய்ய அனுமதிக்கக் கூடாது. நியாயத்தீர்ப்பானது பாவத்தை மறுஎண்ணிக்கை செய்வதாக இருக்காது, ஏனெனில் அவைகள் தேவனோடு, கிறிஸ்துவிற்குள் மன்னிக்கப்பட்டிருக்கிறது. எது மன்னிக்கப்பட்டதோ அது மறக்கவும்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவின் சிலுவை மீதான மரணத்தினால் இந்த உலகமானது ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது, ஆனால் அந்தக் ஆக்கினை கடைசி நியாயத்தீர்ப்பை விடச் சற்றுத் தூரத்திலிருக்கிறது. கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் சாத்தான் ஏற்கனவே நியாயந்தீர்க்கப்பட்டிருக்கிறான் (யோவான் 12:23-32), ஆனாலும், அவன் தேவனுடைய மக்களைச் சோதிக்கவும், உபத்திரவப்படுத்தவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறான். அநேகமாக அவன் அவனுடைய

அக்கினி கடலின் கடைசி அழிவு வரை நம்மைச் சோதிக்க அனுமதித்திருக்கிறார் (வெளி. 20:10).

**ஆவியானவர் இன்னமும் எப்படி நமக்குச் சாட்சி கொடுக்கிறார் (10:15)**

ஆவியானவர் தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையின் மூலம் "சான்றளிக்கிறார்" அல்லது "சாட்சியிடுகிறார்" (KJV). அவருடைய வார்த்தைகளும் வாக்குத்தத்தங்களும் கிறிஸ்தவர்களுக்கு உறுதியை ஏற்படுத்துபவைகளாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானவரால் நமக்கு அளிக்கப்பட்ட வேதத்திலுள்ள எல்லாச் சாட்சிகளையும் வைத்துக் கொண்டு, தேவனை நமக்கு நேரடியாகச் சாட்சியிட தொடர்ந்து வேண்டுவது எவ்வளவு அகந்தையானது! அப்படிச் செய்வது துணிவின் உச்சமாகவும், வேதத்தின்படி அடிதளமற்றதுமாகும். இன்றைக்குத் தேவனிடமிருந்து "அடையாளங்களைப் பெறுவது" அவசியமற்றதாகும். நம்முடைய "வாழ்விற்கும் தெய்வ பக்திக்கும்" தேவையான அனைத்தும் வேத வசனத்தில் ஆயத்தமாகக் காணப்படுகிறது (2 பேதுரு 1:3).

"*ஆவியானவரும் நமக்குச் சாட்சியிடுகிறார்* என்ற சொற்றொடரானது, நமக்குத் தொடர்புடைய சாட்சிக்கு மாற்றாகப் புரிந்துக் கொள்ளப்படவேண்டுமேயொழிய நமக்கு நேரடியாக அனுப்பப்பட்ட சாட்சியாக அல்ல."[84] பரிசுத்த ஆவியானவர் நம்மோடு பேசுகிறார் என்பதே வேத்தில் வாசிக்கிறோம். ஏற்கனவே தேவன் பேசியதை திரும்பவும் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

ஒருவர் தன்னுடைய உள்ளான எண்ணங்களுக்குச் செவிக் கொடுத்து, தன்னை வஞ்சித்துக் கொள்ள விரும்பாமல், பரிசுத்த ஆவியானவரின் உண்மையான சாட்சியைக் கேட்க விரும்பினால், அவர் கண்டிப்பாக வேதத்திலுள்ள ஆவியானவரின் வார்த்தைக்குச் செவிக் கொடுக்க வேண்டும்.

தீர்க்கத்தரிசியாகிய எரேமியாவின் தீர்க்கத்தரிசனத்தில் மேற்கோள்காட்டுவதில், அல்லது பழைய ஏற்பாட்டைத் தேவன் கொடுப்பதில் பரிசுத்த ஆவியானவர் முழுமையாக ஏவுதல் தந்தார் என்று கூறுவதில் எபிரெய நிருபத்தின் ஆசிரியருக்கு எந்த ஐயப்பாடும் இல்லை. எபிரெயர் 10:15-17 ஆகிய வசனங்கள் எரேமியா 31:33, 34 ன் மேற்கோளாகும். 1 கொரிந்தியர் 14:37 ன் படி தன்னுடைய சொந்த வார்த்தைகளும் இதே வகையான ஏவுதல் பெற்றது எனப் பவுல் விசுவாசித்தார். அவருடைய எழுத்துக்களும் "வேதவாக்கியங்களாக" இருந்தது (2 பேதுரு 3:16). பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகிய இரண்டு "வேத வாக்கியங்களும்" தேவனால் ஏவப்பட்டு எழுதப்பட்டதாகும் (2 தீமோ. 3:16).

## பாவங்கள் இனியும் நினைவுக்கூரப்படுவதில்லை (10:18)

"பாவத்தின் விளைவுகள் மூன்று வகையாக இருக்கிறது: மன்னிக்கப்பட வேண்டிய கடன்கள், மீட்கப்பட வேண்டிய அடிமைத்தனம், ஒப்புரவாக்கப்பட வேண்டிய அந்நியத்தனம்."[85] பாவம் கொடூரமானது. அது நம்மைத் தேவனுக்கும் மற்றவர்களுக்கும் கடனாளியாக்குகிறது, இது நம்மை ஒரு அடிமைத்தனத்தோடு அல்லது பழக்கத்தோடு சிறைப்படுத்துகிறது, மேலும் இது நம்முடைய அன்பிற்குரியவர்களிடமிருந்தும், நம்மை மிகுதியாக நேசித்த ஒருவரை விட்டும் மெதுவாக பிரித்துவிடுகிறது. பாவத்தின் காரணமாக ஏற்பட்ட பிரிவினை இந்த வாழ்க்கையில் தொடங்கி, நித்தியத்திலும் தொடருகிறது.

பழைய ஏற்பாட்டுப் பலிகள் "பாவங்களை ஒருபோதும் எடுத்துப்போடவில்லை" (வசனம் 11), ஆனால் தற்போது தேவன் பாவத்தை ஒருபோதும் நினைவுக்கூருவதில்லை. பண்டையக் காலங்களில் இராஜாவின் சமூகத்தில் நிகழும் எல்லா கரியங்களையும் பதிவு செய்யும் அமைச்சர் ஒருவர் இருப்பார். அவர் "நினைவூட்டுகிறவ" என்று அழைக்கப்பட்டார். இராஜாவிற்கு முந்தைய தீர்மானங்களையும், செயல்களையும் நினைவூட்டுவதே அவருடைய பணியாக இருந்தது. நம்முடைய தேவன் இப்படிப்பட்ட ஒரு பணியாளை வைத்திருக்கவில்லை, மாறாக அவருக்குப் பக்கத்தில் (உருவகமாக) அவருடைய பிள்ளைகள் அனைவருக்கும் மன்னிப்பை ஏற்படுத்திய தம்முடைய பலியை நினைவுப்படுத்தும் அவருடைய ஒரே பேறான குமாரன் அமர்ந்திருக்கிறார்.

## விசுவாசத்தின் முழு உறுதி (10:22)

நாம் நம்முடைய இரட்சகரின் மீது முழு இருதயத்தோடு விசுவாசம் வைக்க முடியும். எபிரேயரிலிருக்கிற உபதேச போதனைகளை முழுமையாக விசுவாசித்தால் அந்த விசுவாசத்தின் முழு உறுதியும் நம்முடையதாகும். உண்மையான வேத சத்தியத்தின் மேல் கட்டப்படாத எந்த ஒரு விசுவாசமும் அறியாமையின் மேல் அடிப்படையாகக் கொண்ட மூட நம்பிக்கையாகவே இருக்கும். விடுதலையாவதற்கு நாம் சத்தியத்தை அறியவேண்டியதாக இருக்கிறது (யோவான் 8:31, 32). கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படிவதற்கு என்ன செய்யவேண்டும்? இதை ஏன் செய்கிறேன், விசுவாசத்தின் முழு உறுதியை எப்படிப் பெறுவது? என்று ஒருவர் புரிந்துக் கொள்ளாவிட்டால், பாவத்திலிருந்து விடுதலைப் பெற்ற "உபதேச சட்டத்திற்கு" (ரோமர் 6:17, 18) கண்டிப்பாகக் கீழ்ப்படிய வேண்டும்.[86] எபிரெய சகோதரர்கள் செய்திகளைப் படித்து அல்லது கேட்டு வளர்ந்ததைப் போல, ஒருவர் தன்னுடைய முதற்கட்ட கீழ்ப்படிதலுக்குப்

பின்னர் விசுவாசத்தில் நிச்சயமாக வளரக் கூடும். ஒரு பெரும் விசுவாசத்திற்கு எப்போதுமே இடமிருக்கிறது. ஆனால் முகாந்திரத்தின் அடிப்படையில் மற்றும் வசனத்தின் மூலம் தேவனிடமிருந்து வரும் வெளிப்பாட்டின் அடிப்படையில் இல்லாமல் இருந்தால், இது "முழு உறுதி" பெற்றதாக மாற முடியாது.

நாம் கண்டிப்பாகத் தேவனிடம் "கிட்டிச் சேர" வேண்டியதாக இருக்கிறது. முதலாவதாக, இந்த விசுவாச உறுதியானது நம்மை "பாசாங்கு செய்யாத" ஒரு "நேர்மையான இருதயம்" - ஆகியவற்றை உள்ளடக்கிய, ஒரு சரியான ஆவியுடன் அணுகச் செய்கிறது. தன்னுடைய இருதயம் சுத்தமாக இருந்தப்படியால் பவுல் ஒரு கலகக் கூட்டத்தார் முன் தைரியமாக நிற்க முடிந்தது (அப். 23:1) இரண்டாவதாக, தேவனிடம் கிட்டிச் சேர்வது விசுவாசிப்பதை உள்ளடக்கியிருக்கிறது. ஒரு நபர் விசுவாசமில்லாமல் தேவனைப் பிரியப்படுத்த முடியாது (எபி. 11:6). மூன்றாவதாக, "குற்றமில்லாமலிருப்பதை" இது அவசியப்படுத்துகிறது. இப்படி இருப்பது சாத்தியமானதாகும், ஏனெனில் நம்முடைய இருதயங்கள் இயேசுவின் தெளிக்கப்பட்ட இரத்தத்தினால் சுத்தம் செய்யப்பட்டிருக்கிறது (வசனம் 22). நான்காவதாக. இயேசுவில் நாம் கொண்டிருக்கிற விசுவாசத்தைத் தண்ணீர் ஞானஸ்நானத்தினால் வெளிப்படையாகச் செயல்முறைபடுத்தியிருத்தால், அதுவே "கழுவுதலை" குறிக்கிறது (அப். 22:16; 1 கொரி. 6:11; எபே. 5:26; தீத்து 3:5 பார்க்கவும்).

**கழுவப்பட்ட சரீரங்கள் (10:22)**

பழைய ஏற்பாட்டில், தண்ணீர் கழுவுதலானது சரீர சுத்திகரிப்பிற்குப் பயன்படுத்தப்பட்டது, புதிய ஏற்பாட்டில், இது ஆத்துமாவை அதனுடைய பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப் பயன்பட்டது (அப். 22:16; 1 பேதுரு 3:20, 21). கிட்டத்தட்ட அனைத்து இறைவல்லுநர்களும் இங்கே இந்த "கழுவுதலின்" பொருளை ஒத்துக் கொள்கிறார்கள். தண்ணீர் ஞானஸ்நானத்திற்குக் கீழ்ப்படியும் இந்தச் செயலில், ஒருவர் தன் சரீரத்தை ஒட்டு மொத்தமாகவும், முற்றிலுமாகவும் கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படிய அனுமதிக்கிறார். மற்றொரு மூழ்குதலுக்குத் தன்னை அனுமதிப்பது கிறிஸ்துவிற்கு முற்றிலும் கீழ்ப்படிதலுக்கான முழு விருப்பத்தைக் குறிக்கிறது. ஞானஸ்நானமானது அடையாளச் செயலை விட மேலானது: இது நாம் கிறிஸ்துவிடம் விசுவாசத்தினால் பிரவேசிப்பதைக் குறிக்கிறது (ரோமர் 6:3, 4). நாம் "கிறிஸ்துவிற்குள் ஞானஸ்நானம் பெற்றப்போது" (கடந்த கால வினைச் சொல் - நிறைவுப் பெற்ற செயல்) விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரர்களானோம் (கலா. 3:26, 27).

பழைய ஏற்பாட்டுச் சுத்திகரிப்பைப் போன்றதே புதிய ஏற்பாட்டு

ஞானஸ்நானமும் என்று நினைப்பவருக்கு பேதுரு அப்படியில்லை என்று குறிப்பிடுவதே பதிலாக இருக்கிறது (1 பேதுரு 3:21). நோவாவும் அவருடைய குடும்பத்தாரும் "தண்ணீரினால் இரட்சிக்கப்பட்டார்கள்" என்று பிரகடனம் செய்தார் (3:20; KJV), நம்முடைய மீட்பும் இதே வகையில் விலைக்கிரயம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஞானஸ்நானம் நோவாவும் அவருடைய குடும்பத்தினரும் பெற்ற தண்ணீரின் இரட்சிப்பைப் "போன்ற காட்சி" அல்லது "அடையாளம்" (ἀντίτυπος, *ஆண்டிடுப்போஸ்*) என்றழைக்கப்படுகிறது. NASB மொழிபெயர்ப்பு "தண்ணீர் மூலமாய்ப் பாதுக்காப்பாகக் கொண்டு வரப்பட்டனர்" என்று கூறி இந்தக் கருத்தை மென்மையாக்குகிறது (3:20) எப்படியாயினும், இதன் 21-ம் வசனத்தின் மொழியாக்கம்: "அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது." என்று கூறுகிறது. 1 பேதுரு 3:21ஐ குறித்து ஒருவர் எப்படி விசுவாசித்தாலும் "ஞானஸ்நானம் இரட்சிக்கிறதென்று" அது மேலும் கூறுகிறது. இது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் மூலம் நிறைவேறியது. இந்த "காட்சி" நோவாவின் இரட்சிப்பிற்கு "அடையாளமாக" இருக்கிறதேயல்லாமல் ஞானஸ்நான செயலில் இரட்சிப்பாகக் காட்டப்படவில்லை.

சிலர் "தண்ணீரை" புறக்கணித்தனர் என்று இங்குக் கூறப்பட்டிருப்பது, பரிசுத்த ஆவியானவரை புறக்கணித்ததாக வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறது. ஃபிரீட்-ஹார்ட்மேன் பல்கலைகழகத்தின் வேந்தராக இருந்தவரும் அவர் காலத்து பிரசித்திப் பெற்ற பிரசங்கியாருமான என். பி. ஹார்ட்மேன் அவர்கள் தேவன் கூறும்போது அதை என்னவென்று பொருள் கூறாதது கேலிக்கூத்தாக இருக்கிறது என்று கூறுகிறார். "நீங்கள் யோவான் 3:5ல் கூறப்பட்டிருக்கிற 'தண்ணீரை' 'தண்ணீரென்று' நீங்கள் பொருள்கொள்ளவில்லையா?" என்று கேட்கப்படும்போது ஹார்ட்மேன் அவர்கள் இவ்வாறு நகைச்சுவையாகப் பதிலளித்தார் "அது 'மோர்' என்று நினைக்கிறேன். ஒருவேளை கர்த்தர் கூறினப்போது இதைத் 'தண்ணீரென்று' கூறவில்லையென்றால் நான் அதை 'மோர்' என்று பொருள் கொள்கிறேன், எனக்கு 'மோர்' பிடிக்கும்."

**ஆவிக்குரிய அன்பை ஊக்குவித்தல் (10:24)**

வசனம் 10:24 ல் கூறப்பட்டுள்ள "அன்பு" ἀγάπη (*அகப்பே*) அன்பாகும். இது எபிரேயரில் 6:10 ல் மட்டுமே கூறப்பட்டுள்ளது.[87] நம்முடைய கூடுகையின் நோக்கமானது சகோதர அன்பை ஊக்குவிப்பதாக இருக்க வேண்டும் (1 பேதுரு 2:17). கொரிந்து சபையில் கசப்பு, சண்டை, பிரிவினை ஆகியவை படர்ந்திருந்தது, அங்கே "நடந்த

அன்பின் விருந்து" "வெறுப்பின் விருந்தாக" மாறிவிட்டப்படியால் அதைக் கைவிடும்படி பவுல் கூறினார் (1 கொரி. 11:17-22). கூடுகையை விட்டுவிடும்படி அவர் ஒருபோதும் அறிவுரைக் கூறாமல், சகோதரர்கள் தொடர்ந்து உண்மையாகக் கர்த்தருடைய பந்தியை அனுசரிக்கும்படி கூறினார் (1 கொரி. 11:23-32). இந்த அனுசரிப்பின் மதிப்பானது அன்பை தூண்டி எழுப்பவும் மறுபடியும் கட்டியெழுப்புவும் கூடும். ஒருவர் தன்னுடைய சொந்த கருத்துவேறுப்பாட்டையும், தான்தோன்றித்தனத்தையும் பற்றி வெட்கப்பட்டிருப்பதால், நம்முடைய இரட்சகர் தம்முடைய உண்மைத்தன்மையில் பிதாவிற்கும் நமக்கும் செய்தவற்றை ஒருவர் நெடு நேரம் சிந்திக்க முடியாது. எனவே கர்த்தருடைய நாளில் முறையாகக் கூடும் கூடுகைகளில் இந்த நிகழ்வு நம்மைக் கண்டிப்பாகச் சிலுவையிடம் தொடர்ந்து கிட்டிச்சேர்க்கும். கூடுகைகளானது நம்மை நற்கிரியைகளின் மீது தூண்டியெழுப்பும் தேவனுடைய முறையின் ஒரு பகுதியாக இருக்கிறது. நம்மில் சிலர் இது இல்லாமல் தேவனைத் தொடர்ந்து சேவிக்கும் உணர்ச்சிப்பூர்வமான விருப்பத்தைக் கொண்டிருப்பார்கள்.

நாம் நம்முடைய சக கிறிஸ்தவர்களைக் கடிந்துக் கொண்டும், குற்றம் கண்டுபிடித்துக்கொண்டும் அன்புக்கூர்ந்து அவர்களைத் திறமாக ஊக்கப்படுத்த முடியாது. மற்றவர்களை நம்முடைய நேர்மையில் நம்பிக்கை இழப்பை ஏற்படுத்தும் எதையும் சொல்லவோ அல்லது செய்யவோ கூடாது. மாறாக மற்றவர்களைத் தேவனிடத்திலும் நம்மிடத்திலும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் உற்சாகப்படுத்துகிற வார்த்தைகளை பேசுவோமாக. ஆராதனை கூடுகைளில் தவறாது கலந்துக்கொள்ளாமல் நாம் இவற்றைச் செய்ய முடியாது (10:25). எபிரேயரின் ஆசிரியர் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துதலை அலட்சியம் செய்வதின் தீமைகளைக் குறித்துத் தன்னுடைய வாசகருக்கு ஏற்கனவே கூறியிருந்தார் (3:13).

**கூடி ஆராதிக்கும் சமயங்களில் ஐக்கியம் (10:25)**

எருசலேமிலிருந்த முதல் சபையைப் போல (அப். 2:42), கிறிஸ்தவர்கள் ஐக்கியத்தின் ஒரு பகுதியாக இருக்கிறார்கள் என்று வசனம் 25ல் வாசிக்கிறோம். *கொய்னோனியா* (κοινωνία) என்ற வார்த்தையிலிருந்து ஐக்கியம் என்ற வார்த்தை மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இதன் பொருள் "பங்காளிகள்" அல்லது மற்றவர்களுடன் "பொதுவாகப் பங்கெடுப்பது" என்பதாகும். வசனம் 10:19 ல் எபிரெய நிருபத்தின் பெறுநர்கள் "சகோதரர்" என்று முகவரியிடப்பட்டனர். குடும்பத்தின் ஒரு பகுதியாக, ஒரே தகப்பனை உடையவர்களாக, ஒருவரையொருவர் சகோதரர்களாக மற்றும் சகோதரிகளாக நேசிப்பது எவ்வளவு அதியசமான எண்ணத்தைச் குறிக்கிறது. கடற்படை அதிகாரி நெல்சன் அவர்கள் அவருடைய

பிரிட்டனுக்கான போரின் வெற்றிக்கான திறவுக்கோலைப் பற்றிக் கேட்டப்போது, இவ்வாறு பதிலளித்தார். “நான் ஒரு சகோதர கூட்டத்திற்குக் கட்டளையிடும் பாக்கியத்தைப் பெற்றேன்.” அதே திறவுக்கோல் சபையின் வெற்றிக்கும் பொருந்துகிறதாக இருக்கிறது.

சகோதரராக இருப்பதற்குக் கிறிஸ்தவர்களுக்கு ஐக்கியம் அவசியமாகும். ஜெபம் மற்றும் எச்சரிக்கை செய்கிற கூடுகைகளின் மூலம் பெறும் உற்சாகம் நமக்கு அவசியம். நாம் ஆராதனையில் பங்குக் கொள்வதற்காக மட்டுமல்லாமல், மற்றவர்களுடைய விசுவாசத்திற்கு நாம் என்ன பங்களிப்புச் செய்ய வேண்டுமென்பதற்காகவும் ஐக்கியத்தில் பங்கு பெற விருப்பப்பட வேண்டும்.

“நமக்கு இயேசு அவசியம், ஆனால் சபை அவசியம் கிடையாது” என்ற நுட்பமான துர்உபதேசம் ஒன்று இருக்கிறது. எபிரெய நிருபம் எழுதப்பட்டுக் கொண்டிருக்கிற சமயத்திலும் கூட, “சபைக்குச் செல்வது மதிப்பு வாய்ந்தது அல்ல, இது அதிகப் பிரச்சனைகளை உருவாக்குகிறது என்று சிலர் போதித்தனர். ஏதோ ஒரு சோர்வு எப்போதும் நிகழ்கிறது, ஆகவே நாம் இயேசுவிலுள்ள மற்ற விசுவாசிகளுடன் ஆராதனைக்குப் போக வேண்டியது இல்லை” என்று சிலர் வெளிப்படையாகவே கூறினர்.

தேவன் சபையை ஒரு உண்மையான கூடுகையாக, *எக்கிலீசியா* ἐκκλησία - என்று வடிவமைத்திருக்கிறார், இப்படியாகத்தான் அந்த வார்த்தை மொழியாக்கம் செய்யப்பட வேண்டும். சர்ச் என்ற ஆங்கில வார்த்தையானது எக்கலீசியாவிலிருந்து வந்ததல்ல. இது கிர்ச்செ *kirche* என்ற ஜெர்மன் மற்றும் மத்திய ஆங்கில வார்த்தையிலிருந்து ஸ்காட்டிஸ் மொழி கிர்க் *kirk* கிற்கு வந்து சர்ச் என்ற வார்த்தையாக ஆங்கிலத்தில் வளர்ச்சியடைந்தது. எப்படியாயினும் “சர்ச்” என்ற பதமானது (*குரியகோசுடன்* κυριακός) இணைந்திருக்கிறது, இதன் பொருள் “கர்த்தரை சார்ந்தது” அல்லது “கர்த்தருடைய” என்பதாகும். குரியகோஸ் (கர்த்தருடைய) என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில், 1 கொரிந்தியர் 11:20 (“கர்த்தருடைய இராப்போஜனம்”) மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 1:10 (“கர்த்தருடைய நாள்”) ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. எக்லீசியா என்பது கர்த்தரை சார்ந்தது. (இயேசு இதை மத்தேயு 16:18 ல் “என் சபை” என்று அழைத்தார்) சபையின் ஐக்கியத்தையும், உண்மையான கர்த்தருடைய சபையாக இருப்பதற்கும் முறையான ஆராதனை கூடுகைகளைப் பராமரிப்பது அவசியம்.

சுத்திகரிக்கப்பட்ட அவருடைய சரீரத்தில் உறுப்பினர்களாகிய, பரிசுத்தவான்களாகிய, அவருடைய தெரிவு செய்யப்பட்ட மக்களோடு ஜீவனுள்ள ஒரு ஐக்கியத்தை ஐக்கியம் கொள்ளாமல் இயேசுவுக்கு விசுவாசமாக இருக்க முடியாது (எபே. 5:25-27).

### சிலர் சபை ஆராதனையை ஏன் அசட்டை செய்கின்றனர்? (10:25)

முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர் ஆராதனையை ஏன் அலட்சியம் செய்யத் தொடங்கினார்களென்று கூறப்படவில்லை. அவர்களுடைய காரணமானது அநேகமாக இருபதாம் நூற்றாண்டில் ஆராதனைக்குக் கருத்துவேறுபாடு கொள்வதற்கான காரணத்தைப் போன்றதாக இருக்கலாம். சிலர் கிறிஸ்துவினுடைய சபையைக் குறித்து வெட்கப்படுகிறப்படியால் தங்களைக் கிறிஸ்தவர்களாக அங்கீகரித்துக் கொள்ள விரும்புவதில்லை. சிலர் கிறிஸ்துவினுடைய சபையிலுள்ள விசுவாசிகளுக்கு அளிக்கப்பட்ட நித்திய வாக்குத்தத்தங்களை விட உலகத்திற்கும் அதனுடைய தற்காலிகமான சிற்றின்பத்திற்கு முன்னுரிமை அளிக்க விரும்புகின்றனர். முறையாகக் கூடுகிற மற்ற சகோதர சகோதரரிகளை விடத் தாங்கள் போதுமான விசுவாசமுள்ளவர்களாக இருக்க முடியுமென மற்றவர்கள் எண்ணுகின்றனர். இது ஒரு துக்ககரமான தவறாகும், 10:25-ல் கூறப்பட்டுள்ள எச்சரிக்கைப் போன்று இது 10:26-ல் கூறப்பட்டுள்ள விசுவாசத் துரோகத்திற்கு வழிநடத்தும். அந்தச் சகோதரர்கள் மேற்கொள்கிற அபாயத்தை அவர்கள் பார்க்கும்படி அவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டும். "நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மைபாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாக" என்பதே எபிரேயரின் நிலையான வலியுறுத்தலாக இருக்கிறது (3:6). வசனம் 10:23-ம் "அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்" என்ற இதே சிந்தையே கூறப்பட்டிருக்கிறது. இதன் ஆசிரியர் தன்னுடைய அறிமுக எச்சரிக்கையில் "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல்" (10:25) என்று கூறினார். இந்த உற்சாகப்படுத்துதலானது அசைவில்லாமல் உண்மையாக நீடிக்கும்படி, கிறிஸ்துவினுடைய உண்மையின் வெளிச்சத்தில் வந்தது (10:23 ன்). அவர் தன்னுடைய பிதாவிற்கு உண்மையாக இருந்தார். நாமும் கண்டிப்பாக அப்படியிருக்க வேண்டாமா?

### சபை/இராஜ்ஜியத்தின் முழுநிறைவான தன்மை (10:25)

சபை என்பது தேவனுடைய மற்றும் கிறிஸ்துவின் இராஜ்ஜியம் (எபே. 3:5). நாம் கிறிஸ்துவினுடையவர்களானால், நாம் அவருடைய இராஜ்ஜியத்திற்குக் கீழானவர்கள். நாம் உலகத்தின் வழிகளை விட்டுவிடுவோமேயானால், (*எக்லீசியா*) சபையாகிய தேவனுடைய சங்கத்தில் நாம் ஒரு அங்கமாக இருப்போம். இராஜ்ஜியம் எப்படிப்பட்டதாக இருக்கிறது - அல்லது அது எதைப் போன்று உள்ளது? ஜோனத்தான் கோசோல் *அற்புதமான கிருபை* என்னும்

தனது புத்தகத்தில் நியூயார்க் நகரின் சவுத் ப்ராக்ஸ் பகுதியில் வசிக்கும் வறுமையில் வாடுபவனும் குற்றங்களால் நடத்தப்படுகிறவனுமான பன்னிரண்டு வயது சிறுவனைக் குறித்துச் சொல்கிறார். தெருச் சண்டைகள் கொலைகள் மற்றும் எல்லாவிதக் குற்றங்களையும் அவர் அறிவார். அதேவேளையில், நல்ல ஸ்தல சபையின் இரக்கங்களையும் அவன் அனுபவிக்கும் சூழலிலும் வாழ்ந்துள்ளான். அவனுடைய பெயர் அன்டோனி, தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்து அவன் அதிகம் பேசுவான். தேவனுடைய இராஜ்ஜியம் என்பதன் பொருளை எழுதும்படிக்கு கோசோல் கேட்டுக்கொண்டார். முதலில் அவன் நிராகரித்தான், ஆனால் மூன்று நாட்கள் கழித்துத் தனது குறிப்பேட்டில் மூன்று பக்கங்கள் கொண்ட குறிப்பைக் கொடுத்துள்ளான். அதன் ஒரு பகுதி இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

> பரலோகத்தில் சண்டைகள் இருப்பதில்லை. அங்கே துப்பாக்கிகளும் மற்றும் போதைப் பொருட்களும் இல்லை … நீங்கள் வரிகள் கட்டத் தேவையில்லை. சிறுவர்களாக மரித்த அனைவரையும் அங்கே நீங்கள் அடையாளம் காணமுடியும். இயேசு அவர்களுக்கு நல்லவராக இருந்து, அவர்களுடன் விளையாடுபவராகவும் இருக்கிறார். இரவில் அவர் உங்கள் வீட்டிற்கு வருகிறவராக இருக்கிறார்.[88]

இது ஒரு அழகான விளக்கம், இப்பவும் சபையானது இதை வழங்க வேண்டியதாயிருக்கிறது. இது உண்மையில் பரலோகத்தின் முகப்புமண்டபமாக இருக்கும்பட்சத்தில் இது சமாதானத்தை வழங்குகிறதாக இருக்கிறது. பூமியிலிருக்கும்போது தேவனுடைய இராஜ்ஜியத்தில் பரலோகத்தின் ஆறுதலின் பகுதியை நாம் அனுபவிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

தேவனுடைய வீடாக (குடும்பம்) இருப்பதற்கு, தண்ணீர் ஞானஸ்நானத்தின் வாசல் வழியே உள்ளே நுழையும், தனிப்பட்ட விதத்தில் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தவர்களாக ஒவ்வொருவரும் இருக்க வேண்டும் (வசனம் 22; கலா. 3:26, 27 காண்க). இரட்சிப்பிற்கான நிபந்தனைகளை நிறைவேற்றாத வரை தேவனுடைய குடும்பத்தின் அங்கமாக இருந்து தேவனை நெருங்க முடியாது. இதே விதமாகத் தேவனுடைய குடும்பத்தில் நுழையாமலிருப்போமானால், அந்த ஐக்கியத்தை எவ்வாறு அழைக்க முடியும்? கிறிஸ்துவின் சரீரத்தில் ஐக்கியப்படுத்திக் கொள்வதற்கு ஞானஸ்நானம் என்பது உண்மையான வழியாயிருக்கிறது (1 கொரி. 12:13).[89] அந்தச் சரீரத்தில் மட்டுமே, "விசுவாசத்தின் முழு நிச்சயத்தை" நாம் கொள்ள முடியும் (10:22). நம்முடைய நம்பிக்கையை எந்தவித சந்தேகத்திற்கும் இடமின்றித் தொடர்ந்து உறுதியாக அறிக்கை செய்கிறவர்களாக நாம் இருக்க வேண்டும் (10:23). நம்பிக்கையுடன் நாம் இரட்சிக்கப்பட்டுள்ளோம் (ரோமர் 8:23-25) "நித்திய ஜீவனின் நம்பிக்கையில்" நிலைத்திருத்தல்

(தீத்து 1:2). நம்முடைய விசுவாசம் நம்பிக்கையை அடித்தளமாகக் கொண்டுள்ளது.

கூடுகையில் அன்பினாலும் நற்கிரியையினாலும் ஒருவரையொருவர் உந்தப்படுகின்றனர் (10:24), வேறுவழியில் நாம் செய்வது சாத்தியமல்ல. அன்பிலும் சேவையிலும் மேலும் சிறந்து விளங்க, முகமுகமாக ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துவதை மின்னஞ்சல் மற்றும் தொலைபேசிகளால் மாற்ற முடியாது.

**நாளானது சமீபித்து வருகிறது (10:25)**

வசனம் 25-ல் குறிப்பிட்டுள்ள நெருங்கும் நாள் என்பது திரும்பிவருதல் அல்லது நியாயத்தீர்ப்பின் கர்த்தருடைய நாள் நெருங்குகிறது என்று சிலர் கருதுகின்றனர். கர்த்தருடைய வருகையின் நேரத்தை நாம் அறியோம். அது இந்த யுகத்தில் இருக்கலாம் அல்லது விரைவில் இருக்கலாம்.

1988-ம் ஆண்டுக்கு சிறிது காலத்திற்கு முன், *1988-ல் எடுத்துக்கொள்ளப்படுதல் நிகழ்வதற்கான என்பத்தெட்டுக் காரணங்கள் என்னப்படும்* ஒரு புத்தகம் வெளியிடப்பட்டது. நீங்கள் அதைப் படித்து, விசுவாசித்தும் அது நிகழவில்லையென்றால் அதன் விளைவு என்னவாக இருக்கும்? இந்தப் புத்தகத்தை எழுதிய வேதாகம முனைவரை தொடர்ந்து சந்தேகப்படுவீர்களா அல்லது நம்முடைய காலத்தின் முடிவை சுட்டிக்காட்டும் அடையாளங்களின் வசனங்களை அறிந்து பிரசங்கிக்கிற எல்லாப் பிரசங்கிமார்களையும் சந்தேகிப்பீர்களா? இம்மாதிரியான பிரசங்கியார்களுக்கு மீண்டும் செவிகொடுப்பீர்களா? தவறுகள் தவறான கற்பனை விளக்கங்களை கொடுக்க உதவுமே தவிர வேறுஒன்றுக்கும் உதவாது.

மற்றவர்கள் முன்னறிவித்ததுபோல், கர்த்தர் 1988-லோ அல்லது 2000-லோ வரவில்லை. முடிவு எப்போது சம்பவிக்கும் என்பது குறித்த வேதாகம கூற்றுக்களின் விளக்கங்கள் தவறாக இருக்கின்றன. அநேக முன்னறிவிப்புகள் தவறாகியுள்ளன, இம்மாதிரியான பிரசங்கங்கள் விசுவாசத்தை அற்றுப்போகப்பண்ணுகின்றன. இம்மாதிரியான அறிவிப்புகள் சொல்வது, "நன்மை வரும்படிக்குத் தீமைசெய்வோமாக என்றும் சொல்லலாமல்லவா?" (ரோமர் 3:8) என்பது போன்று இருக்கிறது.[90]

ஒவ்வொரு சந்ததியிலும் போதனைகள் மூதாதையர்களின் போதனைகளைவிட மோசமாக உள்ளது, நாம் இப்போது கடைசி நாட்களில் உள்ளோம், 2 தீமோத்தேயு 3:1-5-ன் நிறைவேறுதல் என்பது 10:25-ன் தவறான விளக்கமாகக் காணப்படுகிறது. இந்தப் பார்வை வேதாகமத்தில் எந்த பகுதியிலும் போதிக்கப்படவில்லை. காலங்கள் அல்லது தொடரும் காலம் என்பதைப் பவுல் குறிப்பிடும்போது அது சில நிபந்தனைககளுக்கு உட்பட்டது. 2 தீமோத்தேயு 3-ல்

குறிப்பிடப்பட்டுள்ள தனிநபர்கள் ஏற்கனவே எழுந்துள்ளனர், “இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு.” என்று தீமோத்தேயுவை எச்சரித்துப் பவுல் எழுதினார் (3:5). இருபத்தோராம் நூற்றாண்டு வரை வராதவர்களை அவர் எப்படித் தவிர்க்க முடியும்? கருத்தில் கொள்ளும் காலங்கள் கிறிஸ்து மீண்டும் வருவதற்கு முந்தைய சில நாட்கள் அல்ல, ஆனால் ஒவ்வொரு சந்ததியிலும் நம்மைச் சுற்றியுள்ள தீயவர்கள். அவர்கள் எப்போது இல்லை? சிலர் மோசத்திலிருந்து மிக மோசமாக மாறுவார்கள், நாம் அடிக்கடி காண்பது “அநேகருடைய அன்பு தணிந்துபோம்” (மத். 24:12). மாறாக, நாம் கவனமுள்ளவர்களாக இருக்க வேண்டும் காரணம், வசனத்தைத் தவறாக விளக்குவது அபாயகரமானது.

10:25-ல் கூறப்பட்டுள்ள நாள் குறித்து நாம் கணித்தவரை, கி.பி. 70-ல் எருசலேமின் வீழ்ச்சிக்கான நேரமாக இருக்க வேண்டும். அந்தச் சம்பவத்திற்கான நேரம் நெருங்கிவிட்டதைக் குறிக்கும் அடையாளங்களை இயேசு கொடுத்திருக்கிறார் (மத். 24; மாற்கு 13; லூக். 21). நெருங்கிக்கொண்டிருக்கிற இந்த நாள் எப்படிப்பட்டதாக இருக்கிறது? (1) அந்த நாள் நெருங்குவதை எல்லாரும் காணாமலிருப்பதற்கு, ஒருவரின் மரணத்தின் நாளாக அது இருக்க முடியாது, (2) அது எப்போது வரும் என்பதை ஒருவரும் அறியாமல் இருப்பதற்கு, அது ஒரு நியாயத்தீர்ப்பின் நாளாக இருக்க முடியாது, (3) இந்த நாள் நெருங்குவதற்கு முன் ஒவ்வொரு வாரத்தின் முதலாம் நாளில் சபைகள் கூடுவதனால், இது ஒரு கர்த்தரின் நாளாக இருக்க முடியாது. (4) இந்த நாள் பெரும்பான்மையாக எருசலேம் ரோமானிய இராணுவங்களால் சூழப்பட்டு அழிக்கப்பட்டதைக் குறிக்கிறதாக இருக்கிறது. இயேசுவின் முன் எச்சரிப்பும் மற்றும் அடையாளங்கள் உடன் கிறிஸ்தவர்கள் அந்த நாள் நெருங்குவதைக் காணமுடிந்ததாக இருக்கிறது. பாபிலோனால் யூதாவின் அழிவுக் குறித்த ஆபகூக் 2:3, 4-ஐ எபிரெயரின் ஆசிரியர் மேற்கோள் காட்டுகிறார். ரோமாபுரியினால் எருசலேம் தூக்கியெறியப்படும் என்பதை இந்த வார்த்தைகளைக் கொண்டு அவர் சொல்கிறார்.

**நம்முடைய தேவன், பழிவாங்கும் தேவன் (10:26-31)**

மறுதலிப்பின் பயங்கர விளைவு என்பது 10:26-31-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. சபையின் ஆராதனையில் உண்மையுடன் இருப்பதிலிருந்து தவறும்போது உடனடியாகத் தண்டனை இருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையாயிருப்பதிலிருந்து ஒருவர் விலகும்போதும் மற்றும் கிறிஸ்தவச் சபையை நிராகரிக்கும்போது, அவரைப் பாவத்தின் சுழலில் இழுத்துக்கொள்ளப்படலாம். அந்த நபர் மீதான தண்டனையானது, பழைய உடன்படிக்கையின் கீழ் ஒருபோதும் ஒருவனும் சந்தித்திராத மற்றும் “ஒரு அதித் தீவிரமான

தண்டனை” என்று வர்ணிக்கப்படும் வார்த்தைகளைக்காட்டிலும் மிக மோசமான தண்டனையாக அது இருக்கும் (10:29). அது பூமியினால் விழுங்கப்பட்டதைவிட மோசமானது, கோரா மற்றும் அவனுடைய குடும்பத்தாரும் ஜனங்களின் தலைமைக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள் (எண். 16:1-35). உசியா தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை தொட்டபோது தேவனால் அடிக்கப்பட்டு இறந்ததைவிட மோசமானதாகவும் அந்தத் தண்டனை இருக்கும் (2 சாமு. 6:1-7). சோதோம் கொமோராவின் அழிவு மற்றும் லோத் மனைவியின் மரணத்தையும்விட மோசமானதாக அந்தத் தண்டனை இருக்கும் (ஆதி. 19).

ஆசிரியர் சொன்னதில் எந்த ஆச்சரியமும் இல்லை, “ஜீவனுள்ள தேவனுடைய கைகளிலே விழுகிறது பயங்கரமாயிருக்குமே” (10:31), “நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே” (12:29). அவர் விளக்கியுள்ள முறைமையின்படி அவர் உண்மையிலே பழிவாங்குவார் (2 தெச. 1:8-10). இவ்வளவு போதனைகளையும் கேட்ட பிறகு ஒருவன் விசுவாசத்தை விட்டு விலகுவானேயானால், அவன் தேவனுடைய பார்வையில் இழிவானவனாகக் கருதப்படுவான் மற்றும் மேலே சொல்லப்பட்ட எல்லாவித தண்டனைகளும் அவன் மேல் வரும்.

மலை மேல் ஏறுகிற ஒருவன் மலை உச்சியை அடைவதாக வைத்துக்கொள்வோம். மலை உச்சியின் கடைசிப் பாறை தெரிகிறது, தனக்கு முன் ஏற்கனவே மலை உச்சி சென்றவனால் அந்தக் கடைசியாக உச்சிக்கு மேலே இழுக்கப்படுவான். உடனே அந்த மலை ஏறுபவர் என்னால் தொடர்ந்து மலை ஏற முடியாது கயிறு வழியே கீழே இறங்கிவிடுவோம் என்று சொல்லுவார். இதுவே மறுதலிக்கும் கிறிஸ்தவனின் அபாயகரமான நிலை! ஏபிரெயரின் எழுத்தாளர் அவர்களை இவ்வாறாக அழைக்கிறார், “இப்போது போகட்டும் என்று விட்டுவிட்டால், உன்னை இரட்சிப்பதற்கு ஒன்றுமில்லை.”[92]

நித்திய இரட்சிப்பின் உறுதியில் அப்போஸ்தல நிலை விட்டுவிட்டால், நித்தயமாக அதை இழக்க நேரிடும். இதில் விடாப்பிடியாய் இருந்தால் இரட்சிப்பின் வாய்ப்பை இழக்க நேரிடும் மற்றும் வேறு வாய்ப்பு இருக்கப்போவதில்லை.

### ஒரு பயங்கரமான எதிர்பார்ப்பு (10:27)

நியாயத்தீர்ப்பு நாள் குறித்துப் பவுல் அதிகம் அறிந்திருந்தான். அதனுடைய பயங்கரமான விளைவுகள் காரணமாக மனிதருக்கு புத்திசொல்லுவதை அவன் தெரிந்தெடுத்தான் (2 கொரி. 5:10, 11). கேள்விக்கிடமின்றி, நியாயத்தீர்ப்பு மற்றும் நரகத்தின் பயங்கரங்களைக் பயன்படுத்தி ஜனங்கள் தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்புவது மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்தினான். இவ்வாறாக அவன் பெலிக்ஸிடம் கூறினான் (அப். 24:25), அது

தேசாதிபதியை பயப்படுத்துகிறதாயிருக்கிறது. அக்கிரமகாரருக்கு நித்திய தண்டனையின் எச்சரிப்பைக் கொடுக்க வேண்டியதாயிருந்தது.

இந்தப் பாவத்திற்கான நியாயத்தீர்ப்பைப் பெறுவது என்பது நித்திய பாவத்திற்கான தண்டனையைப் பெறுவதற்குச் சமம், அதற்குப் பாவமன்னிப்பே இல்லை (மாற்கு 3:28, 29). அந்த நபர் இறுமாப்பானவர் மற்றும் மனந்திரும்ப முடியாதவர் ஆகையால் அது நித்தியமானதாயிருக்கிறது. நரகமே தீர்ப்பு என்று இருக்கும்போது, அவன் வேறு எங்கும் செல்ல முடியும். அவன் விசுவாச வலிமையை இழந்துவிட்டான், மற்றும் அவனுடைய மனசாட்சியும் கடினப்பட்டுள்ளபடியால் மாற்றம் ஏற்படுவது கூடாததாக உள்ளது.

### ஜீவனுள்ள தேவனுடைய கரத்தில் விழுதல் (10:31)

ஒரே மெய்யான் ஜீவனுள்ள தேவனுக்குத் தன் வாசகர்கள் கீழ்ப்படியும்படிக்கு துணிவோடு நிருபத்தின் ஆசிரியர் எழுதியுள்ளார். இந்த நாட்களில் நரகம் குறித்த பிரசங்கங்கள் பிரசித்தமானவை அல்ல. ஜனங்கள் நரகத்திலிருந்து விலகியிருக்கும்படிக்கு பயமுறுத்துவது குழந்தைத்தனமானது என்று பிரசங்கியார் நினைத்திருக்கலாம். அநேகர் அதன் அனுபவத்தைச் சந்தேகித்தனர். இருப்பினும், பயமுறுத்துதல் மூலம் ஜனங்களைப் பரலோகம் கொண்டு செல்லுதல் என்று சொன்னால், நரகத்திற்குச் செல்வதிலிருந்து அவர்களை விலக்குவதில் தோற்றுவிடுவோம். ஜனங்களுடைய வாழ்க்கையின் விபரீதமும் - அதன் விழிப்புணர்வு இல்லாமையும் - நித்திய தண்டனைக் குறித்துப் பிரசங்கிப்பது அவசியமாகிறது.

புதிய ஏற்பாட்டில் ஆக்கினையின் இடத்தைக் குறிக்கும் வண்ணம் பல பயங்கரமான பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இயேசு பல முறை பயன்படுத்தியுள்ளார் (மத். 5:22; 10:28; மாற்கு 9:47, 48). கிறிஸ்துவைப் பிரசங்கிப்பது என்பது முழு செய்தியையும் பிரசங்கிக்க வேண்டும். ஈர்க்கக் கூடிய காரியங்களை மட்டும் சுருங்கப் பிரசங்கிக்கக் கூடாது.

### பாடுபடும் பரிசுத்தவான்களுடன் (10:32-34)

பாடுகள், அவதூறுகள், மற்றும் சக பரிசுத்தவான்களின் சிறையிருப்பு ஆகியவைகளைப் பகிர்ந்து கொள்வது மூலம், எபிரெய கிறிஸ்தவர்கள் தங்கள் பகுதி சபையோடு தங்களை அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள். இயேசுவை கர்த்தராக ஆராதித்ததற்காக இவர்கள் பாடுபடவில்லை, ஆனால் இவர்களுடைய சக கிறிஸ்தவர்கள் பாடுபட்டனர், இவர்கள் அவர்களுக்கு உதவும்படிக்கு சென்றனர், அவர்கள் தங்கள் பாடுகளை இவர்களிடம் பகிர்ந்துகொண்டனர், அதன் காரணமாக இவர்கள் தங்களை அவர்களுடன் அடையாளப்படுத்திக்கொண்டனர். பவுல் புதிய

யுகத்திற்குள் நடத்தியதும் மற்றும் சபையோடு அடையாளப்படுத்தியது தவிர வேறு எதுவும் நமக்குச் சொல்லப்படவில்லை (அப். 9:26-28), ஆனால் அநேகர் செய்திருக்கலாம் என்று நாங்கள் கருதுகிறோம். சபைக்குப் போகாமல் வீட்டில் இருப்பது மூலம் கஷ்டப்படுவதைத் தவிர்த்த சில கிறிஸ்தவர்கள், தாமாக மற்ற கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து பாடுபடும்போது சபை ஐக்கியத்தின் அருமையைப் புரிந்துகொண்டனர். ஸ்தல சபையில் அங்கமாயிருப்பவர் மட்டுமே இதை அனுபவிக்க முடியும்.

**இழப்பை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளுதல் (10:34)**

நெருப்பு, வெள்ளம், கொள்ளையடித்தது மூலம் உடமைகளை இழப்பதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சிலர் அந்த இழப்பின் துக்கத்திலிருந்து விடுபடுவதில்லை, ஆனால் கிறிஸ்தவர்கள் அப்படி அல்ல, அவர்களால் சமாளித்துவிட முடியும். ஏன்? காரணம், அவர்கள் தொடர்ந்து மேலானவைகளுக்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறவர்கள், இதைவிட மேலான வீடு வரும் என்று எதிர்பார்த்தவர்களாக இருக்கிறார்கள் (2 கொரி. 5:1), மற்றும் இந்த உலகம் அவர்களுடைய உண்மையான குடியிருப்பு அல்ல (பிலி. 3:20). இப்பூமியின் பொருட்களைவிட ஆவிக்குரியதும், நித்தியத்திற்குரியதும் விலையேறப்பெற்றது என்று ஒருவன் கருதுவானேயானால், அவன் பெரும்பாலும் போராட்டதை வென்றுவிடுவான் (2 கொரி. 4:16-18). இந்த ஆதி பரிசுத்தவான்கள் செய்தது போல், இழந்துபோன எல்லாவற்றையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வோம். நாம் எவ்வளவாய் பரிதபிக்கப்பட்டவர்கள், நாம் எல்லாவற்றையும் இழந்துவிட்டோமே என்று அவர்கள் தினந்தோறும் அழவில்லை! தங்களுக்குப் பொக்கிஷம் பரலோகத்தில் இருக்கிறது என்று அவர்கள் அறிவார்கள் (மத். 6:19, 20). அவர்கள் சொல்லியிருக்கக் கூடும், "எங்களிடம் இருக்கும் பொக்கிஷங்களை இந்த உலகத்தால் எடுத்துக்கொள்ள முடியாது."

குடும்பப் பிரச்சனைகள், பொருளாதார வீழ்ச்சி, சபையில் பிரச்சனைகள் மேலெழும்பும் போது, எல்லாவற்றையும் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிற நம் தேவனை நோக்கி முறையிடுகிறோம். "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 8:28). எபிரெய கிறிஸ்தவர்கள் மகா உபத்திரவத்திற்குள்ளே கடந்து சென்றனர் (10:32). அவர்கள் செய்ததை நாம் நினைவுகூரும் போது, எல்லாச் சூழ்நிலைகளிலும் உண்மையுள்ளவர்களாக நாம் இருப்பதற்கு உதவியாயிருக்கும். நாம் இந்தப் பூமியில் எதையாவது மகிழ்ச்சியோடு இழப்பை சந்திக்கும்போது, பரலோகமே நமக்காகக்

காத்திருக்கும்.

**சுவிசேஷகரின் பணி (10:32, 33)**

தேவனாகிய கர்த்தர் பவுலிடம் ஏற்கனவே அறிவித்திருந்தது அவருடைய பணியானது, "அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்" (அப். 26:18). ஜனங்களுடைய பாவங்கள் தண்டனைக்கு ஏதுவானது என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ள வைப்பது, அவர்களைக் கிறிஸ்துவிடம் கொண்டுவருவதற்குத் திறவுகோலாக அமையும். அவர்கள் இருளில் இருக்கிறார்கள், சத்தியத்தின் மூலம் அவர்களைப் பின்தொடரும்பொழுது இழிவான வாழ்விலிருந்து தாழ்மையோடு இரட்சகரிடம் ஒப்புக்கொடுக்க அது ஏதுவாக இருக்கும். வெளிச்சத்தைப் பெறும்படிக்கு பவுல் பிரசங்கித்த விதத்தின் மூலம் அவர்களுடைய கண்கள் திறக்கப்பட வேண்டும். ஜனங்களுக்காக ஆவி செயல்படும் என்று வசனத்தில் சிறுகுறிப்பு கூட இல்லை. அவர்கள் சாத்தானால் முழுவதுமாக ஏமாற்றப்பட்டுள்ளனர் தாங்கள் குருடர்கள் என்று அறிய முடியாத நிலையிலிருக்கிறார்கள், அவர்களுடைய மனது இருளில் இருக்கிறபடியால், அவர்களால் தெளிவாகச் சிந்திக்க முடியாது.

இரண்டு காரியங்களைச் செய்வது மூலம் உலகத்தின் கண்களை நம்மால் திறக்க முடியும்: (1) இயேசுவின் சுவிசேஷத்தை சாதாரணமாகப் பிரசங்கிப்பது மற்றும் (2) அதன்படி வாழ்வது. திருமணம் போன்ற சமூகச் சட்டங்களை நடப்பிற்குக் கொண்டுவந்து கட்டாயப்படுத்தும் முறைகள், இப்பணியைச் செய்ய உதவாது. கிறிஸ்துவின் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தும்படிக்கு, நாம் ஒருபோதும் உலகச் சட்டங்களை எதிர்பார்க்கக் கூடாது. பவுல் போன்று நாம் இயேசுவைக் குறித்துப் பிரசங்கிக்கிறவர்களாக இருக்க வேண்டும், ஜனங்கள் தங்களுக்கான தேவனுடைய சித்தத்தை அறிந்து இருளிலிருந்து வெளிச்சத்திற்குத் திரும்புவார்கள்.

---

இறுதிக் குறிப்புகள்

[1]Neil R. Lightfoot, *Jesus Christ Today: A Commentary on the Book of Hebrews* (Grand Rapids, Mich.: Baker Book House, 1976), 183. ஆராதனைக்கான ஆவிக்குரிய பலிகள் 13:15, 16-ல் குறிப்பிடப்பட்டுள்ளன. [2]NIV மொழிப்பெயர்ப்பில் "for" என்ற வார்த்தை விடுபட்டுள்ளது. [3]Neil R. Lightfoot, *Everyone's Guide to Hebrews* (Grand Rapids, Mich.:

Baker Books, 2002), 128. [4]Philip Edgcumbe Hughes, *A Commentary on the Epistle to the Hebrews* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 389. [5]Jimmy Allen, *Survey of Hebrews*, 2d ed. (Searcy, Ark.: by the author, 1984), 107. [6]Kenneth Samuel Wuest, *Hebrews in the Greek New Testament for the English Reader* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1951), 172. [7]Jim Girdwood and Peter Verkruyse, *Hebrews*, The College Press NIV Commentary (Joplin, Mo.: College Press Publishing Co., 1997), 309. [8]Donald Guthrie, *The Letter to the Hebrews: An Introduction and Commentary*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1983), 201. [9]இந்த ஆராதனைக்காரர்கள் (10:2) ஜனங்களா அல்லது ஆசாரியர்களா என்ற கேள்வி எழுகிறது. எபிரெயரை முதன்மையாகப் பெறுபவர்கள் ஆசாரியர்களாக இருந்தால், அவர்களுடைய பணி மற்றும் சேவையின் பலவீனங்களை அறிந்துகொள்ள இது அவர்களுக்கு உதவியாயிருக்கும். [10]Thomas G. Long, *Hebrews*, Interpretation (Louisville: John Knox Press, 1997), 101.

[11]Lightfoot, *Jesus Christ Today*, 184. [12]Hughes, 393. [13]H. L. Ellison, *The Centrality of the Messianic Idea for the Old Testament* (London: Theological Students Fellowship, 1953), 19. [14]Long, 103. [15]Girdwood and Verkruyse, 310. [16]Lightfoot, *Jesus Christ Today*, 185. சங்கீதக்காரன் தேவனோடு பேசும்படிக்குச் சங்கீதத்தில் காணப்படுவதால், வாக்கியத்தின் பயன்பாடு என்பதை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதாக இருக்கிறது. [17]Girdwood and Verkruyse, 311. [18]F. F. Bruce, *The Epistle to the Hebrews*, The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 232. [19]Robert Milligan, *A Commentary on the Epistle to the Hebrews*, New Testament Commentaries (Cincinnati: Chase and Hall, 1876; reprint, Nashville: Gospel Advocate Co., 1975), 344-45. [20]சங்கீதம் 40:6-ல் செப்திவஜந்தில் *எய்டிசாஸ்* (ᾔτησας)-ஐ ("நீங்கள் கேட்டது") இருந்து எபிரெயர் 10:6-ன் *யுடொகேசஸ்* (εὐδόκησας)-க்கு ("நீங்கள் மகிழ்ச்சி எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை") ஆசிரியர் மாற்றினார், அது தேவனுடைய சித்தத்தை அல்லது நோக்கத்தைக் காண்பிக்கிறது. (Gerald F. Hawthorne, "Hebrews," in *The New International Bible Commentary*, ed. F. F. Bruce, H. L. Ellison, and G. C. D. Howley [Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1986], 1524.)

[21]தேவன் பலியிடுதலை கட்டளையிடவில்லை என்பது இதற்கு அர்த்தமல்ல. [22]Gareth L. Reese, *A Critical and Exegetical Commentary on the Epistle to the Hebrews* (Moberly, Mo.: Scripture Exposition Books, 1992), 170. [23]Lightfoot, *Jesus Christ Today*, 185., n. 3. [24]Guthrie, 205. [25]Ibid. உதாரணமாக, குழந்தை இயேசுவை கொல்லும்படிக்கு ஏரோது இராஜாவினால் அனய்ரியோ பயன்படுத்தப்பட்டு முயற்சிக்கப்பட்டது (மத். 2:16). நுப்யாயப்படுத்தும்படிக்கு அழிவு என்னும் ஒரு பலமான வார்த்தை கூடச் சரியாக இருந்திருக்கும். (Girdwood and Verkruyse, 312.) [26]Reese, 171. [27]இந்த கிரேக்க வார்த்தை 7:27 மற்றும் 9:12 -ம் காணப்படுகிறது. [28]துவக்க விசுவாசம் மற்றும் ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து பரிசுத்தமாக்கப்படுதல் நிகழ வேண்டும் என்பது இதன் அர்த்தம். அந்தத் தருணத்தில் அவர் "இரட்சிக்கப்படுகிறார்" - எல்லா காலத்திற்கும் அல்ல, ஆனால் அவருடைய பாவங்களிலிருந்து இந்தப் புள்ளி வரைக்கும் ஆகும் (மாற்கு 16:15, 16). [29]எபிரெயர் 10:14-ல் அதேபோன்று முன்னேற்ற பரிசுத்தமாகுதலை சுட்டிக்காட்டுகிறது. NIV "பரிசுத்தமாக்கப்படுதலைக்" கொண்டிருக்கிறது. [30]வருடாந்திரமாக பலி செலுத்தும் பிரதான ஆசாரியனின் செயலுக்கு எதிர்மறையாக, எஃபாபக்ஸ் என்பது எல்லா காலத்துக்குமான ஒருமுறை கிறிஸ்துவின் செயல்-ஐ இது முக்கியத்துவப்படுத்துகிறது. எபிரெய கிறிஸ்தவர்களின் அறிவாற்றலால் எதிர்மறை கேள்விக்குள்ளானது. (மோசஸ் ஸ்டார்ட், எ கமென்டரி ஆன் த எபிஸ்டல் டு த ஹீப்ரூஸ் [லண்டன்: வில்லியம் டெக் அன்டு கோ., 1856], 459-60.)

[31]Reese, 167, என். 1. [32]Bruce, 239. [33]Lightfoot, *Jesus Christ Today*, 187. [34]இது ஒரு தொடர் நிகழ்கால செயல், ஆகவே இது ஒரு தொடர் செயல். இந்த வசனத்தில் "பூரணமாக்கப்பட்டிருந்தவர்கள்" மற்றும் "பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்" இரு வேறு அணிகளாக இருந்தன. முதலாவது, வெளிப்பாடு "பரிபூரணம்" தொடர் "விளைவுகளைக் கொண்ட கடந்த நிறைவுற்ற செயல்" என்பதை சுட்டிக்காட்டுகிறது, இரண்டாவது, "நிகழ் காலகட்டம், நிறைவுறாத தொடர் நிகழ்வின் செயல் … (இது) தெளிவானது என்பது

விசுவாசியின் இரட்சிப்பு என்பது முடிவுற்ற சத்தியம் மற்றும் செயல்பட்டுக்கொண்டிருக்கிற நிகழ்வு, மற்றும் எதிர்காலத்திற்கான வாக்குத்தத்தம்" (Girdwood and Verkruyse, 315). [35]Stuart, 461. [36]Hughes, 403. [37]Long, 104. [38]Bruce 243-ல் இந்தத் தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. [39]Girdwood and Verkruyse 277-ல் இருந்து குறிப்பிடப்பட்டுள்ளது. [40]Paul Ellingworth and Eugene Albert Nida, *A Translator's Handbook on the Epistle to the Hebrews*, Helps for Translators (New York: United Bible Societies, 1983), 228.

[41]Guthrie, 211. [42]உணர்வுகள் என்பது விசுவாசத்தினால் வழிநடத்தப்பட வேண்டும் சுற்றியுள்ள சூழ்நிலைகளால் அல்ல. [43]Lightfoot, *Jesus Christ Today*, 188. [44]Hughes, 407. [45]James T. Draper, Jr., *Hebrews, the Life That Pleases God* (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1976), 269-70. [46]கிரேக்க இலக்கிய சக்தியின் ஒரு கட்டடையான கூற்று. (Girdwood and Verkruyse, 319). [47]Hughes, 405. [48]Reese, 177. [49]Bruce, 250-51. மோசஸ் ஸ்ட்ராட் சொன்னார், "அடிப்படைக் கடமையான கிறிஸ்தவ ஞானஸ்நானத்தில் தண்ணீர் பயன்பாடு சாதாரணமான மேலான கருத்தாக எனக்குத் தோன்றுகிறது" (Stuart, 467). [50]Guthrie, 214.

[51]பெரும்பான்மையான உரையாசிரியர்கள் ஞானஸ்நானத்தின் மேம்பாட்டான கருத்தை வழங்கினர். சந்தேகப்படுகிறவர்கள் மத்தியில், சுத்தமான தண்ணீர் தேவ ஆவியானவரைக் குறிப்பதாக என்று உணர்ந்தவர் கால்வின். (Reese, 178, என். 34.) [52]Lightfoot, *Jesus Christ Today*, 190. [53]Hawthorne, 1525. [54]தண்ணீர் என்பது. பரிசுத்தம் என்று விவரிக்கப்படுகிறது, "காரணம் ஞானஸ்நானத்தில் தேவனுடனான ஒருவருடைய உறவு சுத்தமானதாக இருக்கிறது" (Allen, 112). [55]KJV 1611-ல் பிரசுரம் ஆனதிலிருந்து புரோவோக் என்பதன் அர்த்தம் மாறியுள்ளது. அந்தக் காலத்தில், பரோவோக் என்பதன் அர்த்தம் செயல்பட தூண்டு என்பதாகும். (Reese, 179, no. 45.) [56]Bruce, 253. [57]Wuest, 182. "யூத ஜெபாலயத்துடன் கிறிஸ்தவர்களுக்கு தொடர்பு உண்டு, ஆனால் கூடுகை என்று அர்த்தம் கொள்ளும் வார்த்தையை சாதாரணமாக மற்றும் இந்த உச்சத்திற்கு ஆதாரமான கருத்து எடுத்து செல்வதில் நம்மை நியாயப்படுத்தும்விதமாக ஆசிரியரின் மொழியில் அப்படி ஒன்றும் இல்லை என்பதை அவர் சேர்த்ததாக எபிரெய ஆசிரியர் பேசுவதாக" வில்லியம் மான்சன் சொன்னார் (William Manson, *The Epistle to the Hebrews* [London: Hodder and Stoughton, 1951], 69). [58]புதிய ஏற்பாட்டில் வேறு சம்பவங்கள் என்பது 2 தெசலோனிக்கேயர் 2:1-ல் குறிப்பாக கர்த்தருடைய வருகையும் மற்றும் "நாம் அவருக்காக ஒன்றுகூடுவதும்" ஆகும். இவ்வாறாக கூடுவதற்கு "ஜெபாலயம்" போன்று ஒரு கூடும் இடம் தேவையில்லை. [59]Stuart, 469. [60]Lightfoot, Everyone's Guide to Hebrews, 142. இந்தப் பக்கத்தில் இம்மாதிரியான பாவம் குறைந்தது சுமத்தப்பட்ட எல்லாவற்றையும் பெறுகிறது. (Simon J. Kistemaker, *Exposition of the Epistle to the Hebrews*, New Testament Commentary [Grand Rapids, Mich.: Baker Book House, 1984], 293.)

[61]10:26-ல் சொல்லப்பட்டுள்ள அறிவு என்பது மிகவும் தனிப்பட்டதும் மற்றும் உள்ளார்ந்ததாக அறிவைக் குறிக்கிறது. (Franz Delitzsch, *Commentary on the Epistle to the Hebrews*, trans. Thomas L. Kingsbury [Edinburgh: T. & T. Clark, 1868; reprint, Minneapolis: Klock & Klock Christian Publishers, 1978], 2:184-85.) It means "*recognition, acknowledgment*." அதன் அர்த்தம் அங்கிகரித்து ஏற்றுக்கொள்ளுதல் (Kistemaker, 297). கவனத்தில் கொள்ளப்பட்ட நபர் உண்மையாக மனந்திரும்பியவர் என்பதை முக்கயத்துவப்படுத்துவது ஆகும். [62]Guthrie, 217. இங்கே அறிவு என்ற வார்த்தைக்கு (ἐπίγνωσις, *எபிக்னோசிஸ்*), இது இந்த நிருபத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. [63]Draper, 277. [64]கிஸ்டிமேக்கர் சொன்னார், "இயேசு அழைத்த பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவத்தையே இவரும் குறிப்பிடுகிறார் (மத். 12:32; மாற்கு 3:29)." [65]ISV மொழிபெயர்ப்பு வேதாகமம் சொல்கிறது "தொடர்ந்து பாவம் செய்வதை தெரிந்தெடு," த நியுவர் இங்லிஷ் ஸ்டான்டர்டு வெர்சன் சொல்கிறது "துணிகரமாக தொடர்ந்து பாவம் செய்." [66]R. C. H. Lenski, *The Interpretation of the Epistle to the Hebrews and of the Epistle of James* (Columbus, Ohio: Wartburg Press, 1946), 359-60. கிரேக்க மொழியில் உணர் வெளிப்பாடு ஐந்து முறை காணப்படுகிறது: மத்தேயு 5:13; 7:6; லூக்கா 8:5; 12:1; எபிரெயர் 10:29. பழைய ஏற்பாட்டில் பல வகைகள் காணப்படுகின்றன 2 இராஜாக்கள் 9:33; ஏசாயா 26:6; தானியேல் 8:10; மீகா 7:10; மற்றும் மல்கியா 4:3. [67]Guthrie, 219.

[68]Hughes, 424. [69]இது பரிசுத்தமாக்கப்பட்டவர்களின் அப்போஸ்தலத்துவம். இயேசு பாவம் செய்யாதவராக இருக்கிறபடியால், அவருக்கு எப்படி பரிசுத்தப்படுத்துதல் தேவைப்படும்? அவருடைய ஊழியத்திற்காக வேறுபிரிக்கப்பட்டவர் என்ற கோணத்தில் அவர் பரிசுத்தமாக்கப்பட்டார் (யோவான் 17:19), ஆனால் அவருடைய சொந்த இரத்தத்தினால் அவர் பரிசுத்தமாக்கப்பட வேண்டிய அவசியமில்லை. (Reese, 184, என். 70.) [70]Hughes, 423.

[71]NEB மற்றும் ESV மற்றும் JB ஆகியவைகளில் இம்மாதிரியான வாக்கியம் பயன்படுத்தப்பட்டுள்ளது, மற்றும் ஜெபி. மெக்கார்டு "கிருபையின் ஆவியை பரியாசம்பண்ணுதல்" (ἐνυβρίζω, *எனுபிரிசோ*) என்னும் வார்த்தை புதிய ஏற்பாட்டில் வேறு எங்கும் பயன்படுத்தப்படவில்லை. (Hugo McCord, *McCord's New Testament of the Everlasting Gospel* [Henderson, Tenn.: Freed-Hardeman College, 1988], 430.) [72]Lenski, 359. [73]இந்தப் பாவமானது பரிசுத்த ஆவிக்கு விரோதமாக செய்யும் பாவத்திற்கு இணையானது. (Bruce, 259-60; Kistemaker, 295.) பிசாசினால் இயேசு அற்புதங்களை செய்கிறார் என்று அவரை விசுவாசியாதவர்கள் கூறிய போது ஆவியை பரியாசம்பண்ண வேண்டாம் என இயேசு எச்சரித்தார். தேவனுடைய இறுதியாக வழங்கப்படும் இரட்சிப்பை ஆவியானவர் வழங்கினார், எனவே அவர் வழங்குவதை எவராவது நிராகரித்தால், அவருடைய ஆத்துமாவிற்கு நம்பிக்கை இல்லை. [74]Lightfoot, *Jesus Christ Today*, 195, n. 13; Hughes, 425, n. 22. சபையில் இது பொதுவாக பழமொழிச் சொல்லாக இருப்பதாக கிஸ்டிமேக்கர் கணிக்கிறார். (Kistemaker, 296.) [75]"ஜீவனுள்ள தேவன்" என்ற பதம் வேறு மூன்று இடங்களில் காணப்படுகிறது எபிரெயர் 3:12, 9:14, மற்றும் 12:22. தங்களுடைய ஒரே தேவன் மட்டுமே "ஜீவனுள்ள தேவன்" என்று யூதர்கள் அறிந்திருந்தனர். [76]Theodore H. Robinson, *The Epistle to the Hebrews* (New York: Harper and Brothers Publishers, 1933), 151. [77]Milligan, 376-77. "அசலில் சொல்லப்படுகிறது தனது உண்மையினால் நீதிமான் பிழைப்பான்" (Brooke Foss Westcott, *The Epistle to the Hebrews: The Greek Text with Notes and Essays* [London: Macmillan & Co., 1889; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1973], 337). [78]Ray C. Stedman, *Hebrews*, The IVP New Testament Commentary Series (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 115, n. [79]Bruce, 256. [80]Josephus Wars 2.19.7. எருசலேமிற்கு விரோதமாக செஸ்டியஸ் கொண்டுவந்த வாதம், ஜோசிபஸ் இந்த விளக்கத்தை கொடுத்தார்: "அவரிடம் [செஸ்டியஸ்] கொண்டிருந்தது, ஆனால் கொஞ்சம் நீண்ட காலமாக முற்றுகையிட்டிருந்தார், அவர் பட்டணத்தை உறுதியாக எடுத்துக்கொண்டார், தேவன் பட்டணத்திலும், அவருடைய சந்நிதானத்திலும் இருந்தார், சண்டையை அந்த நாளில் நிறுத்தப்படுவதற்கு தடையாய் அவர் இருந்தார், ஆகையால் வெறுப்புடன் சத்தியம்பண்ணினார் என்று நான் கருதுகிறேன்," (2.19.6).

[81]Eusebius *Ecclesiastical History*, 3.5. [82] Lightfoot, *Everyone's Guide to Hebrews*, 128-29-ல் இருந்து குறிப்பிடப்பட்டுள்ளது. [83]Raymond Brown, *The Message of Hebrews: Christ Above All*, The Bible Speaks Today (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1982), 176. [84]Guthrie, 209. [85]Westcott, 316. [86]இயேசு கிறிஸ்துவுக்குள்ளும் மற்றும் அவருடைய மரணத்திலும் ஞானஸ்நானம் பெறும் போதனை வடிவத்திற்கு (டுபொஸ்) கீழ்ப்படிதல் மற்றும் அவருடைய மரணத்தில் (ரோமர் 6:3, 4). நாம் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும்போது, அதனுடைய போதனையின் வடிவத்தைப் பின்பற்றுகிறவர்களாக இருக்கிறோம். [87]செயல்வினைச் சொல் ἀγαπάω (*அகபாவோ*) இரண்டு இடங்களில் காணப்படுகிறது 1:9 மற்றும் 12:6. [88]Jonathan Kozol, *Amazing Grace: The Lives of Children and the Conscience of a Nation* (New York: HarperCollins Publishers, 1995), 238. [89]1 கொரிந்தியர் 12:13 தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிப்பிடுவது, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் குறிப்பிடுவதாக இல்லை. பின்பும் அப்படி இருக்குமானால், இந்த வழியாக ஒவ்வொருவரும் ஆவியானவரைப் பெற்றிருப்பர். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் அப்போஸ்தலர்களுக்கு வாக்குக் கொடுக்கப்பட்டுள்ளது (அப். 1:6-8), அது அவர்களால் மட்டுமே பெறப்பட்டது (அப். 2:1-4). முதல் புறஜாதிகள் மனந்திரும்பும்போது அதேபோன்று ஆவியைப் பெற்று அந்நியபாஷையைப் பேசினர் (அப். 10:43-47; 11:15, 16), ஆனால் அப்போஸ்தலர் அற்புதங்கள் செய்யும் வல்லமையைப் பெற்றதுபோல், அவர்கள் பெறவில்லை (காண்க 2 கொரி. 12:12). கொர்நலியு மற்றும்

அவனுடைய குடும்பத்தார் “ஞானஸ்நானம்” பெற்றபோது அனைவரும் “பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்” பெற்றதாக கருத்து இல்லை. புறஜாதிகளை தேவன் ஏற்றுக்கொண்டார் என்பதை யூத கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொள்ள இந்த அற்புதம் அவசியமாகிறது. [90]தேவனுடைய மெய்யான தீர்க்கதரிசிகளிடமிருந்து வந்த சத்தியத்தின் எல்லா வடிவங்களையும் ஆகாப் நிராகரித்தபடியால், அவன் பொய்யை நம்பும்படிக்கு தேவன் அனுமதித்திருந்தாலும்கூட (1 இராஜா. 22:13-28), தேவன் பொய் சொல்லவில்லை (எபி. 6:18). 2 தெசலோனிக்கேயர் 2:9-12-ன் சத்தியத்தை ஆகாபின் வாழ்க்கை மிகவும் பலமாக விளக்குகிறது, ஏமாற்றத்தின் தாக்கங்களால் சத்தியத்தை நேசிக்காதவர்களுக்கு, இவற்றை தேவன் அனுமதிக்கிறார்.

[91]Allen, 114-15. [92]Adapted from Long, 110.